Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 05
இருவாராந்திர சர்வதேச மின் செய்தித்தாள்
யூலை 15 2021

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான
கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது...

STRUCTURAL GENOCIDE AGAINST TAMILS
CONTINUES IN SRILANKA

# கறுப்பு யூலை

# BLACK JULY

## 1983 GENOCIDE



The terrorism caused by the
Sri Lankan State killed more than 3000
Tami civilians within 10 days.
Many pieces of
Tamil history were lost,
more than 150,000 homeless and
all of this was caused by
Sinhala Mobs who were backed by the
Sri Lankan Government.



"It is a Systematic Genocide going on in Sri Lanka. We can't tolerate it or we can't be a Silent Spectator"
Indra Gandhi
Prime Minister of India
July -1983


தங்கத்துரை


குட்டிமணி


ஜெகன்

Mr. Thangathuraai, Mr. Kuttimani & Mr. Jegan were among the 53 tamil political prisoners brutally murdered under government custody in a maximum security prison

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்" "The Thirst Of Tamil Is Tamil Eelam"

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
• Purchasing a Residential Property
• Selling a Residential Property
• Residential Mortgage Refinancing
• Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும் Sri Lanka, India, Germany போன்ற நாடுகளில் தையல் கலையில் பிரபலமான புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING PROFESSIONAL STEAM
CAR & VAN உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், விட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way! Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment), Spagyric Alchemist (CAN) Alchemist (IND), Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங் & ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in Jewellery Making & Tailoring Classes Available
ONLINE CLASSES AVAILABLE
உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின்
மேற்பார்வையில் தையல் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு $100 மட்டும்
Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
சாரா தையல் பயிற்சி நிலைய ஆசிரியர் திருமதி சரஸ்வதி பாஸ்கரா
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
• All General Home Repairs
• Basement Renovation
• Carpet Installation
• Drywall Installation
• Hardwood Flooring Installation
• Washroom Remodeling
• Kitchen Cabinets
• Kitchen Cabinets Installation
• Painting
• Plumbing
• Tiling
100%
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We' ve definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச
ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

## முக்கிய அறிவித்தல்

உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் இருவாராந்திர சர்வதேச மின் செய்தித்தாள்
ஊடக மக்களிடம் சென்று அடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள்
மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்
மற்றும் எழுத்தார்வம் மிக்க
வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம்,
சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம்
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்பு கொள்ளுங்கள்
437.345.4203

## தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து



எமது எதிரியையும் அவனது நோக்கத்தையும் இனங் கண்டு கொள்வது சுலபம்.
ஆனால் துரோகிகள் முகமூடி அணிந்து நடமாடுகிறார்கள்.
எதிரியின் கைப்பொம்மையாகச் செயற்படுகின்றார்கள்.
தமது சுயநலத்திற்காக சொந்த இனத்தையே காட்டிக்கொடுக்கத் தயங்காத
இந்த ஆபத்தான - பிற்போக்கு - சக்திகள் மீது,
எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.




# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி** (TP)
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**முகநூல்** (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# வரலாற்றைப் படைத்த வரலாற்றுத் தாக்குதல்

1983 யூலை 23ஆம் திகதி இரவு திருநெல்வேலியில் நடந்த வெற்றிகரமான தாக்குதலைப் பற்றி, அத்தாக்குதலில் பங்குவகித்த கேணல் கிட்டு அவர்கள் எழுதி 'களத்தில்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையை, இங்கே மறுபிரசுரம் செய்கின்றோம்.

1983 ஆம் ஆண்டு யூலை 23 ஆம் திகதி இரவு 11 மணியளவில், திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓர் வெள்ளை நிற 'டெலிக்கா வான்' வந்துகொண்டிருக்கிறது. 'வானை' செல்லக்கிளி செலுத்த, அவனை அடுத்து கையில் எஸ். எம். ஜியுடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறான் விக்ரர். அவனை அடுத்து நான் 'வானி'ன் பின் பகுதியில் தம்பி (தலைவர்) மற்றும் ஏனைய தோழர்கள்.

நாம் முன்பு திட்டமிட்டபடி 'வான்' தபால்பெட்டிச் சந்தியில் நிற்க, எல்லோரும் கீழே இறங்குகிறோம்.

'வான்' அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க, அயல்சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத் தொடங்க, விக்ரரும் செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களத்தில் உரக்கக் தொடங்க, வெளியே எட்டிப் பார்த்த தலைகளைக் காணவில்லை. வெளிச்சம் போட்ட இரு வீடுகளின் விளக்குகளும் அணைந்து விட்டன; யாரும் வெளிவரவில்லை. இராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்துவிட்டனர்.

முன்பு திட்டமிட்டபடி அப்பையா அண்ணை, விக்ரர், செல்லக்கிளி மூவரும் வெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ரரும் செல்லக்கிளியும் பிக்கானால் றோட்டிலே கிடங்கு வெட்டுகின்றனர், கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை.

வெடிமருந்து தயார்படுத்துகையில் வெடிமருந்தின் நச்சுத் தன்மையால் தலையிடிக்கும். என்னுடைய அனுபவப்படி தாங்க முடியாத தலையிடி. அதன்பின் கிடங்கு வெட்டி (இறுகப் போடப்பட்ட தார் றோட்டிலே கிடங்கு வெட்டுவது அவ்வளவு இலகுவானதல்ல), இவற்றையும் விட தாக்குதலின்போது சண்டையும் போட வேண்டும்.

எமது தகவலின்படி சுமார் நள்ளிரவு 12 மணியளவில், பலாலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு 'ட்ரக்' வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம் ஜீப்பில் 4 இராணுவத்தினரும் 'ட்ரக்'கில் 10 பேர் அளவிலும் வருவார்கள் எனத் தகவல். எனவே, யாழ். பல்கலைக்கழக பின்வீதி பலாலி றோட்டைச் சந்தியில் கண்ணிவெடி புதைத்து, இரண்டாவதாக வரும் வாகனத்தக்குக் கண்ணிவெடியால் தாக்க, முன்னால் வரும் வாகனத்தை சுட்டு மடக்குவது என்பது நாம் வகுத்த திட்டம். அதன்படி திருநெல்வேலிச் சந்தியில் ஒரு 'வோக்கி ரோக்கி' – அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும்.

விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையா அண்ணையும் கண்ணிவெடி தயார்படுத்திக்கொண்டிருக்கையில், மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து, தத்தமக்கு உரிய இடத்தைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது கண்ணிவெடியைப் புதைத்துக்கொண்டிருக்கையில் விக்ரர் விலகி, தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றான். சுவர் அவனைவிட உயரமாக இருக்க, பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காகத் தெருவில் தேடி சில பெரிய




கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு, அந்தச் சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையைச் சீர்படுத்திக் கொள்கிறான் துப்பாக்கியைத் தோளில் வைத்து இயக்கிப்பார்க்கும் விதங்களையும், துப்பாக்கியை இலகுவாக இயக்க முடியுமா என்பதையும் சரிபார்த்துக் கொள்கின்றான்.

> 'வான்' அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க, அயல்சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத்தொடங்க, விக்ரரும் செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களத்தில் உரத்துக் கதைத்தபடி றோட்டில் நடக்கத்தொடங்க, வெளியே எட்டிப்பார்த்த தலைகளைக் காணவில்லை.

தம்பி தபால்பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்துத் தாக்குதலுக்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில் 'வோக்கி' செல்லக்கிளியைக் கூப்பிடுகின்றது.

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாகத் தன் வேலையை முடித்துக் கொண்டு, மீதி வேலையை அப்பையா அண்ணையிடம் விட்டுவிட்டு, தனது நிலைக்குச் செல்லுகின்றான் அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல் வெடிக்கவைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது அப்போது கூட வேலை முடியவில்லை. விக்ரர், "அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது கெதியா மாறுங்கோ" என்று கத்த, அப்பையா அண்ணை வயர் ரோல்களுக்கு ரேப் சுத்திக்கொண்டிருக்கையில், 'வோக்கி' மீண்டும் அலறியது.

"அம்மான் நாங்கள் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் தான். முன்னுக்கு ஜீப் பின்னால் ட்ரக்" என்று அறிவித்தது. எனவே அம்மான் 'ட்ரக்' வண்டிக்கு கண்ணிவெடியால் தாக்க, முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கையில், வெளிச்சங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டுவிட்டு, பின்னால் வரும் 'ட்ரக்' வண்டியை கண்ணி வெடியால் தாக்கி, அதில் தப்புவர்களைச் சுடவதாக எமது திட்டம். 'ட்ரக்' வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களைச் சுடக் கூடியவாறு விக்ரர் நிற்கின்றான். விக்ரரையும் தாண்டுபவர்களைக் கவனிக்க, தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்துகொண்டிருந்தன. நான் எட்டிப் பார்த்தேன். முன்னால் இருவிளக்குடன் ஒரு வாகனம். அந்த விளக்குகளுக்கிடையிலான இடைவெளியைக் கொண்டு அது ஜீப் என்று புரிந்து கொண்டேன். அடுத்து 'ட்ரக்' மெல்ல வந்துகொண்டிருக்கின்றன.

நாம் ஜீப்பைத் தாக்குவதற்கு தயாராகிக்கொண்டு இருக்க, ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி கண்ணிவெடி வைத்த இடத்தை அண்மித்த போது, கண்ணிவெடி வெடிக்கவைக்கப்பட்டு விடுகிறது. எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்தது? சிந்திக்க நேரமில்லை. உண்மையில் ஜீப் வண்டியை விட்டு, பின்னால் வரும் 'ட்ரக்' வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம் இன்று வரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்கவைக்கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்கவைத்த செல்லக்கிளி அதை விளக்கவில்லை; சண்டை முடிந்த போது அவனை நாம் இழந்தவிட்டோம். சிந்திக்க நேரமில்லை. உடனே நானும் என்னோடு நின்றவர்களும் சுடத் தொடங்கினோம். ஜீப்பின் வெளிச்சம் அணையவில்லை; எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரியவில்லை. என்னுடைய ஜி 3யால் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். ஜீப்பின் விளக்கு உடைந்ததும், பின்னால் நின்ற 'ட்ரக்' கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு, அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.
ஜீப் வண்டி அவனைத் தாண்டும் போது விக்ரர் தன் தலையைச் சுவருக்கு உள்ளே இழுத்துக்கொண்டு நிற்கையில், மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடி வருவது தெரிய, அவனைக் குறிவைத்து விசையை அழுத்த, சில குண்டுகள் ஓடி வந்தவனின் உடலிலே பாய அவன் தூக்கி எறியப்படுகின்றான்; அப்படியே சுருண்டு விழுந்துவிட்டான். இன்னுமொருவன் ஓடிவர அவனை நோக்கிச் சுட, அவன் மீண்டும் ஓடிவர மீண்டும் சுட, குண்டகள் அவனை விழுத்தவில்லை; ஆனால் காயப்படுத்தின. ஆனாலும் அவன் காயத்துடன் பல்கலைக்கழக பின் வீதியால்

ஓடினான். விக்ரர் அவனை திரும்பச் சுட்டான் வானளாவ உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை; மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. எனவே தான் சரியாகச் சுடமுடியவில்லை. அவன் ஓடிவிட, ஜீப்புக்கு கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்தச் சுவாலையை மையமாகவைத்துச் சில வேட்டுகளைத் தீர்த்தான். பின்பு அது அடங்கிவிட்டது. மேலும் ஒரு சில உருவங்கள் தெரிய அவற்றை நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தன இத்துடன் 'ட்ரக்' கின் முன்புறத்திலிருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கிய தம்பியின் ஜி 3 இவர்களையும் நோக்கி முழங்குகிறது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால், தம்பிக்கு உதவிக்கு எவருமேயில்லை. நாம் எமது திட்டத்தின்படி ஜீப்பை முன்னே விட்டு, 'ட்ரக்' வண்டிக்கு கண்ணிவெடித் தாக்குதல் செய்வதாக இருந்தோம். அத் திட்டத்தின்படி தம்பியை மிகப் பின்னுக்கு

**இதேநேரம் தம்பி (தலைவர்) தனியே நிற்பதை உணர்ந்து, ரஞ்சனையும் இன்னொருபோராளியையும் 'தம்பியிடம் ஓடு'' என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர். ஆனால் ரஞ்சனும் சகபோராளியும் தம்பியைச் சென்றடைந்த போது, ட்ரக்கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும் தம்பியின் தனி ஒரு ஜி 3 ஓயவைத்துவிட்டது.**

'ட்ரக்கை' நோக்கித் திருப்பினான் - 'ட்ரக்'கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீளவரிசையாகச் சுட்டான்.

அப்போதுதான் சாரதி இறந்திருக்கவேண்டும். நாம் பின்பு பார்த்தபோது சாரதி தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து, வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன் நோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து, “பசீர் காக்கா” 'ரிப்பீடடரால்' ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். 'ரிப்பீட்டரில்' தோட்டாக்கள் முடியும் போது, அதை மாற்றித் திருப்பித் தாக்கும்படி சொல்லி உற்சாகமூட்டிக்கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்து அப்பையாண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் எஸ். எம். ஜியுடன்

ரினன் என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட இராணுவ பட்டிகள் அதை உறுதிப் படுத்தின.

இதேநேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து, ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் “தம்பியிடம் ஓடு” என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர்.

ஆனால் ரஞ்சனும் சகபோராளியும் தம்பியைச் சென்றடைந்தபோது, 'ட்ரக்' கிலிருந்து அனைத்து துப்பாக்கிகளையும், தம்பியின் தனி ஒரு ஜி 3 ஓயவைத்து விட்டது.

சாதாரணமாக எவரும் நம்புதற்கரிய இவ்வீரச்செயலை முடித்துவிட்டு அமைதியாக, வீட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழிருந்து, முடிந்த ரவைக்கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக் கொண்டிருந்தார் தம்பி.

நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்றுவிட்டது. விக்ரருக்கு விளங்கியது போடப்பட்ட குண்டுகள் முடிந்து விட்டது; குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரைவச்சட்டத்தை மாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை பின்னால் வந்த 'ட்ரக்' வண்டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். பெரிய வெளிச்சத்தையும் ஜீப் மேலே தூக்கி எறியப்பட்டதையும் கண்ட சாரதி தன்னை அறியாமலே 'பிரேக்கை' இறுக இழுத்தினான். ஏன், பிரேக் அழுத்தும் மிதிமீது ஏறிநின்றான் என்றே கூறலாம்.

'ட்ரக்' பிரேக் போட்டு நின்றதும் 'ட்ரக்' கின் பின்புறத்தில், இராணுவத்தினர் தம் துப்பாக்கியைத் தயாராக்கியவாறு இருக்கையிலிருந்து எழத்தொடங்கினர்.

தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டுமட்டும் சுவரின் மறைவிலே குந்தி இருந்த, இரு வாகனங்களம் அவரைத் தாண்டுகின்றன. சிறிதாக நமிர்ந்து பார்க்கையில் ஜீப்வண்டி கண்ணிவெடியை நெருங்கிக்கொண்டிருக்க, 'ட்ரக்' அவருக்கு சரியாக 20 யார் தூரத்தில் சென்றுகொண்டு இருக்கக் கண்ணிவெடி வெடித்தது. 'ட்ரக்' அவருக்கு மிகக்கிட்ட – கையில் எட்டிப்பிடிக்குமாப்போல் தூரத்தில் - பிரேக்போட்டதால் குலுங்கி நிற்க, எப்போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய ஜி 3 ஏ 3 வெடிக்கத் தொடங்கியது.

ஜி 3 ஏ 3 யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள், தாக்குதலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத் தொடங்கின.

சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட இத்திருப்பம். தம்பியை ஆபத்தின் உச்ச எல்லைக்குள் சிக்கவைத்துவிட்டது.

ஆனால் இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழு வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத்துரிதமாகவும் குறிதவறாமலும் துப்பாக்கியைக் கையாள்வதில் முதன்மையாளராகத் திகழும் தம்பியிடம், 'ட்ரக்' கில் வந்த 9 இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

'ட்ரக்' மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுடமுடிகிறது. வெடியின் அதிர்வில் தெருவிளக்குகள் அணைந்தவிட்ட போதிலும், மிக்க கிட்டேயிருப்பதால் ஒவ்வொருவராகக் குறிவைத்துச் சுட்டார். ஆனால் மிக அபாயகரமான நிலை அவருக்கு; இராணுவத்தினரைப் பொறுத்தவரை தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத் தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பிதான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால் - ஆற்றலால் - வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்தபோதிலும், இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் 'ட்ரக்' கிலிருந்து கீழே குதித்து சில்லுக்குள் புகுந்துகொண்டு, மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி




**விக்ரரும் புலேந்தியும் செல்லக்கிளி அம்மான் நின்ற கடையின்மேல் ஏறினர். “டேய் அம்மானுக்கு வெடிவிழுந்திட்டுது” என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது. எல்லோரும் அங்கே ஓட நான் 'வானை' எடுத்து வந்தேன்.**

வைத்திருந்தோம். ஆனால் இப்போ தனியாகவே 'ட்ரக்'கை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டுவிட்டார். இதேநேரம் ஜீப்பை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்த விக்ரர், தனக்கு 20 யார் பின்னே 'ட்ரக்' நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை

ஓடிவந்தான். “சுடு” என்ற அப்பையாண்ணை உடனே, “கவனம், எங்கட பெடியளோ தெரியாது. பார்த்துச் சுடு” என்றார். 'ரிப்பீட்டர்' சத்தம் ஓய, வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது எஸ். எம். ஜியை அப்பையாண்ணை ஓடிவந்து எடுத்துக் கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்கு தலைமைதாங்கிய லெப்

மதிலேறிக்குதித்த ரஞ்சனும் மற்றைய போராளியும் ஆயுதத்தோடு ஒரு நபர் இருப்பதைக்கண்டு, ஆயுதத்தைத் தயார்நிலைக்குக் கொண்டவந்து, “யாராது” என்றவாறு முன்னே வந்தனர்.

“அது நான்ராப்பா” என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி, “இங்கே எல்லாம் முடிந்தது; உங்கடை பக்கம் எப்படி?” என்றார். “அண்ணை எங்கடை பக்கம் பிரச்சினையில்லை” என்றார் ரஞ்சன்.

“இங்கையும் எல்லாம் முடிந்துவிட்டது. ஆனால் எனக்குச் சற்று முன்பாக எதிரேயிருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காணவில்லை. காயப்பட்டிட்டாங்களோ தெரியவில்லை. வா பார்ப்போம்” என்றவாறு, தன் பிரியத்திற்குரிய ஜி 3யைத் தூக்கிக் கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக் குதிப்பதற்கு முன், ரஞ்சனுடன் வந்த போராளி தம்பியின் அனுமதியைப் பெற்று, எதற்கும் முன்னெச்சரிக்கையாக ஓர் குண்டை வீசினான். குண்டு 'ட்ரக்'கின் கீழ் விழுந்து வெடித்து, எரிபொருள் தாங்கியை உடைத்தது.

இதன்பின் மதிலேறிக் குதித்து ரோட்டைத்தாண்டி, புலேந்திரன் சந்தோசத்தின் இடத்தையடைந்தான்; அங்கு புலோந்திரன், சந்தோசத்தைக் காணவில்லை. “எதற்கும் முதலில் இறந்தவர்களின் ஆயுதங்களைச் சேகரியுங்கள்” எனக் கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி ரோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன் தம்பியைபார்த்து, “அண்ணை அவன் அநுங்குகிறான்.” மீண்டும் ஒரு முறை முழங்கிய ஜி 3 அவனின் அநுங்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இதன்பின், 'ட்ரக்கை' நெருக்கி ஆயுதங்களைச் சேகரிக்கத் தொடங்கினர். தம்பி எதற்கும் என்று வெளியே கிடந்த இராணுவத்தினரின் தலையில் இறுதி அத்தியாயத்தை ஜி 3 ஆல் எழுதிவைத்தார். ஜி 3யின் வேகம் மண்டையோடுகளைப் பிளக்க வைதது.

இதேநேரம், பல்கலைக்கழக பின் வீதியால் ஓடிய ஓர் இராணுவ வீரனை இன்னோர் போராளி துரத்திச்சென்று சுட்டான். ஜீப்பை முற்றாக முடித்துவிட்டு, பொன்னம்மானும் நானும் என்னுடைய போராளிகளும் 'ட்ரக்' கை நோக்கி நடு ரோட்டால் ஓடினோம்.

“கரையால் வாருங்கள்” என்ற தம்பியின் குரல் எம்மை வரவேற்றது. எல்லோரும் தம்பியை சூழ்ந்துகொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்துகொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத் தொடங்கினோம்.

இதற்கிடையில் பொன்னம்மான் அதீத மகிழ்ச்சியுடன், இறந்து கிடந்த இராணுவத் தினரின் 'ஹெல்மெட்'டைத் தலையில் போட்டுக்கொண்டு, 'ட்ரக்'கின் கீழே இறந்துகிடந்த இராணுவ வீரர்களினது ஆயுதங்களைத் தேடி எடுத்துக்கொண்டான்.

இத் தாக்குதல் இரவுநேரமாதலால் எம்மையும் இராணுவத்தினரையும் வேறு பரிக்க நாம், 'ஹெல்மெட்'டைத்தான் குறியீடாகப் பாவித்தோம். 'ஹெல்மெட்'டுடன் ஓர் உருவம் நகர்வதைக்கண்ட தம்பி உடனடியாகத் துப்பாக்கியைத் தயார்நிலைக்குக் கொண்டு வந்து “யாரது” என்றுவினாவ அம்மான், “அதுநான் தம்பி” என்றவாறு தன் தவறை உணர்ந்து 'ஹெல்மெட்'டைக் கழற்றினார்.

பொன்னம்மானைச் செல்லமாகக் கண்டித்தவாறு எல்லாரையும் சரிபார்க்குமாறு தம்பிபணிக்க, “அம்மானைக் காணவில்லை” என்று, விக்ரர் கத்தினான். விக்ரரும் புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர். “டேய் அம்மானுக்கு வெடிவிழுந்திட்டுது” என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது; எல்லோரும் அங்கே ஓட நான் வானை எடுத்து வந்தேன்.

வானில் அம்மானை ஏற்றும்போது அம்மானின் உடல் குறிர்ந்துவிட்டது.

லிங்கம் இறுதியாக இராணுவத்தினரின் தலையில் போட், றெஜி ஆயுதங்களைப் பொறுக்கினான்.

வான் புறப்படத் தொடங்க, மழையும் மெதுவாகத் தன் கரங்களால் வாழ்த்துத் தெரிவித்தது எமக்கு. செல்லக்கிளி அம்மானின் சாவிற்காக இடியும் மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த, வான் எமது முகாம் நோக்கிப் பறக்கிறது.



## சிங்கள தலைநகரில் வான் வழியாக கரும்புலி தாக்குதல் நடாத்தி வீரச் சாவடைந்த கேணல் ரூபன் ‘தாக்குதலுக்கு முன்னதாக’ உலகத் தமிழர்களை நோக்கி எழுதிய மடலின் உணர்வின் வரிகள் ...!

“தமிழர்களின் குரலை உலகம் செவிமடுக்கும் இன்றைய கட்டத்தில், விடுதலைப் புலிகளும் தமிழர்களும் வேறு வேறு அல்ல் இது ஒரு மக்கள் போராட்டம் என்று இந்த உலகத்திற்கு எடுத்துக் கூறுங்கள்”

என அவர் உலகத் தமிழர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் தாக்குதல் நடத்திய வான் கரும்புலிகளில் ஒருவரான கேணல் ரூபன் தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் தமிழக மக்களுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தின் முழு விவரம் வருமாறு:

15.02.2009

தமிழீழம்.

எனது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தமிழக மக்களே மற்றும் புலம்பெயர் மக்களே!

மாவீரர்கள் மாவீரர்களாகப்போகின்ற நாங்கள் உங்களிற்கு தலைவணங்குகின்றோம்.

நீங்கள் எழுச்சிகொண்டு உங்களது உறவுகளாகிய எமது மக்களின் அழிவைக்கண்டு நடத்தும் போராட்டங்களைக் கேட்டு மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் அடைகின்றார்கள்.

‘ ஈகைத் தியாகி முத்துக்குமார் ‘ இட்ட தீ இன்று ஐ.நா வாசலில் கூட பரவியிருக்கின்றது. இப்பொழுது தான் தமிழரின் பிரச்சினை உலகத்தின் காதுகளில் விழத்தொடங்கியுள்ளது.

எனவே எமது தமிழினத்தின் விடிவிற்கு நீங்கள் செய்யும் தொடர்ச்சியான போராட்டங்கள் பலம் சேர்க்கும். தமிழகத்தில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். அப்போதுதான் மத்திய அரசின் உலகத்தின் ஐ.நாவின் காதுகளில் விழும்.

மனம் தளரவிடாதீர்கள். தொடர்ச்சியாக போராடுங்கள் தமிழ் மக்களிற்கு விடிவு வரும்.

புலம்பெயர் எமது உறவுகளே!

நீங்கள் செய்த உதவிகளால் தான் எமது போராட்டம் வளர்ச்சியடைந்து நின்றது. அதனை தொடர்ச்சியாக செய்யுங்கள். விடுதலைப் புலிகள் வேறு மக்கள் வேறல்ல. இது மக்கள் போராட்டம் என்று உலகத்திற்கு எடுத்துக் கூறுங்கள். தினம் தினம் உங்களது உறவுகள் இங்கே கொல்லப்படுகின்றார்கள். அதிலும் கொடுமை இறந்தவரைக் கூட எடுத்து அடக்கஞ் செய்யமுடியவில்லை.

மருந்தில்லை. உணவில்லை. உடையில்லை. உறையுளில்லை. எவ்வளவு கொடுமைகளை சிங்கள இராணுவம் அரசு செய்கின்றது. தமிழரை வவுனியா திறந்த சிறைச்சாலைக்கு வரவழைத்து தமிழினத்தை அழித்து சிங்கள இனத்தை உருவாக்கப்போகின்றது.

வன்னியிலே இருந்து உலக நிறுவனங்களையும் கடைசியாக செஞ்சிலுவைச் சங்கத்தையும் வெளியேற்றி எமது மக்களின் அவலம் வெளியே தெரியாவண்ணம் மூடிமறைக்க முயல்கின்றது.

விரைவிலே எமது மக்களிற்கு கொடிய நோய்கள் பரவப்போகின்றது. இவற்றை நீங்கள் உலகத்திற்கு தொடர்ச்சியாக போராடி எடுத்துக்கூறுங்கள். கேளுங்கள் தரப்படும் இல்லாவிட்டால் தட்டுங்கள் திறக்கப்படும்.

அன்புக்குரிய புலம்பெயர் வாழ் தமிழ்மக்களே!

உலகத்தில் வாழ்ந்த யூத இன மக்கள் எல்லோரும் சேர்ந்து தங்களுக்கென்று இஸ்ர வேல் என்றொரு நாட்டை உருவாக்கியது போல் நீங்கள் எல்லோரும் சேர்ந்து தமிழீழத்தை அமைக்க உருவாக்க தயாராகுங்கள்.

எமது மாவீரர்களின் கனவை நனவாக்குங்கள்.

அதேபோன்று வன்னி மக்களுக்கும் கேணல் ரூபன் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தின் முழு விவரம் வருமாறு:

15.02.2009

தமிழீழம்.

அன்புள்ள எனது தமிழீழ மக்களே குறிப்பாக வன்னியில் வாழும் மக்களே,

நீங்கள் அனுபவிக்கும் கொடும் வலி கண்டு எனது மனம் குமுறுகிறது, கலங்குகின்றது. எமது மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்றுதான் எமது தேசியத் தலைவர் போராட்டத்தைத் தொடங்கினார்.

அவ்வேளை நீங்கள் தான் அவரிற்கு உத்வேகம் கொடுத்து ஆதரித்து போராட்டத்திற்கு வலுச்சேர்த்து உங்கள் பிள்ளைகளை போராட்டத்தில் இணைத்து எமது அமைப்பை வளரச் செய்தீர்கள். நாம் காலங்காலமாக வாழ்ந்த மண்ணில் சுதந்திரமாக வாழத்தான் ஆசைப்பட்டோம். அது தவறா?

உலகத்தில் வாழும் மக்களில் எமது தமிழ் இன மக்களின் உயிர் உயிரில்லையா? எவ்வளவோ நாடுகள் சுதந்திரம் அடைந்ததற்கு காரணமாக இருந்த உலக நாடுகள் எமது தமிழினத்தை மட்டும் சிங்கள தேசம் அழிக்கவிட்டு வேடிக்கை பார்ப்பதன் காரணம் தான் எனக்குப் புரியவில்லை.

அன்புக்குரிய மக்களே!

எமக்காக தமிழகத்தில் இருக்கும் மக்களும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கும் மக்களும் உங்களின் விடிவிற்காக தீக்குளிப்புக்களிலும் பல வகையான அகிம்சைப் போராட்டங்களையும் நடத்தி வருவது உங்களிற்கு தெரிந்ததே. அவர்களால் வெளியே இருந்து செய்யக் கூடியதை செய்கின்றார்கள்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களை போராட்டத்தில் இணைத்து உங்கள் விடிவிற்கான இறுதிப்போரில் போராட வேண்டும். தேசியத் தலைவரின் கைகளைப் பலப்படுத்த வேண்டும்.

அன்புக்குரிய மக்களே!

எதிரியானவன் பல்வேறு சூழ்ச்சிகள் செய்து அதாவது படிப்படியாக உங்களை உங்களது இடங்களில் இருந்து இடம்பெயர வைத்து உணவுத் தடை, மருந்துத்தடை போட்டு உங்களின் மேல் குண்டுமழை பொழிந்து தினம் சாவுக்குள் வாழவைத்து, பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதற்குள் உங்களை விட்டு குண்டுமழை பொழிந்து உங்கள் உறவுகளை கொன்று உங்களை தனது திறந்த சிறைச்சாலைக்கு வரச்செய்கின்றான். ஏன் தெரியுமா?

யூத இனத்தை கிட்லர் பல வதைமுகாம்களை அமைத்து யூத இனத்தை அழித்ததுபோல் மகிந்தவும் உங்களை அழிக்கப்போகின்றான். அது தெரியாமல் நீங்கள் அதற்குள் அகப்படக் கூடாது. கோத்தபாய இராணுவத்திற்கு கூறியிருப்பது தெரியுமா? தமிழரில் பெண்கள் உங்களுக்கு ஆண்கள் கடலிற்கு என்று. அதனடிப்படையில் இங்கிருந்த எத்தனை பெண்கள் கற்பழிக்கப்பட்டு இராணுவ மருத்துவமனைகளில் இராணுவத்தை பராமரிப்பதற்கு விடப்பட்டுள்ளர்கள் என்று தெரியுமா. இதைவிட எவ்வளவோ கொடும் செயல்கள் வெளியே தெரியாவண்ணம் உள்ளது.

அன்புக்குரிய மக்களே!

எமக்கு இந்த இழிவுநிலை தேவையா? நிச்சயமாக இதை நீங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். ஏனென்றால் அதற்காக தான் நீங்கள் போராடி வருகின்றீர்கள்.

அதற்காக 24,000 மேற்பட்ட மாவீரர்களை அர்ப்பணித்திருக்கின்றீர்கள். இவர்கள் யார் போராளிகளாக பிறந்தவர்களா இல்லை. காலம் தான் போராளிகளாக்கியது. போராளிகள் பிறப்பதில்லை அவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். யார் உருவாக்கியது.

சிங்கள தேசம் எமக்குரியதை தந்திருந்தால் எமது தேசியத்தலைவர் ஆயுதமேந்த தேவை ஏற்பட்டிருக்காது.

அன்புக்குரிய மக்களே!

நாம் விரும்பியோ விரும்பாமலோ எம்மை போராட சிங்களதேசம் பணித்து விட்டது. 30 வருடங்களாக போராடி உங்களது இறுதி இலட்சியமாம் தமிழீழத்தை அடையும் நேரம் வந்திருக்கும் வேளை நீங்கள் போராட்டத்தை விடப்போகின்றீர்களா? உங்கள் விடிவிற்காக நீங்கள்தான் போராட வேண்டும்.

நீங்கள் போராடாவிட்டால் உங்களுக்காக யார் போராடுவது?

வன்னியில் இருக்கும் 250,000 பேரில் 50,000 பேர் போராட வலுவில்லாமலா இருக்கிறீர்கள்? சிந்தித்து பாருங்கள் 50,000 இளைஞர் யுவதிகள் போராட்டத்தில் இணைந்து போராடினால் சிங்கள இராணுவம் வந்த இடம் தெரியாமல் பறந்திடும்.

அன்புக்குரிய தம்பி, தங்கை அக்கா அண்ணா உறவுகளே!

போராட்டத்திற்கு வயதெல்லை கிடையாது வயது பார்த்தா இராணுவம் உங்களை கொல்கின்றது. 1990 ஆம் ஆண்டு 14 வயதில் நான் போராட புறப்பட்டேன். காரணம் இடப்பெயர்வு பாடசாலை இல்லை. நாம் நிம்மதியாக வாழ எமக்கென்று ஒரு தேசம் வேண்டுமென்பதால் நீங்களும் அதே போல்தான் நினைப்பீர்கள்.

உங்களது வலியை நேரில் தினம் தினம் கண்டு மனம் வெதும்பி குமுறுவதுபோல் இன்னொன்றையும் நினைத்து குமுறுகிறது. நீங்கள் தாங்குகின்ற வலியை உங்களது வயதில் நான் தாங்கவில்லை அப்படியிருந்தும் என்னைப் போராட உந்தியது.

ஆனால் நீங்கள் எவ்வளவோ வலியை ஏற்படுத்திய சிங்கள இராணுவத்திற்கு எதிராக போராட ஏன் இன்னும் கிளர்ந்தெழாமல் இருக்கின்றீர்கள் என்பதை நினைக்க நினைக்க மனம் வெதும்புகின்றது.

சிங்கள இராணுவம் ஏற்படுத்திய வலி காணாதா? இன்னும் வலியை ஏற்படுத்தினால் தான் நீங்கள் போராடுவீங்களா?

அன்புக்குரிய மக்களே!

எமது தேசியத் தலைவர் காலத்தில் நீங்கள் சுதந்திரம் அடையாவிட்டால் ஒரு காலமும் நீங்கள் சுதந்திரமாக வாழமாட்டீர்கள் என்பதை தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். தமிழீழ தேசியத் தலைவர் கூறியது போல் ‘ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சி கொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டமாக- தேசியப் போராட்டமாக முழுமையும் முதிர்ச்சியும் பெறுகின்றது. அப்பொழுதுதான் விடுதலையும் சாத்தியமாகின்றது.’

‘கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்’ கேட்டோம் தந்தார்களா? இல்லை என்னத்தை தந்தார்கள் தாங்கொணா வலியை தந்தார்கள். அதன்பின்னர் என்னசெய்ய வேண்டும் தட்டுங்கள் நிச்சியமாக திறக்கப்படும்.

அன்புக்குரிய மக்களே!

எல்லோரும் சேர்ந்து ஆயுதம் ஏந்தி விசைவில்லை தட்டுங்கள் நிச்சியமாக சுதந்திரம் கிடைக்கும்.

அன்புக்குரிய மக்களே!

தமிழரிற்கு இருந்த போர்க்குணம் குன்றிவிட்டதா இல்லை. அதை நீங்கள் இன்னும் வெளிக்காட்டவில்லை. அந்தத் தருணம் வந்துவிட்டது. நான் யார்? நாங்கள் யார்? உங்களது பிள்ளைகள் நீங்கள் வளர்த்துவிட்டவர்கள் நாங்கள் வெளிநாடுகளில் இருந்து வந்து போராடவில்லை.

எனவே அன்புக்குரிய தாய்மாரே! தந்தைமாரே!

எனது குடும்பத்தில் ஒரு மாவீரர் எனது குடும்பத்தில் இரு மாவீரர் என பார்க்காதீர்கள். போராட வலுவுள்ள உங்களது பிள்ளைகளை நீங்கள்தான் அனுப்பி வைக்க வேண்டும். அப்பொழுதுதான் இளம் சந்ததிக்கு சுதந்திரமான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கலாம். எமக்கென்று ஒரு தேசிய இராணுவத்தை கட்டி எழுப்புங்கள். இந்தப் பூமிப்பந்திலே இருப்பை, பலம் தான் தீர்மானிக்கின்றது.

வலிந்தவன் பிழைப்பான் என்ற தத்துவத்திற்கேற்ப எல்லோரும் சேர்ந்து தேசியத் தலைவரின் கையை பலப்படுத்துங்கள். எம்மிடம் தேவையான ஆயுதம் உள்ளது. மிகுதி எதிரியிடம் உள்ளது. எமக்கு தேவையானது எல்லாம் ஆளணி ஒன்றுதான்.

பல மடங்கு கொண்ட ஆளணியையும் உலக நாடுகள் வழங்கும் இராணுவ தளபாடங்களையும் கொண்டுள்ள சிங்கள இராணுவத்திற்கு எதிராக குறைந்த ஆளணியை வைத்து இரண்டு வருடத்திற்கு மேலாக நாம் போராடுகின்றோம் என்றால் யாரிற்கு வெற்றி நீங்கள் நினைத்துப்பார்த்தீர்களா?

நாங்கள் அழிவது போல் சிங்கள தேசமும் அழிந்துகொண்டுதான் இருக்கின்றது பொருளாதாரத்தில், இந்தத் தருணம் நீங்கள் திரண்டெழுந்து ஓங்கி ஒரு அடி அடித்தால் எழும்ப முடியாமல் சிங்களம் நொருங்கும்.

அன்புக்குரிய இளைஞர் யுவதிகளே!

உங்களிற்கு உங்களது (14ஆம் பக்கம்)

# தமிழீழ செய்திகள்




## தமிழ் மன்னன் அக்கிராசனை அஞ்சலிக்க தடை மாலைகளை பிடுங்கி வீசிய பாதுகாப்பு தரப்பு



தமிழ் மன்னன் அக்கிராசனை அஞ்சலிக்க தடை: மாலைகளை பிடுங்கி வீசிய பாதுகாப்பு தரப்பு.

கிளிநொச்சி அக்கராயனை ஆண்ட குறுநில மன்னன் அக்கிராசனுக்கு வணக்கம் செலுத்த முற்பட்டவர்களிடம் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் மாலையை பறித்தெறிந்த சம்பவத்தால் அக்கராயனில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

13ஆம் நூற்றாண்டில் அக்கராயன் பிரதேசத்தை ஆட்சி செய்த அக்கிராசன் என்ற குறுநில மன்னனுக்கு 2018 ஆம் ஆண்டு ஜூலை 05ஆம் திகதியாகிய இதே நாள் சிலை திறந்து வைக்கப்பட்டது.

சிலை திறக்கப்பட்ட நாளில் மன்னனுக்கு வணக்கம் செலுத்துவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கரைச்சி பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் கிராமத்து மக்கள் எனப் பலரும் அங்கு பிரச்சனமாகியிருந்தனர்.

இன்றைய நாள் விடுதலைப்புலிகளின் கரும்புலிகளின் நினைவு நாள் என்பதால் நினைவு வணக்கம் செலுத்தவேண்டாம் என்று பொலிஸார் உட்பட்ட படைத்தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்

இருந்தபோதிலும் அதனையும் மீறி வணக்கம் செலுத்த முற்பட்டபோது அங்கு நின்றவர்கள் வைத்திருந்த மாலை மற்றும் மலர்களை படைத்தரப்பினர் பறித்து வீசியதாக தெரியவருகிறது.

கிளிநொச்சி அக்கராயன் அம்பலப்பெருமாள் சந்தியிலேயே இந்த சிலை நிறுவப்பட்டுள்ளது.

## யாழ்.தீவு பகுதிகளை நோக்கி சீனா, பாகிஸ்தான் நிறுவனங்கள் அகலக்கால் வைக்கின்றன

யூலை 07



யாழ்.தீவு பகுதிகளை நோக்கி சீனா, பாகிஸ்தான் நிறுவனங்கள் அகலக்கால் வைக்கின்றன. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தமிழ் மக்களை பெரும் இன்னலுக்கு ஆளாக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் எவ்வளவு பிரச்சனைகளென்றாலும், தமது தொப்புள் கொடி உறவான இந்தியாவுடன்தான் நிற்பார்கள். இந்தியாவிற்கு எதிரான உங்கள் நடவடிக்கைகளை நிறுத்தி, நாட்டில் நல்ல நிலைமையை ஏற்படுத்துங்கள் என நாடாளுமன்றத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த பாகிஸ்தான் தூதர் மண்டைதீவில்தான் தங்கியிருந்துள்ளார். மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதிகளை பார்வையிட்டுள்ளார். இது எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவிற்கு அண்மையிலுள்ள அல்லைப்பிட்டியில் பாகிஸ்தான் நிறுவனமொன்று ஹொட்டல் கட்ட முயன்ற போது, அது தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இப்படியான புதிய முயற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதா? நெடுந்தீவில் 40 ஏக்கர் காணி வீதம் இரண்டு தனி நபர்களிற்கு வழங்கப்படவுள்ளது.

இது சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட போகிறது. அது போல, யாழ்ப்பாணம் பழைய கச்சேரி கட்டிடத்தையும் சீன நிறுவனத்திற்கு வழங்கும் முயற்சிகள் நடக்கிறது என்றார்.

## நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு வருவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும் ஆலய அறங்காவல் சபை



யூலை 03, கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நயினாதீவு நாகபூ சணி அம்மன் ஆலயத்திற்கு வருகை தருவதனை பக்தர்கள் தவிர்த் துக்கொள்ள வேண்டுமென ஆலய அறங்காவலர் சபையினர் கோரியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஆலய அறங்காவலர் சபையினர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, 'நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன.

எனினும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அபிசேகங்கள், அடியவர்களின் நேர்த்திகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அவை மீள ஆரம்பிப்பது தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

ஆகவே பக்தர்கள் அனைவரும் தற்போதைய சூழ நிலையை கருத்திற்கொண்டு ஆலயத்திற்கு வருகை தருவதனை தவிர்த்து, உங்கள் வீடுகளில் இருந்தவாறு அம்பாளை வேண்டிக்கொள்ளுங்கள்' என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## திருகோணமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது



தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனை போற்றி முகநூலில் கருத்து வெளியிட்டிருந்த திருகோணமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பயங்கரவாத சட்டத்தின் கீழ் காவல்துறை குற்றப்பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை காவல்துறைப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டிச் சாரதியாக கடமையாற்றும் 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட காவல்துறைப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோகண,

"தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையிலான பதிவுகளை இட்டிருப்பதாலும் பயங்கரவாத தடைச்சட்டம், அரசியல், சிவில் உரிமைக்கான சர்வதேச சட்டம் என்பவற்றின் கீழ் குற்றமாக கருதப்படுகின்றது" என்றார்.

மேலும் குறித்த இளைஞனிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியாகிய "மேதகு" திரைப்படம் தொடர்பான பதிவை முகநூலில் பகிர்ந்தமைக்காகவே குறித்த இளைஞன் கைது செய்யப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும் மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# கோத்தாபாய கடற்படை முகாமிற்காக தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்க முயற்சி போராட்டம் வெடிக்கும், எச்சரிக்கிறார் – ரவிகரன



யூலை 11

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை அங்கு நிலைகொண்டிருக்கும் கோத்தாபாய கடற்படை முகாமிற்காக அபகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு தமிழ் மக்களின் காணிகளை கடற்படை முகாமிற்காக அபகரித்தால், மக்களோடு இணைந்து எதிர்ப்பு ஆற்பாட்டத்தில் இறங்குவோம் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு, வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள குறித்த தமிழ் மக்களுக்குரிய 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை கடந்த 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றிற்கு அமைவாக, கடற்படையினருக்கு அபகரிப்புச் செய்வதற்கு ஏற்கனவே கடந்த 2018ஆம் ஆண்டிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இருப்பினும் அப்போது இந்த அபகரிப்பு முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணிகளுக்குரிய தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிகளும் எதிர்ப்பு ஆற்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர். அதனடிப்படையில் அப்போது அந்த ஆக்கிரமிப்பு முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

அதேவேளை அவ்வாறு ஆற்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் அவர்கள் மற்றும், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் உள்ளிட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டதுடன், அது தொடர்பான வழக்குவிசாரணைகள் மூன்று வருடங்களைக் கடந்து தற்போதும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா. நவஜீவன் 08.07.2021 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் மீண்டும் காணிகளை அளவீடு செய்து கடற்படைக்கு அபகரிக்க இருப்பதாக காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கு அறிவித்தல் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

இந்த ஆக்கிரமிப்பு முயற்சிதொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு - கரைத்துறைபற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வட்டுவாகல் மற்றும்முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதிகளிலுள்ள 271.6249ஹெக்டெயர் விஸ்தீரனமுடைய காணிகள்.காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருப்பதாக வர்த்தமானி மூலம் அறிவிப்பொன்று வெளியாகியிருந்து.

குறிப்பாக கடந்த 2017ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதியன்று வெளியான 2030/44ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம், அப்போது காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சராக இருந்த கஜந்த கருணாதிலக இவ்வறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கோத்தபாய கடற்படை முகாம் அமைந்துள்ள, குறித்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அளவீடுசெய்து, அவற்றை கடற்படையினருக்கு வழங்குவதற்கான தீவிர முயற்சிகள் பலமுறை இடம்பெற்றிருந்தன.

இவ்வாறாக கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதிஅன்றும், கோத்தபாய கடற்படை முகாம் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்து அபகரிக்கும் முயற்சி ஒன்று இடம்பெற்றிருந்தது.

இந்த அளவீட்டு முயற்சிக்கு எதிராக குறித்த காணிகளுக்குரிய தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகளுமாக இணைந்து ஆற்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தோம்.

நமது ஆற்பாட்டத்தின் பலனாக அந்த அளவீட்டு முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

அதேவேளை இவ்வாறு ஆற்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக நான் மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் வட்டுவாகல் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் அன்னலிங்கம் சண்முகலிங்கம், இலங்கைத்தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அன்ரனிஜெயநாதன் பீற்றர்இளஞ்செளியன் உள்ளிட்ட நால்வரும் போலீசாரால் கைதுசெய்யப்பட்டுமிருந்தோம். மூன்று வருடங்களைக்கடந்தும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் இது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் தற்போதும் இடம்பெற்றுவருகின்றன.

இந் நிலையில் முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவ ஜீவன், 08.07.2021 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றினை காணி உரிமையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்திலே குறிப்பிடப்பட்டிருப்பதாவது, கடந்த 2021.05.12ஆம் திகதியன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மற்றும் கரைதுரைப்பற்று பிரதேசெயலாளர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த நில அளவையானது காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 450) 05 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம், நில அளவை நாயகத்தால் அளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவின் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் அமைந்துள்ள காணியினை பிரதான கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் பொருட்டு நிலஅளவை செய்வதற்காக 2021.07.29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வருகை தந்து தங்கள் காணிகளின் எல்லைகளையும் விபரங்களையும் இனங்காட்டுப்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் எனக்குறித்த கடித்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தங்களினது காணியினை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் ஆவணத்தின் பிரதி ஒன்றையும் எடுத்துவரும்படியும், குறித்த கடிதத்தின் மூலம் காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பினை ஒருபோது ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன் எனில் அந்தக் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தமது காணிகளை அளவீடுசெய்து கடற்படைக்கு வழங்குவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அங்கு தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் அமைக்கப்பட்டுள்ள கடற்படைத் தளம் அங்கிருந்து அகற்றப்படவேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்களின் காணிகளில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கோத்தாபாய கடற்படை முகாமினால், தமிழ் மக்கள் பலரும் குடியிருக்கவே காணிகளின்றி அவதிப்படுகின்றனர்.

அத்தோடு தமிழ் மக்கள் பலருக்கு அங்கு வாழ்வாதார பயிற்செய்கை நிலங்கள் காணப்படுகின்றன. இதனால் பலர் தமது வாழ்வாதாரத்தினை இழந்து வாடுகின்றனர்.

இதனைவிட இந்த கோத்தாபாய கடற்படை முகாம், அங்குள்ள மீனவமக்கள் பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த அரசிச்சல் எனப்படுகின்ற ஒரு பிரதான வீதியையும் ஆக்கிரமித்துள்ளது.

இவ்வாறு அரிச்சல்பாதை மூடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், அதற்கு அடுத்துள்ள படகு இறங்குதுறை, கரவலைப்பாடு என்பவற்றினை அங்குள்ள மீனவ மக்கள் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை கோத்தாபாய கடற்படை முகாம் அப்பகுதியில் அமைந்துள்ளதால், நந்திக்கடலின் வடக்காறுப் பகுதியில் மீனவர்கள் மீன்பிடிச் செயற்பாட்டில் ஈடுபட முடியாத நிலையும் ஏற்படுகின்றது.

அங்கு பாரம்பரிய மீன்பிடியில் ஈடுபட்ட மக்கள், கடற்படை முகாமிற்கு அருகில் மீன்பிடியில் ஈடுபடும்போது, கடற்படையினர் மீனவர்களை அச்சுறுத்திய, தாக்கிய சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன.

இவ்வாறாக தமிழ் மக்களின் குடியிருப்பு நிலங்கள், பயிற்செய்கை நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்ற விடயத்தைத் தாண்டி, தமிழ் மக்களின் பாரிய பொருளாதார வளங்களை பல வழிகளிலும் இந்த கோத்தாபாய கடற்படை முகாம் ஆக்கிரமித்து வைத்துள்ளது.

எனவேதான் இந்த கடற்படை முகாமை அங்கிருந்து அகற்றவேண்டும் என நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

மேலும் கோத்தாபாய கடற்படை முகாம் அமைந்துள்ள தமிழ் மக்களின் காணிகளை அளவீடுசெய்து சட்டரீதியாக ஆக்கிரமிப்புச்செய்யும் முயற்சிகளை உரியவர்கள் கைவிடவேண்டும். அங்கிருந்து அந்த கடற்படை முகாம் அகற்றப்படவேண்டும்.

எமது தமிழ் மக்களுக்குரிய காணிகளையும், வாழ்வாதார வளங்களையும் அவர்களுக்கே மீளக் கையளிக்க வேண்டும்.

இவற்றிற்கு மாறாக காணி ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடர்ந்தால், எமது மண்மீட்புப் போராட்டங்களும் தொடரும் - என்றார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது அதிகரிப்பு... விசாரணைக்கு என அழைத்து கைதுசெய்கின்றனர்– சாணக்கியன்



யூலை 07

தொடர்ச்சியாக அண்மைக்காலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். காலை 9 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் 10 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் என அழைத்து கைது செய்யப்பட்டு வருகின்றனர் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் நாடாளுமன்றத்தில் தனது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில பொலிஸார் எனது தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிப்பது இல்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான எனது தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிப்பது இல்லை. அவ்வாறானவர்களின் பெயர்களை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களை விடுதலை செய்யுமாறு கோருவதற்காக அவர்களுக்கு அழைப்பினை ஏற்படுத்துவது இல்லை. தொடர்ச்சியாக அண்மைக்காலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். காலை 9 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் 10 மணிக்கு விசாரணைக்கு வாருங்கள் என அழைத்து கைது செய்யப்பட்டு வருகின்றனர். இதன்காரணமாக தற்போது இளைஞர்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுகின்றனர். அதே போன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலையில் வைத்து தமிழ் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். சிவில் உடையில் வரும் பொலிஸாரே இவ்வாறு கைது செய்கின்றனர்.

# கனடிய செய்திகள்

## ஒன்ராறியோ யூலை 16 அம் திகதி மூன்றாம் படி திறப்புக்கு நகரும்



ஒன்ராறியோ ஜுலை 16 ஆம் திகதி அதன் பொருளாதார மீண்டும் திறக்கும் திட்டத்தின் படி 3 க்கு நகரும், இது உணவகங்கள் மற்றும் ஜிம்கள் போன்ற வசதிகளை மீண்டும் உட்புற நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க அனுமதிக்கிறது.

ஜுன் 30 முதல் இந்த மாகாணம் படி 2 இல் உள்ளது, வெளிப்புற உணவு, வரையறுக்கப்பட்ட தனிப்பட்ட பராமரிப்பு சேவைகள், வெளிப்புற சேகரிப்பு வரம்புகள் அதிகரித்தல் மற்றும் உட்புற கூட்டங்களை நடத்தும் திறன் ஆகியவை அனுமதிக்கப்பட்டுள்ளன.

மீண்டும் திறக்கும் திட்டத்தின் 3 வது கட்டத்தில் மாகாணம் நுழையும் போது திறக்கப்படுவது இங்கே:

♦ சமூகக் கூட்டங்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பொது நிகழ்வுகளுக்கான வரம்புகள் உட்புறத்தில் 25 பேர் மற்றும் வெளியில் 100 பேர் இருப்பார்கள்.

♦ உட்புற மத சேவைகள் அல்லது விழாக்கள் இரண்டு மீட்டர் உடல் தூரத்தை பராமரிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையுடன் மட்டுப்படுத்தப்படும்.

♦ சில்லறை மற்றும் உட்புற மற்றும் வெளிப்புற சாப்பாட்டு இரண்டும் இரண்டு மீட்டர் உடல் தூரத்தை பராமரிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையுடன் மட்டுப்படுத்தப்படும்.

♦ உட்புற திறன் கொண்ட நடன தளங்களைக் கொண்ட உணவு மற்றும் பான நிறுவனங்கள் இரண்டு மீட்டர் தூரத்தை பராமரிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையுடன் மட்டுப்படுத்தப்படும், அதிகபட்சமாக 50 சதவிகிதம் உட்புறத்திலும் 50 சதவிகிதம் வெளிப்புறத்திலும்.

♦ தனிப்பட்ட பராமரிப்பு சேவைகள் 2 மீட்டர் உடல் தூரத்தை பராமரிக்கக்கூடிய பல புரவலர்களை தொகுப்பாளர் செய்ய முடியும், மேலும் இப்போது முகத்தை மூடுவதை அகற்ற வேண்டிய சேவைகளை வழங்க அனுமதிக்கப்படும்.

♦ விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு உடற்பயிற்சி நடவடிக்கைகளுக்கான வசதிகள் உட்புறத்தில் 50 சதவீதமாக வரையறுக்கப்பட்ட திறனுடன் மீண்டும் திறக்கப்படும், பார்வையாளர்கள் 1000 பேர் வரை உள்ளரங்க இருக்கை திறனில் 50 சதவீதமாக வரையறுக்கப்பட்டுள்ளனர், மேலும் 10,000 பேர் வரை வெளிப்புற இருக்கை திறனில் 50 சதவீதம் மட்டுமே.

♦ தொடர்புக்கு தடைகள் இல்லாமல் விளையாட்டு அனுமதிக்கப்படும்.

♦ சினிமாக்கள், அருங்காட்சியகங்கள், காட்சியகங்கள், மீன்வளங்கள், மிருகக்காட்சிசாலைகள், அறிவியல் மையங்கள், அடையாளங்கள், வரலாற்று தளங்கள், வெளிப்புற பொழுதுபோக்கு பூங்காக்கள், நீர் பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் கூடுதல் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் 50 சதவீத உட்புறங்களிலும் 50 சதவீத வெளியிலும் வரையறுக்கப்பட்ட திறனுடன் செயல்பட அனுமதிக்கப்படும் .

♦50 50 சதவீத திறனுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் கேசினோக்கள் மீண்டும் திறக்கப்படும்.

♦ கூடுதல் கட்டுப்பாடுகளுக்கு இடையில், இரண்டு மீட்டர் தூரத்தை பராமரிக்கக்கூடிய எண்ணிக்கையுடன் வரையறுக்கப்பட்ட திறனுடன் ஸ்ட்ரிப் கிளப்புகள் செயல்பட முடியும்.

## கனடேய பழங்குடிகளின் வம்சாவளிப் பெண்மணியான மேரி சைமன் நாட்டின் ஆளனர் நாயகமாக பதவியேற்றார்

கனடாவின் ஆதிப் பழங்குடி சமூகவம்சாவளிப் பெண்மணியான மேரி சைமன் நாட்டின் ஆளனர் நாயகமாக பதவியேற்றார். இவருக்குரிய நியமனத்தை கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வழங்கினார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒரு செய்தி மாநாட்டில் மேரி சைமனை அறிமுகப்படுத்தியபோது “இன்று 154 ஆண்டுகளுக்குப் பிறகு, நம் நாடு ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நடவடிக்கை எடுக்கிறது” என்று கூறினார்.

கனடாவில் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் உத்தியோகபூர்வ பிரதிநிதியாகவும் கனேடிய ஆயுதப்படைகளின் தளபதியாகவும் பணியாற்றிய முதல் பழங்குடி நபராக மேரி சைமன் இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் முன்னாள் இராஜதந்திரியும், வழக்கறிஞருமாவர். அத்துடன் ஆதிப் பழங்குடி இனத்தின் இனுட் பிரிவைச் சேர்ந்த சமூகத்தின் உரிமைகள் மற்றும் கலாச்சாரத்திற்கான வழக்கறிஞராக் கடமையாற்றிய மேரி சைமன் கனடாவின் 30 வது ஆளனர் நாயகமாக பதவியேற்றுள்ளார். இவருக்கு முதல் இந்த உயர் பதவியை வகித்தவர் திருமதி. யூலி பேய்ட்டி என்பவர் அவர் சில தவறான நடவடிக்கைகள் காரணமாக எழுந்து கேள்விகள் காரணமாக தனது பதவியை கடந்த ஜனவரி மாதம் இராஜினாமாச் செய்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு அகதியாகவே கனடாவிற்கு குடியேறியவர் ஆவார்.

## தமிழர்களின் பூர்வீக நிலங்கள் முஸ்லீம் நபர்களால் அபகரிக்கப்படுவது இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் நா. உ. தவராசா கலையரசன்

யூலை 04, கனகராசா சரவணன்



கல்முனையில் தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் முஸ்லீம் நபர்களால் அபகரிக்கப்படுவது இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அரச காணியில் சட்டவிரோதமாக மண் நிரப்பப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கை இடம்பெற்ற இடத்திற்கு பா.உ. தவராசா கலையரசன் உள்ளிட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டு தடுத்து நிறுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கல்முனை 1 உ கிராம சேவகர் பிரிவிலே உள்ள அரச காணியொன்றில் இங்குள்ள முஸ்லீம் தனிநபரால் மண்போட்டு நிரப்பும் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கையை கிராம சேவகர் தமது கடமையை முன்னெடுத்த போது அவர் தாக்கப்பட்டுள்ளார். இந்த இடத்தை நாங்கள் பார்வையிட்ட போது அரச காணியொன்றை விளம்பரப்பலகை அகற்றப்பட்டு மண் நிரப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே இங்கு அவ்வாறான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. மீளவும் இவ்விடயம் இங்கு நடைபெற்றுள்ளது.
தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் முஸ்லீம் நபர்களால் போலி ஆவணங்கள் மூலம் அபகரிக்கப்படுவதும், இங்குள்ள மக்களை சுதந்திரமாக வாழ முடியாத சூழலை உருவாக்குவதுமான செயற்பாடுகள் இங்கு இடம் பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியான ஒரு வன்முறையை உருவாக்குவததாகவே இருக்கின்றது.

தமிழ் மக்களின் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தாமல் இழுத்தடித்து அந்தப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அரச காணியை ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கையை இந்த கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படக் கூடாது என்று எண்ணுகின்ற அரசியல்வாதியும், அவருடன் சேர்ந்த நபர்களுமே இவ்வாறான பணிகளைச் செய்கின் றார்கள்.

கடந்த மாதம் பெரியநீலாவணையில் இவ்வாறான சம்பவம் நடைபெற்று அது தடுத்து நிறுத்தப்பட்டது. தற்போது இங்கு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக நில ஆக்கிரமிப்பு இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது.

இங்கு வாழுகின்ற சமூகங்களை ஒன்றிணைக்க வேண்டுமானால் ஒரு சமத்துவமான, நடுநிலையான, நியாயமான வேலைத்திட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்பட வேண்டும். அதை விடுத்து இவ்வாறான ஆக்கிரமிப்புகள் இடம்பெறும் போது அது சமூகங்களுக்கிடையில் பாதிப்பினை ஏற்படுத்தும்.

இங்கிருக்கின்ற இரண்டு சமூகங்களையும் இணைக்க வேண்டுமாக இருந்தால் அவர்களுடைய சுதந்திரமான நீதியான நிருவாக நடைமுறையைக் கையாள்வதற்குரிய அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது இந்த நாட்டின் தலைவர்களுடைய தலையாய கடமையாக இருக்கின்றது.

எனவே இவ்வாறான ஆக்கிரமிப்புப் பணிகள் இத்துடன் நிறத்தப்பட வேண்டும். சமூகங்களை ஒற்றமைப்படுத்த வேண்டும்.

# தமிழக செய்திகள்



## கொரோனா முன்கள பணியாளர்களுக்கு சிறந்த மருத்துவ விருது




யூலை 04

கொரோனா இரண்டாவது அலையின் போது கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக பணியாற்றிய மருத்துவர்கள் சுகாதார துறையினர் உட்பட முன்கள பணியாளர்களிற்கு உலக தமிழ் வம்சாவளி அமைப்பும் உலக தமிழ் வர்த்தக சங்கமும் விருது வழங்கி கௌரவிக்க உள்ளதாக அமைப்பின் தலைவர் செல்வகுமார் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

கடந்த நான்கு ஆண்டுகளாக உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு மருத்துவப் பிரிவு மருத்துவத்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

உலகெங்கும் உள்ள தமிழ் மருத்துவர்களின் திறமைகளை மேம்படுத்தவும், மருத்துவத்துறையில் சிறந்து விளங்கவும், தமிழ்நாட்டில் உள்ள மூத்த மருத்துவர்கள் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்கள், தங்களுடைய அனுபவங்களை உலகத்தில் உள்ள தமிழ் மருத்துவர்களுக்கு பயனளிக்கும் விதமாக செயல்பட்டு வரும் இவ்வமைப்பு, இவ்வாண்டு கொரானா இரண்டாம் அலையின் போது புதியதாக அமையப்பெற்ற தமிழக அரசு, முதல்வர் மாண்புமிகு மு. க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு நோய்த்தொற்றை கட்டுக்குள் கொண்டுவர பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், ஆம்புலன்ஸ் டிரைவர்கள், 104 சேவை மையங்கள், காவல்துறை அதிகாரிகள், மாநகராட்சி ஊழியர்கள், செய்தியாளர்கள், போன்றவர்களுக்கு மெடிக்கல் எக்சல்லேன்ஸ் அவார்ஸ் ( MEDICAL EXCELLENCE AWARDS) வழங்கி கௌரவிக்கபட உள்ளனர். இவ்விழாவிற்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், அரசு முதன்மை செயலாளர், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அழைத்து ஜீலை 17ஆம் தேதி சனிக்கிழமை மாலை சென்னையில் விருது வழங்கப்பட உள்ளது.

அயல்நாட்டு தமிழ் மருத்துவர்கள் கலந்து கொள்ள வில்லை என்றாலும் தங்களின் பங்களிப்பாக நோய் தொற்றிலிருந்து எப்படி பாதுகாத்துக்கொள்வது என்பதையும் அயல்நாட்டில் தாங்கள் எதிர்கொண்ட மருத்துவ சவால்களையும் கட்டுரையாக வழங்கவுள்ளனர் என உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவரும், இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளருமான செல்வகுமார் தெரிவித்தார்.

## தமிழீழ தங்க மகனின் 'கின்னஸ்' உலக சாதனை

கும்மிடிப்பூண்டி. யூலை 09



தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழர் ஏதிலிகள் முகாமில் முதல் ஈழத்து மாணவன் திவ்வியேஷ் யோகா செய்து ஒரு நிமிடத்தில் 34 பலூனை உடைத்து உலக கின்னஸ் சாதனை.

கும்மிடிப்பூண்டி அருகே ஈழத்தமிழர் ஏதிலிகள் முகாம் மாணவன் யோகா மூலம் ஒரு நிமிடத்தில் 34 பலூன்களை உடைத்து உலக கின்னஸ் சாதனை படைத்துள்ளார். திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகே பெத்திக்குப்பம் ஈழத்தமிழர் ஏதிலிகள் முகாமில் வசித்து வருபவர்கள் ஈழத்தை சேர்ந்த ரஞ்சன்- ஜெயலட்சுமி தம்பதி.இவர்களின் மகன் திவ்வியேஷ் (16), கும்மிடிப்பூண்டி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் 11-ம் வகுப்பு படித்து வருகிறார்.

கும்மிடிப்பூண்டியில் இயங்கி வரும் ஸ்ரீசங்கரி யோகா பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கடந்த 5 ஆண்டுகளாக யோகா பயிற்சி பெற்று வருகிறார்.

இந்நிலையில், உக்ரைன் நாட்டை சேர்ந்த இளம் பெண் க்ருடாஸ் ருசியானாவின் உலக கின்னஸ் சாதனையான டிம்பாசனம் மூலம் பின்புறமாக ஒருநிமிடத்தில் 24 பலூன்களை உடைத்ததை முறியடிப்பதற்காக திவ் வியேஷ் தொடர்ந்து பயிற்சி பெற்று வந்தார்.

அந்த பயிற்சியின் விளைவாக, சமீபத்தில் திவ்வியேஷ்




டிம்பாசனம் மூலம் ஒரு நிமிடத்தில் 34 பலூன்களை



உடைத்து உலக கின்னஸ் சாதனை படைத்தார்.

உலக கின்னஸ் சாதனை படைத்த திவ்வியேஷ் மற்றும் அவருக்கு பயிற்சி அளித்த சந்தியா ஆகியோரை, ஈழத்தமிழர் ஏதிலிகள் முகாம் மக்கள் மற்றும் உலக வாழ் ஈழத்தமிழர்கள் பாராட்டி மகிழ்கின்றனர்.

திவ்வியேஷ் அவர்கள் இன்னும் பல உலக கின்னஸ் சாதனைகள் படைக்க உலக வாழ் ஈழத்தமிழர் சார்பாக அன்பான நல் வாழ்த்துகள்.

# உலக செய்திகள்

## ஆப்கானின் பக்ரம் விமான தளத்திலிருந்து அமெரிக்க படையினர் வெளியேறினர்

## முடிவிற்கு வந்தது இரு தசாப்தகால வரலாறு




ஆப்கானிஸ்தானின் பக்ரம் விமானதளத்திலிருந்து அனைத்து அமெரிக்க படையினரும் வெளியேறியுள்ளனர்.

இரண்டு தசாப்தகால யுத்தத்தின் பின்னர் அமெரிக்க படையினர் பக்ரம் விமானதளத்திலிருந்து முற்றாக வெளியேறியுள்ளனர்.

தலிபான் உடனான உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் வெளியேறியுள்ளனர்.

பக்ரம் விமான தளத்திலிருந்து அனைத்து அமெரிக்க படையினரும் நேட்டோ படையினரும் வெளியேறியுள்ளனர் என அமெரிக்க பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

காபுலில் இருந்து 60 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பக்ரம் விமானதளமே அமெரிக்க இராணுவம் தனது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் தளமாக காணப்பட்டது.

அமெரிக்க படையினர் விலகிக்கொண்டுள்ளமை ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நடவடிக்கைகள் முடிவிற்கு வந்துள்ளதை குறித்து நிற்கின்றது.
விமானதளத்தை அமெரிக்கா ஆப்கான் படையினரிடம் கையளிக்கவுள்ளது- கையளிக்கும் நடவடிக்கை சனிக்கிழமை இடம்பெறும்.
அமெரிக்க படையினர் ஆப்கானிஸ்தானின் பக்ரம் விமானதளத்தில் காலடி எடுத்து வைத்து இரண்டு தசாப்தங்களின் பின்னர் அமெ ரிக்க படையினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அமெரிக்க படையினர் அங்கு வருவதற்கு முன்னர் சிதைவடைந்த ஒடு பாதைகள் -ஒளிராத மின்விளக்குகள் கொண்டதாக காணப்பட்ட அந்த பகுதி கடந்த இரண்டு தசாப்தகாலத்தில் அழகிய சிறிய நகரமாக மாற்றமடைந்துள்ளது.

இரண்டு மைல் நீளமான ஓடுபாதை ஆப்கானில் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகளிற்கான மையமாக காணப்பட்டது.

ஜோர்ஜ் டபில்யூபுஷ் பராக் ஒபாமா டொனால்ட் டிரம்ப் என அனைவரும் இந்த விமானதளத்திற்கு விஜயம் செய்து வெற்றி மற்றும் ஆப்கானிற்கான சிறந்த எதிர்காலம் குறித்த வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர்.

## பல பகுதிகளை கைப்பற்றி முன்னேறும் தலிபான்

## ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆப்கான் படையினர் தஜிக்கிஸ்தான் தப்பியோட்டம்.

தலிபானுடனான மோதலின் பின்னர் ஆயிரத்திற்கும் அதிகமான ஆப்கான் படையினர் தஜிக்கிஸ்தானிற்கு தப்பியோடியுள்ளனர்.

தங்கள் உயிர்களை காப்பாற்றுவதற்காக ஆப்கான் படையினர் எல்லையை கடந்தனர் என தஜிக்கிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஆப்கானில் மீண்டும் வன்முறைகள் தீவிரமடைந்துள்ள நிலையில் தலிபான் பல இடங்களை கைப்பற்றியுள்ளது.
இந்நிலையில் பல ஆப்கான் படையினர் தஜிக்கிஸ்தானிற்கு தப்பிச்சென்றுள்ளனர்.

கடந்த ஐந்து நாட்களில் 1600 படையினர் தப்பிச்சென்றுள்ளனர்.

நேற்றிரவு இடம்பெற்ற மோதலின் பின்னர் திங்கட்கிழமை காலை பல படையினர் தஜிக்கிஸ்தானில் சரணடைந்துள்ளனர்.

தஜிக்கிஸ்தானிற்கு அருகில் உள்ள சில பகுதிகளை தலிபான் கைப்பற்றியுள்ளது.

பாக்கிஸ்தான் எல்லையில் ஒரு சோதனை சாவடியை தலிபான் கைப்பற்றியுள்ளது.

தலிபான் தீவீரவாதிகள் அனைத்து வீதிகளையும் கைப்பற்றியுள்ளதால் வேறு வழியின்றி படையினர் எல்லையை கடந்து தஜிக்கிஸ்தான் சென்றுள்ளனர் என ஆப்கான் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.




## பத்திரிகை சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்

## உலக தலைவர்களில் ஒருவர் சிறிலங்கா ஜனாதிபதி – சர்வதேச ஊடக சுதந்திர அமைப்




யூலை 05
ஊடக சுதந்திரம் குறித்த சர்வதேச அமைப்பான எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தனது பத்திரிகை சுதந்திரத்தை வேட்டையாடுபவர்கள் பட்டியலில் இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை இணைத்துக் கொண்டுள்ளது.

2021ற்கான பத்திரிகை சுதந்திரத்தை வேட்டையாடுபவர்கள் பட்டியலில் எல்லைகள் அற்ற நிருபர் அமைப்பு இலங்கை ஜனாதிபதியை இணைத்துக் கொண்டுள்ளது.

பத்திரிகை சுதந்திரத்தின் மீது தாக்குதலை மேற்கொண்ட உலக தலைவர்களின் படங்களை வெளியிட்டுள்ள எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு அவர்கள் பயன்படுத்தும் முறைகள் அவர்களுடைய விருப்பத்திற்குரிய இலக்குகள் மற்றும் அவர்கள் தங்கள் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் விதத்தில் வெளியிட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

2021 பட்டியலில் இலங்கை ஜனாதிபதியையும் எல்லைகள் அற்ற நிருபர்கள் அமைப்பு இணைத்துக் கொண்டுள்ளது.
ஜனாதிபதியின் படத்தை வெளியிட்டுள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர் அமைப்பு பயங்கரம் மீண்டும் வந்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சி தமிழ் சிறுபான்மையினத்தவர்கள் அல்லது முஸ்லீம் சிறுபான்மையினத்தவர்களின் நிலைகள் குறித்து புலனாய்வுச்செய்திகளை செய்து செய்திகளை என்பது மிகவும் கடினமான ஆபத்தானதாக காணப்படுகின்றது என எல்லைகள் அற்ற நிருபர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

துணிந்து கருத்துதெரிவிப்பதற்கு முற்படுபவர்கள் இரண்டு வகையான ஆபத்துக்களை எதிர்கொள்கின்றனர் – ஒன்று நீதித்துறை சார்ந்தது- பொலிஸார் பிடியாணையுடன் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன இஇரண்டாவது உடல்ரீதியிலான அச்சுறுத்தல்கள் மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்படலாம் என தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர் அமைப்பு முறைப்பாடு செய்யப்பட்டாலும் பொலிஸார் அந்த முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம் என குறிப்பிட்டுள்ளது.

# 2022 ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**



thamilarvanikam@gmail.com



AIR CONDITONER
INSTALLATION
SALE
High -Efficiency
Air Conditoner
Starting From
$1,899
HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS
24 EMERGENCY SERVICES
A/C Leak Check & Refilling the Gas
Repair, Service & Installation
Ductless Air Conditions
Is Your Home Keeping You
COOL?
ENERGY STAR
TOSHIBA
Carrier
INVERTER
LENNOX
Carrier, Lennox, Comfortstar
Trane, Ameristar, Goodman
FREE 10 Years
Parts Warranty
Furnance, Air Conditioner,Hot Water Tank, Tankless Water Heater, HRV
Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
Call Now for
FREE ESTIMATE
S.Kumar 416-993-8001




Manaja's
manajaskitchen.ca
MANAJA'S KITCHEN
A Fusion of Indian & Sri Lankan Cuisine
WE
DO
CATERING
மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.
Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party
Specialized
Mutton & Chicken
Briyani
சுவையான உடன்
தோசை மா கலவை
இட்லி மா கலவை
பெற்றுக்கொள்ளலாம்
அனைத்து தாயக சைவ
மற்றும் அசைவ உணவுகளுக்கு
உங்கள் விருப்பபடி சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட
நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்
FREE Delivery for orders over $150 in GTA
75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4
905.427.8263




bcpc
BOROS CANADIAN
PAPER CONVERTING INC.
Auto Body
Masking
Paper Rolls
Size 6", 18", 24" & 36"
Auto
Painting Purposes
Medical Examine
Paper Rolls
18", 21"&24"
Use For
Medical Offices
Examination Table
Paper Rolls
Disposable Chair or Tables
Paper Rolls
Use for Salon Chairs &
Spa Treatment Tables
Auto Body
Masking Paper
Dental
Examination
Table
Paper
Massage Table Paper Roll
Examination Table Paper Roll
Food Wrapping
Paper Rolls
Meat Wrapping
Paper Rolls
Alan Maniam
Director
647 299 2450
235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3
boroscanadianpaper@gmail.com



சிங்கள தலைநகரில் வான் வழியாக கரும்புலி தாக்குதல் நடாத்தி வீரச் சாவடைந்த கேணல் ரூபன் 'தாக்குதலுக்கு முன்னதாக' உலகத் தமிழர்களை நோக்கி எழுதிய மடலின் உணர்வின் வரிகள் ...!

பெற்றோரை பார்க்கும் பொறுப்பு இருக்கு என்பது தெரியும் தாய் தந்தை மாரை காப்பாற்ற வேண்டும் என்றால் தாய் நாட்டை காப்பாற்றினால் தான் முடியும். இது கற் பனையல்ல இதுதான் நிஜம். நாம் எவ்வளவு காலம் சாவிற்குள் வாழ்வது? தினம் தினம் செய்தியில் சிங்கள இராணுவத்தின் எறிகணை வீச்சில் வான் தாக்குதலில் இத்தனைபேர் படுகொலை செய்யப்பட்டு காயப்பட்டுள்ளனர் என்பதை தான் கேட்கின்றோம், பார்க்கின்றோம்.

இவர்களில் அரைவாசிப்பேர் போராட வலுவுள் ளவர்களாகத்தான் இருக்கின்றார்கள் அந்த வயதில் இவர்கள் ஏன் அநியாயமாக சாக வேண்டும். செத்தவர்கள் வீதியோரங்களிலும் காணிகளிலும் புதைக்கப்படுகின்றார்கள். ஏன் இந்த அவலம். இவர்கள் எல்லாம் எமது அமைப் பில் இணைந்து ஆயுதம் ஏந்தி இராணுவத்தை கொன்று வீரச்சாவு அடைந்தால் தமிழன் வீரத்தோடு வாழ்ந்தான் அல்லது வீரத்தோடு மடிந்தான் என்று வரலாறு சொல்லும்.

அன்புக்குரிய மக்களே!

சுதந்திரத்திற்கான காலம் கனிந்துகொண்டிருக்கின்றது. வெண்ணை திரண்டுவரும்பொழுது பானையை போட்டு உடைத்துவிடாதீர்கள். ஒவ்வொருவரும் தன்நம்பிக்கையாக இருங்கள். உங்களது இன்னல்கள் வலியை கண்டுதான் தலைவர் போராட்டத்தை தொடங்கினார். உங்களிற்கு ஏற்படும் வலியைக் கண்டு அவரது மனம் அப்பொழுதிலிருந்து இப்பொழுதுவரை குமுறிக்கொண்டுதான் இருக்கிறது. அதில் எள்ளளவும் குறையவில்லை. நாங்கள் (மாவீரர்கள்) திரும்பத் திரும்ப உங்களிடம் கேட்பது எல்லாம் தலைவரை பாதுகாக்குங்கள். அவரின் கையை பலப்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகளை போராட விடுங்கள். தலைவர் நிச்சியமாக உங்களிற்கு சுதந்திரம் பெற்றுத்தருவார்.

எமக்கும் சிங்கள இராணுவத்திற்கும் தான் யுத்தம் சிங்கள மக்களுக்கல்ல. ஆனால் இராணுவமோ எமது மக்களை குண்டு வீசி கொல்கின்றது. எமக்கும் சிங்கள மக்களை கொல்ல முடியும். சிங்கள மக்கள் இதை தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால், நாம் அப்படிச் செய்யவில்லை. நாம் தலைவரை சந்தித்து குண்டு போடப்போகும் பொழுது திரும்பத் திரும்ப வலியுறுத்துவது மக்கள் மீதோ மருத்துவமனைகள் மீதோ தவறியும் குண்டு போடாதீர்கள் என்று. ஆனால் சிங்கள வான் கழுகுகள் எமது மக்களையும் மருத்துவமனைகளையும் தேடித் தேடி குண்டு போடுகின்றது.

நாம் சிங்கள தேச மக்களுக்கு ஒன்றை தெளிவாக சொல்ல விரும்புகின்றோம். தமிழினத்தை அழித்துவிட்டு நீங்கள் நிம்மதியாக வாழலாம் என்று கனவு காணாதீர்கள். எமது தலைவிதியை நாமே தீர்மானித்து உங்களுடன் ஒற்றுமையாக வாழத்தான் நாங்கள் விரும்புகின்றோம். இதைத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம். நாம் எமது மண்ணில் சுதந்திரமாக வாழத்தான் ஆசைப்படுகின்றோம்.

அன்புக்குரிய வன்னிவாழ் மக்களே!

நாம் சிங்கத்தின் குகைக்குள் வெடி சுமந்து போகின்றோம். நாம் யார், தமிழன் யார் எனக் காட்டுவோம். நான் எப்பொழுதும் அநியாயமாக சாவதை விரும்பியதில்லை. அந்த வகையில் நான் மாவீரனாக அதிலும் கரும்புலி வீரனாக எனது தாய்நாட்டிற்கும், மக்களிற்கும் பெருமை சேர்ப்பதை நினைத்து நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திலீபன் அண்ணை கூறியது போல்…

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் அமையும்"

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் தமிழரின் தாகமும் அதுதான்"

இப்படிக்கு,

தம்பி, அண்ணா, மகன், போராளி

இ.ரூபன்.




சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்

Shiva Sri S.JANARTHANA KURUKKAL

Priest (JANA IYA)

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கள வைபவங்களையும் ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி வைப்பதற்கு அழையுங்கள்

Tel: 647.449.6542

Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam

Certified Insolvency Counsellor

DSC DEBT SOLUTION CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832

Fax: 647-797-1991

www.debtsolutioncanada.ca

# தமிழின அழிப்பு – யூலை 83

23.07.1983.

இற்றைக்குப் முப்பத்தெட்டு வருடங்களுக்கு முன், நடு இரவு திருநெல்வேலியில் வெடித்த ஒரு பாரிய குண்டின் சத்தம், குருநகர் சிங்களப் படை முகாமின் காவல் அரணில் அரைத்தூக்கத்திலிருந்த 'சென்றி' யைத் திடுக்கிட்டெழவைத்தது.

அந்தக் காலம் யாழ். வீதிகளெங்கும் சிங்களப் படையின் வாகனங்கள் உறுமியபடி ஆதிக்கம் செலுத்திய நேரம்; சிங்கள மெழிக் கட்டளைகளுக்குத் தமிழர்கள் அஞ்சி நடந்த காலம்.

மாதகல் சிங்களப் படை முகாமிலிருந்து '∴போ பிறாவோ' என்ற சங்கேதப் பெயருடன், ஒரு ரோந்து அணி இரவு வலம்வரத் தொடங்கியது.

இராணுவத்தைத் தாக்கப் பதுங்கியிருக்கும் புலிகளை மடக்குவது இந்த அணியின் பணி.

உரும்பிராய்ச் சந்தியில் சில நிமிடங்கள் தங்கிநின்று 'அங்கொன்றுமில்லை' என தனது கட்டளைப் பணியகத்திற்குத் தகவல் அனுப்பிவிட்டு, பலாலி வீதிவழியே யாழ் நகர் நோக்கி அந்த அணி செல்கின்றது.

அந்த ரோந்து அணியில் ஒரு ஜீப், ஒரு ட்ரக், ஒரு 2 ஆவது லெப். தலைமையில் 14 இராணுவத்தினர். திடீரென இந்த ரோந்து அணியின் வானொலித் தொடர்பு துண்டிக்கபடுகிறது.

பலாலி, குருநகர், இராணுவ முகாம்களுடன் தொடர்பு சாதனங்கள் மூலம் தொடர்பு கொண்டு மாதகல் முகாம் தேடுகின்றது.

குருநகர் இராணுவ முகாம் சென்றி, தான் கேட்ட சத்தத்தைத் தனது மேலதிகாரிகளுக்குத் தெரியப் படுத்துகிறான்.

ஏதுநடந்திருக்காலம் என அவர்கள் ஊகிக்கின்றனர்.

வேட்டைக்குப் புறப்பட்ட '∴போ பிறாவோ' வேட்டையாடப்பட்டு விட்டது!

ஆனாலும் எங்கிருந்து சத்தம் வந்தது என சரியாக ஊகிக்க முடியவில்லை. எனவே காணாமற் போன ரோந்து அணியை எங்கே தேடுவது?

அப்போது, கோண்டாவில் பஸ் டிப்போவிலிருந்து ஒரு இராணுவச் சிப்பாய் பதட்டமான குரலில், அவசரமாக பலாலியைத் தொடர்பு கொண்டு, திருநெல்வேலி தபாற் பெட்டிச் சந்திக்கருகில் நடந்து முடிந்த பூகம்பத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தான்.

நான்கு திசைளாலும் இராணுவத்தினர் பதுங்கிப் பதுங்கி திருநெல்வேலிக்கு வர, அங்கே இறந்து கிடந்த 13 இராணுவத்தினரது இரத்தமும் உறைந்துவிட்டது.

அதன்பின் அருகே வீடுகளில் இருந்த தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். அடுத்தநாள் காலை பாடசாலை மாணவர்கள் சென்ற மினிபஸ் இடைநிறுத்தப்பட்டு, மாணவர்கள் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

24.07.1983 அன்று மாலை 6 மணிக்கு, இறந்த இராணுவத்தினரது உடல்கள் பலாலியிலிருந்து இரத்மலானைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

குடும்பத்தவர்களிடம் உடல்கள் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக – வழமைக்கு மாறாக – சடலங்கள் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்ட முயற்சிகள் ஆரம்பமாகின. இறுதிக் கிரியைகளில் பங்குபற்ற வந்த சிங்களவர்கள் நள்ளிரவளவில் வெறிகொண்டெழுகின்றனர். தமிழர்களது சொத்துக்களுக்கு தீ மூட்டும் படலம் ஆரம்பமாகின்றது.

காரிருளைக் கிழித்துக்கொண்டு தமிழர்களின் சொத்துக்கள் கொழும்பு மாநகருக்கு வெளிச்ச மூட்டிக்கொண்டிருந்தன.

அடுத்துவந்த சில நாட்கள் தென் இலங்கையில் வசித்த தமிழர்களுக்கு நரகமாகியது. அத்துடன் 'பேய்களின் தீவு' என்ற தலைப்பில் 83 யூலை வன்செயல்பற்றி 'த வீக்'




சஞ்சிகை பிரசுரித்த கட்டுரையோன்றிற்கான படம்.

இது சிங்கள வெறியர்களால் ஆளப்படும் ஒரு நரகத்தீவு என்ற உண்மையும் உலகம் முழுவதும் பரவியது.

நூற்றுக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன. கொழும்பு மாநகரில் மட்டும் 18,000 வீடுகள் எரிக்கப்பட்டோ அல்லது சேதமாக்கப்பட்டோ இருந்தன என, அறிக்கைகள் கூறின. தமிழ் மக்களுக்கு சொந்தமான 3,500 வர்த்தக நிலையங்கள் தீயிட்டழிக்கப்பட்டன என, கொழும்பு வர்த்தகர் சங்கம் அறிக்கைவிட்டது.

மனிதகுலம் திடுக்கிடக்கூடிய அளவுக்கு, வெலிக்கடைச்சிறையில் பெரும் படுகொலை நிகழ்வுகள் நடந்தேறின.

இவைகள் தவிர மலையகம், திருக்கோணமலை உட்பட மேலும் பல இடங்களில் தமிழர் வதை நிகழ்ந்தது.

இவை அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டன இத்திட்டமிடலின் சூத்திரதாரிகளாக சிங்கள அமைச்சர்களும் - அரசியல் வாதிகளும், சிங்களப் பொலிஸ் அத்தியட்சகர்களும், இராணுவ அதிகாரிகளும் இருந்தனர்.

ஜே. ஆர். அரசு இந்தச் சிங்கள வெறித்தனத்திற்கு எண்ணெய் ஊற்றி மறைமுக ஆதரவு தெரிவித்தது.

தமிழ் இனச் சங்காரம் முடிந்த பின், இதற்கு யார் காரணம் என்ற கேள்வி எழுந்தபோது சிறீலங்கா அரசு கூறிய பதில், “தமிழர்கள் தான் காரணம்.”

உடுத்த உடைகளுடன் உயிர் காக்க வேண்டி புகலிடங்களை நோக்கி ஓடித் தமிழர்கள் அல்லலுற்றுக்கொண்டிருந்தபோது, சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். கூறினார்:

“மக்களை அச்சுறுத்த இனி ஒரு பொழுதும் தமிழர்களை அனுமதிக்கமாட்டேன்” (The Week, Aug. 22-27, 1983). அவர் 'மக்களை' என்று விளித்தது சிங்களவர்களையே என்பது, சொல்லாமலே புரியும்.

1983 யூலை தமிழினப்படுகொலை திடீரென ஏற்பட்ட வன்செயல் அல்ல.

அது, இரண்டு மாதங்களாக திட்டமிடப்பட்ட ஒரு செயல்.

1983 மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள், விடுதலைப் போராட்டத்தின் பக்கம் நின்றார்கள். இதற்காகத் தமிழர்களைப் பழி வாங்கவும், பயமுறுத்திப் பணிய வைக்கும் எண்ணத்துடனும், தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு வன் செயலுக்கு ஜே. ஆரின் அரசு தூபமிட்டது.

இதற்காக சிங்களப் படைகளைத் தயார்ப்படுத்தவும், நீதி விசாரணைகளை இல்லாது செய்து தமிழினப் படுகொலையை மறைக்கவும், முதலில் அரசு சட்டம் ஒன்றை இயற்றியது.

“ஆயுதப்படையைச் சேர்ந்த எவரும் பயங்கரவாதி எனச் சந்தேகிக்கும் எவரையும் சுடலாம்; அதற்கு நீதிமன்ற விசாரணை நடைபெறாது” என்ற ஒரு சட்டமூலம், 03.06.1983 இல் நிறைவேற்றி வைக்கப்பட்டது. அதற்கு முதல் நாள் (02.06.1983), வவுனியா நகர் இராணுவத்தால் தீக்கிரையாக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிரான இச்சட்டமூலத்தின் பின் நிகழ்ந்த தமிழர் மீதான வன்முறையை, 'தளிர்' (புரட்டாதி – ஐப்பசி, 1983) இதழ் பின்வருமாறு கோவைப்படுத்துகின்றது:

05.06.1983 (தினபதி)

* குருநாகலில் கலவரம். ஒருவர் பலி, 25 கடைகள் தீக்கிரை.

* மட்டு – கொழும்பு புகையிரதம் கணேவத்தை என்னும் இடத்தில் தாக்குதலுக்கு உள்ளானது. 08.06.1983

* நிக்கவரெட்டிய, நாவலப்பிட்டி பகுதிகளில் பதற்றம்.

* இரத்மலானையில் அப்போதிக்கரி சங்கத் தலைவர் வாள் வெட்டுக்குப் பலி.

* பொல்காவலயில் அசம்பாவிதம்; அரசியல்வாதி சம்பந்தமாம். 09.06.1983

* குமார் பொன்னம்பலத்தின் கறுவாகாடு இல்லத்திற்கு கைக்குண்டு வீச்சு. 10.06.1983

* பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் மீது முகமூடி மனிதர்கள் தாக்குதல். 11.06.1983

* திருமலையில் கலவரம். 12.06.1983

* திருமலையில் இருந்து யாழ். நோக்கி வந்த ஒரு பஸ் வண்டி காடையர்களால் வழிமறிக்கப்பட்டு, தீ மூட்டப்பட்டது.

கருகி மாண்டவர்கள் போக, எஞ்சியோர்க்கு சம்பவம் நடந்த

## தமிழின அழிப்பு – யூலை 83

இடத்திலேயே உதவிய திருநாவுக்கரசு என்பவரும் அவரது மனைவி பிள்ளைகளும் அடுத்த நாள் படுகொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்டனர்.

இவ்வளவு இன வன்செயலும் ஒருபுறத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்க, 12.07.1983 அன்று 'டெய்லி ரெலிகிராம்' என்ற சஞ்சிகைக்கு ஜே. ஆர். அளித்த பேட்டியில், வடபகுதி தமிழ் மக்களின் கருத்தை அறியும் எண்ணம் தனக்கில்லை என்றும் அவர் தம் கஷ்டங்களைப்பற்றி அக்கறைகொள்ளத் தயாரில்லை என்றும் கூறி, தமிழர்களுக்கெதிரான வன்முறைகளை மேலும் தூண்டினார்.

கொழும்பில் தமிழர்மீதான தாக்குதல் தொடங்கி ஓரிரு நாட்களின் பின்னர், உலங்கு வானூர்தி மூலம் காமினி திசாநாயக்கா நுவரெலியா செல்கின்றார். அதுவரை மயான அமைதியுடன் இருந்த நுவரெலியா, பின்னர் பற்றி எதியத்தொடங்கியது. யாழ். நூல் நிலையம் கொளுத்தப்பட்டபோதும் இதே காமினி திசாநாயக்கா யாழ்ப்பாணத்தில் நின்று, யாழ் நகர் எரிப்பை ஊக்குவித்தார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியைவிட ஜே. ஆரின் ஐக்கிய தேசியக் கட்சி குறைந்தளவு இனவாதம் உடையது என, தென் இலங்கையில் வாழும் தமிழர்கள் நம்பினர்.

அதனால் தான் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியையே பெரும் பாலும் ஆதரித்தனர்.

1977 தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பெற்ற பிரேமதாசாவும் ஜே. ஆரும் தத்தம் தொகுதிகளில் அமோக வெற்றியீட்டியிருந்தனர்.

ஆனால் 1983 யூலை வன்செயலில், பிரேமதாசாவின் சொந்தத் தொகுதியான கொழும்பு மத்தியில் உள்ள 'பெற்றா பசாரில்' இருந்த முழுத் தமிழரின் கடைகளும் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. (The Week, Aug. 1983)

ஜே. ஆரின் சொந்தத் தொகுதியில் உள்ள தமிழர்களின் இடமான வெள்ளவத்தை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தது. வன்செயல் முடிந்த கையுடன் வெள்ளவத்தையைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்மணியைச் சந்தித்து 'த வீக்' நிருபர் கேட்டபோது அவர் சொன்னார்: “நாங்கள் (தமிழர்கள்) ஜே. ஆரை ஆதரித்ததற்கான சன்மானம் தான் இது.” (The Week, Aug. 1983)

வன்செயலில் ஈடுபட்ட சிங்களவர்கள் அணியணியாக ஈடுபட்டனர், ஒவ்வொரு அணியும் ஒருவரின் வழிநடத்தலில் செயற்பட்டது. ஒவ்வொரு அணித் தலைவரிடமும் தேர்தல் இடாப்பு இருந்தது. தமிழர்களின் இருப்பிடங்களைத் கண்டு பிடிக்க அந்தத் தேர்தல் இடாப்பைப் பயன்படுத்தினார்கள். (T. D. S. A. திசாநாயக்காவின் “சிறீலங்காவின் துயர்”).

இந்த யூலை வன்செயலில் உச்சக் கட்டக் கொடூரமாக வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள் அமைந்திருந்தன.

அரசாங்கத்தின் உச்ச பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளில் 53 பேர் மிகவும் இலகுவான முறையில், கொடூரம் பயன் படுத்தப்பட்டு படுகொலை செய்யப் பட்டனர்.

கொல்லப்பட்ட தமிழர்களின் கண்கள் தோண்டப்பட்டதும், இரத்தம் குடிக்கப் பட்டதுமான காட்டுமிராண்டி நடவடிக் கைகளும் இப்படுகொலையில் இடம்பெற்றுள்ளன.

தானிறந்தபின் தனது கண்ணை தமிழர் ஒருவருக்குத் தானம் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்ட குட்டிமணியினது கண் களைத் தோண்டி, புத்தகோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்தனராம்.

இந்த மிருகத்தனங்களை ஒரு சிங்கள இனவாதியான நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவரே நாடாளுமன்றில் கூறி, அதை உறுதி செய்திருந்தார்.

இந்த வெலிக்கடைப் படுகொலைகள் சேபால எக்கநாயக்க என்ற ஒரு விமானக் கடத்தல்காரனின் தலைமை யிலேயே நடைபெற்றது. இவனை அவ்விதம் செய்யும் படி ஒரு சிங்கள அரசியல்வாதி தூண்டியிருந்தார். இதற்கு சிறை அதிகாரிகளும் தமது ஆதரவை நல்கினர்.

எந்தவேளையும் பூட்டப்பட்டு மிகவும் பாதுகாப்பாக இருக்கும் ஆயுத அறையைத் திறந்து அலவாங்கு, மண்வெட்டி, சவள், பொல்லு போன்ற ஆயுதங்களை எடுத்து, கைதிகளாக இருந்த தமிழர்களைச் சிங்களக் கைதிகள் தாக்கிக் கோரமாகக் கொன்றனர்.

இந்தப் படுகொலைகள் ஒருமுறை யுடன் நின்றுவிடவில்லை. இரு தடவைகள் நடந்தன. 25.07.1983 அன்ற முதல் தடவையும், 27.07.1983 அன்று இரண்டாவது தடவையும் நடந்தன.

விமானக் கடத்தலுக்காக ஆயுள் தண்டனை அனுபவித்தபடி இருந்த சேபால எக்கநாயக்க, இப்படுகொலை களுக்குத் தலைமை தாங்கியதற்குப் பிரதி உபகாரமாக, அடுத்து வந்த வருடங்களில் விடுதலை செய்யப்பட் டுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.







AFFORDABLE REFRIGERATION SERVICES INC






Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com



Allstate. You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும் தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
**(416) 817 5060**
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316



இப்போது வந்துவிட்டது!

# தற்போதைய வைரஸ் தொற்று காலத்தில்

**உங்கள் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைத்து நோய்களிலும் இருந்து உங்களைப் பாதுகாக்க வெளிவந்துவிட்டது**

"3 Spoon 100 ஆயுள்"

உள் அடங்கும் பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
இவை அனைத்தும் ஆயுள்வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதன் மருத்துவ குணங்கள் சொல்லில் அடங்காது.
அதிகாலை 3 கரண்டி அருந்தி அனைத்து நோய்களில் இருந்து விடுதலை பெறுங்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அருந்தலாம்.
சுவையானது, கனேடிய அங்கீகாரம் பெற்றது. இப்போது அனைத்து தமிழ் குரோசரி (Grocery) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: Raj - 416.388.5054**

நீங்கள் எதிர் பார்த்திருந்த பானம்!

**Benefits:**

1. இரத்தக்குளாய் அடைப்பை நீக்குகிறது
2. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது
3. நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் உகந்தது
4. உடலில் உள்ள தேவையற்ற கழிவை அகற்றி குடலை சுத்தமாக்குகிறது
5. உடல் பருமனை குறைக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
6. மலச்சிக்கலை அறவே நீக்குகிறது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்
7. தூக்கமின்மையை இல்லாமல் ஆக்குகிறது.
8. உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பினைக் குறைக்கிறது
9. உடல் சோர்வை நீக்குகிறது

**பருகும் முறை:**
நன்றாகக் கலக்கி ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மூன்று கரண்டி அருந்தவும்.
பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
Note: நீங்கள் இரத்தக்குழாய் அடைப்பிற்காக மருத்துவரால் சத்திர சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், 6 மாத காலத்தில் இரத்தக் குழாய் அடைப்பை அறவே நீக்குகிறது.

3 ஸ்பூண் 100 ஆயுள்
3 Spoon 100 Life
(சுவையானது)
**ஒவ்வொருவரும் அருந்த வேண்டிய பானம்**
**ஆயுள் வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது.**
**மருந்து உணவல்ல, உணவே மருந்து.**
**Heart Attack இல் இருந்து பாதுகாக்கிறது.**

NOW $ 20
~~$ 35~~




1. Removing the blood vesse blockae.
2. regulates bood flow
3. Good for diabetes people
4. Remove your body's unnecessary wast
5. Reduces obesity and increases resistance
6. Eliminate constipation, cures ulcer
7. Reject lack of sleep
8. Excess fat in the body dissolve
9. Elima=inate body fatigue

Ingredients: Garlic, Lemon, Vinegar, Ginger, Honey and Black Jeera

Buying Locations: For Distribution Call **416-388-5054** / Montreal No: **514-589-7617**
Soon all Grocer Stores: Scarborough -Markham - Mississauga - Brampton - Ajax

Now Available Stores: **New Spiceland, Pasumai Santhi, Suncity Supermarket, Poorani Villas, Vasantham Super Market**

# நவாலி இனப்படுகொலை; நெஞ்சம் கொதிக்கிறது

## - அழுவது அல்ல எழுந்து நிற்பதே உண்மை வீர நினைவு வணக்கம் -

"இன அழிப்பு எனப் பொதுவாகக் கூறும் பொழுது ஒருதேச இனத்தை உடனடியாக அழிப்பு என்பது பொருளல்ல. ஒரு தேச இனத்தினை முற்றாக அழிப்பதை விட அந்த இனத்தின் வாழ்வுக்குத் தேவையான அடிப்படைகளை திட்டமிட்ட வகையில் அழிப்பதும் அடங்கும். அத்தகைய திட்டங்கள், குறிப்பிட்ட இனத்தின் அரசியல் சமூக நிறுவனங்களின் ஒற்றுமையான இயக்கத்தை குலைப்பது, கலாசாரம், மொழி தேசிய உணர்வு, மதம், பொருளாதார முயற்சிகள், தனிப்பட்ட பாதுகாப்பு, சுதந்திரம், உடல்நலன் என்பவற்றை அழிப்பது எனப் பலவகையில் அமையும். இன அழிப்பு முழு இனத்தையும் நோக்கிச் செயற்பட்டாலும் அதனுடைய செயற்பாடுகள் அந்த இனத்தைச் சேர்ந்த தனிப்பட்ட ஒவ்வொருவரையுமே பாதிப்பனவாக அமையும். அவர்களது தனிப்பட்ட தன்மை காரணமாக அல்லாது அவர்கள் சார்ந்திருக்கும் இனம் காரணமாக அவர்கள் பாதிப்புறுவர்" என முதன் முதலில் இன அழிப்பு என்ற சொல்லை பிரசவித்து விளக்கிய லெம்கின் (Mr. Lemkin) அவர்கள் கூறுகின்றார்.

சிறீலங்காவின் பௌத்த - சிங்கள பேரினவாத அரசு, லெம்கின் கூறிய "இன அழிப்பு" என்ற விளக்கத்தின் நடைமுறை உதாரணமாக உலக அரங்கில் காணப்படுகின்றது. "சமாதானத்திற்கான போர்" என்ற பெயரில் தமிழர்களின் பாரம்பரிய தாயக மையமான யாழ்ப்பாண பிரதேசத்தை நோக்கிய முதலாவது படையெடுப்பைத் தொடங்கிய சந்திரிகாவின் சிங்கள ஆக்கிரமிப்பு அரசு, மக்களை கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையும்படி அரச கட்டுப்பாட்டு வானொலியிலும், விமானததில் இருந்து பிரசுரங்களை வீசியதன் மூலமும் மக்களைப் பணித்தது.




இலகுவாக வேட்டையாடுவதற்கே சிறீலங்கா

**இதனை சர்வதேசத்திற்கு பரப்புரை செய்து, சந்தை நலன்களுக்காகவும், ஆயுத விற்பனை இலாபங்களுக்காகவும், கேந்திர நோக்குகளுக்காகவும் தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் இழைக்கப்படும் சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரான இன அழிப்புகளுக்கு உரிய கண்டனம் தெரிவிக்காது - தகுந்த நடவடிக்கைகள் மேற்காள்ளாது - சாட்டுப்போக்குச் சொல்லும் சர்வதேச அரசுகளையும் அமைப்புகளையும் தட்டிக் கேட்பது நம் கடமை. எம் மக்களின் நியாயத்துக்கு உதவும்படி, அமைதி - மனித நேயத்தில் அக்கறை கொண்ட உள்ளங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.**

சிங்களப் படையினர் வருகின்றனர் என்பதை அறிந்த மக்கள் சாவுப்பயத்துடன் பெரும் அவலப்பட்டு பல பகுதிகளுக்கும் சிதறிச் சென்றனர். இதில் ஒரு பகுதியினர் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தினை நோக்கி உயிர்காக்கும் நோக்குடன் முண்டியடித்துக் கொண்டு சென்று அங்கு தஞ்சமடைந் திருந்தினர். தங்களை ஒட்டுமொத்தமாக அரசு இத்தகைய கபட அறிவிப்பைச் செய்கிறது என்பதனை அப்போது அவர்கள் எதிர்பார்க்கவில்லைத்தான்.

நவாலி தேவாலயம் மிக உயரமான கோபுரத்தைக் கொண்ட, மேலிருந்து தேவாலயம் என இலகுவில் அடையாளம் காணக்கூடிய கட்டிட அமைப்பாக உள்ளதால், தவறுதலாக வான் தாக்குதலுக்கு உட்படும் என்ற பேச்சிற்கே இடமில்லை.

இந்த வகையில் சிறீலங்காப் படைகள் அப்பட்டமான இன அழிப்புக்கு திட்டமிட்டன. அடி 9ஆம் திகதி 1995 மாலை 4.30 மணிக்கு ஆர்ஜென்ரினாவினால் தயாரிக்கப்பட்ட புக்காரா சண்டை விமானம் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தினைச் சுற்றிக் குண்டுகளை வீசியது.

பிஞ்சுக் குழந்தைகள் - பள்ளிச்சிறுவர்கள் - கர்ப்பிணித் தாய்மார் - வயோதிபர்கள் - நோயாளிகள் - இளைஞர்கள் எனப் பலர் குண்டு வீச்சுக்கு இரையாகினர். தஞ்சம் தேடி வந்த மக்கள் வெள்ளம், இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். அவ்விடத்திலேயே 141 உயிர்கள் அநியாயமாகப் பலி கொள்ளப்பட்டன. காயப்பட்டவர்களை அந்தக் கடுஞ் சண்டைச் சூழலிலும், உழவு இயந்திரங்களில் யாழ். மருத்துவமனை நோக்கி எடுத்துச் சென்றனர். பலருக்கு உடல் உறுப்புக்களை அகற்றியே அவர்களை உயிர் காப்பாற்ற வேண்டிய நிலையில் மருத்துவர்கள் தவித்தனர்.

இந்த மனிதப் படுகொலையை - இன அழிப்பை உலகுக்கு அம்பலப் படுத்திய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை கடுமையாகக் கண்டிப்பதில் தான் சந்திரிகா அரசு அக்கறை காட்டியதே தவிர, இம் மக்களுக்காக ஒரு அனுதாப வார்த்தை கூறவேண்டும் எனும் எண்ணம் கூட இல்லாமல் தனது இன வெறியை எண்ணி மனமகிழ்ந்து எக்காளமிட்டது. சிறீலங்காவின் ஆட்சிப்பதவிக்கு வந்த சகல சிங்கள அரசுகளும் இந்தப் போக்கையே கொண்டிருந்தன. தமிழர்களைத் துன்புறுத்துவதில் சிங்களவர்கள் திருப்தி கண்டால் இதற்கு உற்சாகம் அளிப்பதையே இவைகள் கடமையாகக் கொண்டன. சிறீலங்காவின் பௌத்த - சிங்களப் பேரினவாத அரசு, தமிழர்களுக்கு அந்திய அரசு என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று தேவை?

கபொட் (FAFOD) சர்வதேச நிறுவனத்தின் லண்டன் பிரதிநிதி, இந்த நவாலி தேவாலய இனக்கொலை குறித்து அன்றை பிரித்தானிய வெளிவிவகார செயலர் திரு. மல்கம் றிப்கிண்ட் அவர்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் "சிறீலங்கா அரசு சர்வதேச போர் விதிகளை மீறி செயலாற்றுகிறது" எனத் தெளிவாகக் குறிப்பிட்டார். ஆக, நவாலித் தேவாலயம், நாகர் கோவில் பாடசாலைப் படுகொலைகள் சிறீலங்கா அரசினது இன அழிப்பினதும் சர்வதேச போர்க்குற்றச் செயல்களினதும் சரித்திரச் சான்றாக உள்ளது.

இதனை சர்வதேசத்திற்கு பரப்புரை செய்து, சந்தை நலன்களுக்காகவும், ஆயுத விற்பனை இலாபங்களுக்காகவும், கேந்திர நோக்குகளுக்காகவும் தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் இழைக்கப்படும் சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரான இன அழிப்புகளுக்கு உரிய கண்டனம் தெரிவிக்காது - தகுந்த நடவடிக்கைகள் மேற்காள்ளாது - சாட்டுப்போக்குச் சொல்லும் சர்வதேச அரசுகளையும் அமைப்புகளையும் தட்டிக் கேட்பது நம் கடமை. எம் மக்களின் நியாயத்துக்கு உதவும்படி, அமைதி - மனித நேயத்தில் அக்கறை கொண்ட உள்ளங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

- யோசப் -

# எண்பத்து மூன்றில் ஏற்பட்ட தழும்புகளே...

தெள்ளுதமிழின்
திருவடிபணிந்து
தேசத்தலைவனின் தரிசனம்
நினைந்து
உள்ள யாவையும் உரிமை
பெற்றிட
ஈகம் செய்திடும் எம்புலி வீரரின்
நல்ல லட்சிய யாகம் உணர்ந்து
நாட்டின் விடுதலை போற்றி
யுங்கள் முன்
உள்ளத் தன்பினால் ஓரிரு
கவிவரி
சொல்லி யென்பணி செய்து
தொடருவேன்!

கல்லு முள்ளிலும்



காட்டாந் தரையிலும்
அல்லல் ஆயிரம்
ஆயிரமாய் பட்டுச்
சொல் லொணாத் துயர்
சூழத் தமதுமண்
எல்லை காத்திடும்
எந்தமிழ் மக்களின்
வல்லமை தனை
வணங்கி யிவர்துயர்
செல்லும் நாளுக்காய்ச்
வல்ல தெய்வத்தை
வேண்டிப் பரவுவேன்!

பசியிற் தாகத்திற்
பட்டினிக் கோலத்திற்
தசை நரம்புகள்
தொங்கிடும் தோற்றத்திற்
திசை வரம்புகள்
தெரியாத காட்டினில்
அசையும் எங்கள்
அருயிர் உறவுகள்
ஆரயிர் உறவுகள்
வசை கடந்த ஓர்
விடுதலை வாழ்வுக்காய்
விசையுடன் அங்கு
விரைவது காண்கிறேன்!

உரப்பை கொண்டு
உடல்தனை மறைத்து
இரைப்பை அரற்றவும்
இனிய குழந்தைகள்
சுரப்பிகள் போரிற்
சுருண்டு கதறவும்
மரத்தின் நிழலில்
மரணித் தெழுகின்ற
உரத்தைத் தங்கள்
உயிரிலே யேற்றிக்
கரத்தில் விடுதலை
விளக்கினை ஏந்தி
நடக்கும் இவர்களின்
நாவென் ஒலிப்பேன்!

இனிய தமிழுக்காய்
ஈனற மண்ணுக்காய்
மனித நேயத்தின்
மானக் குரலுக்காய்ப்
புனித விடுதலைப்
பயண நிகழ்வுக்காய்...

கனியாக் காய்களாய்க்
காய்க்காப் பூக்களாய்த்
துணிவின் உச்சியிற்
தொடர்ந்தும் போர்க்கள
அணியில் நமிரும்
எங்கள் புலிகளின்
பணியில் நாமும்
தொடரப் பாடுவேன்!

எனக்காய் ஆயதம்
ஏந்திய தம்பிகாள்!
எனக்காயப் பாய்ந்த
என்னிளந் தங்கைகாள்!
எனக்காய் மடிந்த
என்னரும் குழந்தைகாள்!
எனக்காய்ப் பிறந்த
என்னரும் வேங்கைகாள்!
பிணக் காடாகியும்
பெருமையைத் தாங்கும்
மணித் தாய்நாட்டின்
மாதவ மைந்தர்காள்!

உமக்காய் நாம்செய
ஒன்றுதான் உண்டு!
மனத்தால் பணத்தால்
உளத்தால் உறுதியாற்
சளைக்கா இனமாய்ச்
சங்கமித் தும்முடன்
உழைத்தல் ஒன்றே...
என்றிங்குரைப்பேன!

உம்மை யழித்திட
உலகெலாம் அலையும்
அம்மையார் ஏவிய
அரக்கத் தமிழரின்
பொய்மை முகத்தைப்
பிய்த்திடும் அஞ்சா
உண்மை யுலகினைப்
படைத்திட எழுவோம்!

எண்பத்து மூன்றின்
ஆடியில் நிகழ்ந்த
துன்பத்தின் நிழலைத்
துறவாத வழியுடன்
இன்றைக்கும் வாழும்
இனிய தமிழரே!

எம்சொத்தை யிழந்தோம்!
உடமைகளை எரியவிட்டோம்!
தென்பட்ட திசையெல்லாம்
தெருவேறிப் புறப்பட்டோம்!
கலைத்தாய் கதறினாள்
கல்வித்தாய் குரடானாள்!
நிலத்தாய் எமைப்பார்த்து
நெஞ்சு வெடித்தழுதாள்!

எத்தனை ஆடிகள்!
எத்தனை மிதிகள்!
எத்தனை வெடிகள்!
எத்தனை குண்டுகள்!

எத்தனை இழிவுள்!
எத்தனை பொழிவுகள்!
எத்தனை அழிவுகள்!
எத்தனை இழப்புகள்!

அன்புத்தாய் அழுதாள்
உன் தந்தை உயிர் துறந்தான்
தன்பட்டு உடல்கருகி
நீறானாள் உன் தங்கை!
அம்பிட்டுச் சிறைபோனான்
அடங்காத உன்தம்பி!

தன்பொட்டையிழந்து
தாலியையும் பறிகொடுத்துக்
கும்பிட்டுக் கதறிக்
கொடியவர் முன்தான்வீழ்ந்து
தன்கற்பைக் காக்கச்
சவமானாள் உன்அக்கா!

எண்பத்து மூன்றில்
ஏற்பட்ட தழும்புகளே
எம்முட் பலரை
ஏற்றி யனுப்பின்
துன்பத்தின் கமையுடன்
தூர தேசங்கள்
விண்தொட்டுப்
பறந்தோம்!
மண்விட்டுப் பிரிந்தோம்!

எண்பத்து மூன்றில்
எமது தமிழரின்
கண் சற்றுத்
திறந்தது!

சாதிப் பெருமையிற்
சல்லாபித் திருந்தவரும்
நீதி தேவனின்
நிழ்ல்தோடி நடந்தார்கள்!
காதிற் பூவைத்துக்
கவுக்குட் கிடந்தவரும்
நாதியிலை யென்று
நாட்டுக்குள் இணைந்தார்கள்!
வாதித்துப் பிழைத்தோரும்
வாய்விற்றுப் பிழைத்தோரும்
பேதித்து நின்றோரும்
பேரணியில் இணைந்தார்கள்!

எல்லாத் தமிழரும்
ஒன்றானார் சிங்களத்தின்
பொல்லா அரசின்
பொறுப்பற்ற கொடுமையினால்
எல்லாத் தமிழரும்
ஓரினமாய் ஆனார்கள்!

எண்பத்து மூன்றில்
எரிந்தது எம்தேசம்!
நம்பற்றும் நம்முள்
நம்பற்றும் நம்முள்
நன்றாக எரிந்தது!

சிங்களப் பௌத்தம்
மூட்டிய செந்தீ
எங்களைப் புடமிட்டு
இனமானம் தந்தது!

முப்பத்தெட்ட ஆண்டுகள்
பறந்தன இன்றுடன்
பாவியர் செய்த
படுகொலை அழிப்புகள்
இதுவரை ஓய்ந்ததா?
இல்லை - இல்லை!
முதுகெலும்புடைக்கும்
முயற்சிதான் தளர்ந்ததா?
சதியும் பொய்யும்
சற்றேனும் குறைந்ததா?
அதற்குப் பதிலாய்...
ஆண்ட பரம்பரை
தனக்கு முப்படை
சமைப்பதில் முனைந்தது!

சிங்களப் பௌத்த
மகனே கேள்நீ!
கொங்கு வாற்பேய்களின்
துணையுடன் நீசெய்யும்
பொங்கல் சுவைக்காது!
புலிநிலம் சளைக்காது!
எங்கள் தமிழன்
எழுவான் மீண்டும்!
தழுவி மகிழ்வான்!

மனிதத்தை மாய்க்கும்
மாயப் பிசாசே!
புினதராம் புத்தரைப்
புதைக்கும் பிக்குகாள்!

நானுனக் குரைப்பேன்!
முக்கியக் குறிப்பொன்று
முடிந்துகொள்சேலையில்!

மக்கள் துயரமும்
மாண்புடை வீரமும்
இக்கால நிகழ்வடா!
இதை நீ பாடடா!
சுக்கல் இலக்கியச்
சோம்பேறிப் புலவா!
பக்கலில் நடக்கும்
பரணியைப் பாடாமல்
எக்காலங் கண்டு
இறுமாந்து நிற்கிறாய்?

ஈழத் தமிழன்

மறக்காதீர் நீர் அன்று
வந்த பாதையை!
வாழ்க்கையில் இரத்தல்
செய்திரு என்று
சிறுமையைத் தேடாதீர்!
தலைக்குத் திரட்டித்
தம்மை வளாக்கும்
கலைநிதி முதலைகாள்!
கண்களைத் திறவுங்கள்!

கந்தையைக் உடுப்பினும்
கஞ்சியைக் குடிப்பினும்
தந்தை தாய் உலவிய
தாயகம் போற்றிடும்
சிந்தையிருப்பின்

# நீங்கள் சிந்திய குரதி எங்கள் நெஞ்சங்களை உறுதியாக்க நடக்கின்றோம் விடுதலைப் பாதையில் நம்பிக்கையுடன் நாமும்



தரையிற் கடலிற்
தாக்குதல் முடித்து
இரையும் விமானப்
படையையும் தகர்த்தது!

தமிழன் படையுடன்
தரணியில் நிமிர்ந்தான்!
தலைவன் பார்வையின்!
தீர்க்கத்தை யுணர்ந்தான்!

அடக்கியெமது மண்
ஆளலாம் என்றொரு
விடக் கனவுடன்
விடாப்பிடியாகத்தன்
படைக் கணங்களைப்
பயிற்சி செய்தும் பல
தடைக் கரங்களால்
தாக்கியும் இறுதியில்
முடக்குவாதத்தால்
முனகிடும் அரக்கியின்
குடைக்கு ஓரிரு
செய்திகள் சொல்லுவேன்!

புதுயுகம்
படைக்கும் புலிகளை
அவர் பெறும் வெற்றியை
உடைக்கும் நோக்குடன்
உலகெலாம் உதவிகள்
கிடைக்கும் என்று ஓர்
காற்தமிழ் காமரை
இடைக்கிடை எல்லாக்
கடைக்கும் அனுபினாய்!
அடைக்கும் வழிகளும்
உலகிடம் கோரினாய்!

எங்கள் இளைஞரை
இனிய மலர்களைக்
கொன்று குவித்திடும்
இராணுவப் பேய்காள்!

ஒன்று நான் சொல்வேன்!
உறுதியாய்ச் சொல்வேன்!

பனித்தளம் விலகும்!
பாறைகள் தகரும்!
இனிக்களப் போரில்
இமயங்கள் நகரும்!
பிணைத்த விலங்குகள்
பொடிப் பொடியாகும்!
பேடியர் கூட்டம்
படிப்படி ஓடம்!

விண்ணிற் கொடியெழும்!
மண்ணில் அரசெழும்!
கண்ணிற் கதிரெழும்!
காலம் கவிசொலும்!

அக்கரை வாழும்
அன்புச் சகோதரா!
சக்கரை இதழையும்
சந்தணத் தொடையையும்
சொக்கிட அசையும்
சுந்தர இடையையும்
முனகிக் கதறித்
திக்குற் தமிழிற்
திரப் பாடலாக்கி
வக்கற்ற வாழ்விலே
வரலாறு படைத்திடும்
நக்கற் கவிஞனே!

எழுந்தான் படையாய்!
தமிழ் வாழத் தமிழர்
தரணியில் நிமிர!
கோழையுகத்தின்
குடலினை யுரவி
மாலையாய்ப் போட்டு
மரணத்தை வென்றான்!

நாளையுலகத்திற்கோர்
நல்ல தலைவனை
நாட்டிற்கும் உலகத்
தமிழர்க்கும் தந்தான்!

சங்கத் தமிழன்
சரக்குகள் பொறுக்கி
தன்னை நிரப்பும்
தறுதலைக் கலைஞர்!

உன்கை விரல்கள்
ஒருமறை உண்மையின்
பொன் மை தொட்டுப்
பெருமையைப் பாடட்டும்!
தொன்மையில் உயிர்த்த
எந்தமிழன்னையின்
கண்கள் பனிக்கின்ற
காட்சியைக் காண்ட்டும்!
சங்கைத் தொடட்டும்!
சரித்திரம் ஆகிடட்டும்!
பங்கைச் செய்நீ
சொந்தமண்விட்டு
வந்ததும் அந்தமண்
எந்தமண் என்று
இழிவுடன் கேட்கும்
மந்திகள் கூட்டமே!

செல்வம் அதுவாம்!

முந்தைநாட்கிடைத்த
மூட்டை முடிச்சுகள்
சொந்தமாகாது
சுதந்திரமாகாது!

ஆலயக் கதவுக்குள்
ஆதிக்கம் நடத்தும்
வாலிப உளங்களே
வாருங்கள் வெளியே!
சேலையைக் கொடுத்த
கண்ணனாய் மாறுவோம்!
சிதம்பர தாண்டவம்
நாங்களும் ஆடுவோம்!

கற்பனை கடந்த
சோதியாய் ஒளிர்வோம்!
கருணையோடு எம்
கடமையைச் செய்வோம்!

வந்து சேருங்கள்
தமிழர் அணியில்
வாழ்வோம் ஓரிரு
கணங்களாயினும்
எங்கள் இனத்துக்காய்
எதிர்ப்புகள் தகர்ப்போம்!
உண்மைப் பிறப்புக்காய்!
உலகையும் எதிர்போம்!

-புலவர்-

## தமிழர்களைக் கொலைசெய்வதன்மூலம் வசதியாக வாழலாம்! –ரூபவாகினி தொலைக்காட்சியின் பிரச்சாரம்–

27.07.1983 - தமிழர்களுக்கெதிரான வன்முறையின் உச்சக்கட்டம். அன்றிரவுதான் இரண்டாவது வெலிக்கடைப் படுகொலை நடைபெறுகின்றது. அதேதினம் இரவு ரூபவாகினி ஒரு சிங்கள நாடகத்தை ஒளிபரப்பியது.

அதன் கரு என்னவெனில்... மூன்று நண்பர்களில் ஒருவன் நேர்மையான வழியில் உழைக்க, மற்றவன் களவுகளைச் செய்வதன் மூலம் சம்பாதிக்கிறான். இவனுக்கு மற்றைய இரு நண்பர்களும் புத்திமதிகூறியும் அவன் கேட்கவில்லை. ஒரு நாள் தமிழ்ப்பெரியார் ஒருவர் அவனுக்கு அறிவுரைகள் சொல்ல, அவன் அப்பெரியாரைக்கொலைசெய்து விட்டு அவருடைய உடைமைகளைக்கொள்ளையடித்துச்சென்று, "நீங்கள் இவ்வளவு நாட்களும் உழைக்க முடியாததை நான் ஒரு தமிழினைக் கொன்றதன்மூலம் சம்பாதித்துவிட்டேன்" என தன் நண்பர்களிடம் கூற, அவர்களும் அவனது வழியைப் பின்பற்றுகின்றனர்.

ஆதாரம்: "தமிழின விடுதலை" இதழ் 2ஜ ஆதாரமாகக் காட்டி
'தளிர்' சஞ்சிகை (புரட்டாதி – ஐப்பசி 1983)

## தெளிவூட்டத் தெருவீதி முழக்கமிடுவோம் வாருங்கள் அணிநடைக்கு தமிழர்களே!

அங்கீகாரத்தைக் கோர இதன் வழியாக, தமிழீழ மண்ணில் அமைதி தோன்ற நடாத்தப்படுவதே போராட்டங்களில் பங்குபற்றி, சர்வதேச உலகம் எம் மக்களின் நிலையை இனம் காண உழைக்க வேண்டியது. எம் தலையாக கடமையாகும். 1983 இல், 50 இற்கு மேற்பட்ட பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட, பல சர்வதேசத் தலைவர்கள் இவ் இன ஒழிப்பைக் கண்டித்து, நீதியான விசாரணை நடத்தும் படி, சிறீலங்காவைக் கேட்டனர். ஐரோப்பிய பாராளுமன்றம், "துன்புறும் இனமாக". இலங்கைத் தமிழர்களை அறிவித்து, அகதி நிலை வழங்கியதும் அல்லாமல் அதிகாரப் பரவலாக்கம் செய்யும்படி, சிறீலங்காவை வற்புறுத்தியது. ஐக்கிய நாடுகள் சபையும் பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், சமாதானக் குழுக்கள் சிறீலங்காவை கண்டித்து, நீதி விசாரணை கேட்டனர். ஆனால், நடந்தது என்ன? முன்னையைவிட, பல மடங்காக இன ஒழிப்பைச் சிறீலங்கா அதிகரித்து, தொடர்ந்துவருகின்றது.

இதனை சர்வதேச உலகுக்கு எடுத் துக்கூற நாம் தயங்கலாமா...? ஒரு சில மணித்துளிகளை, தாய்மண் ணுக்கு கடமை செய்யவென ஒதுக்கி, போராட்டங்களில் பங்குபற்றி, உண் மை நிலையை எடுத்துரைக்க திரண்டு எழுவோம். - களத்தில் 22.7.1994









# சிங்கள சாதிபேத அரசியல் போட்டிக்கு பலிகடாவாகும் ஈழத் தமிழினம்

தி.திபாகரன். M.A

### பகுதி 1.

இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் மட்டும்தான் சாதியடக்குமுறை உண்டு என்றும், சிங்கள மக்களிடம் சாதிப் பாகுபாடு இல்லை என்றும், அனேகர் கருதுவது மிகத் தவறானது. இருபகுதியினரிடமும் சாதிப் பாகுபாடு வலுவாக உண்டு, எனினும் தமிழ் மக்களிடம் சாதிப் பாகுபாட்டில் தீண்டாமை என்கிற அம்சம் உண்டு. ஆனால் சிங்களவர்களிடம் தீண்டாமை என்பது கிடையாது. ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் சாதி பேதமானது தமிழ் மக்களிடம் இருக்கின்ற சாதி பேதத்தை விடவும் அரசியல் மத ரீதியில் மிக ஆழமானதும் கடுமையானதும் ஆகும். இது பற்றி தெரிந்து கொள்ளாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதும் மிகப்பெரும் அரசியல் ரீதியான சமூக ரீதியான மனிதகுல ரீதியாக இழைக்கப்படும் மாபெரும் தவறாகும்.

சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் மதம், அரசியலில் குடும்ப சாதி மேலாதிக்கம், சிங்கள உயர் சாதியில் காணப்படும் உயர்சாதி மேலாதிக்கம் என்பன ஆழமான படிமங்களை கொண்டது. இவற்றில் சிங்கள ஆளும் உயர் குழாத்தில் பண்டாரநாயக்கா குடும்பம் சேனநாயக்கா குடும்பம் ராதுள்ள குடும்பம் போன்றவை முக்கிய மானவை.

பொதுவாக சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்ற உயர் குழாத்து திருமணங்கள் அரசியலிலும் முக்கிய பாத் திரத்தை வகிக்கின்றன. உதாரணமாக சந்திரிகா குமாரதுங்கா திருமணத்தின் போது அந்தக் குடும்பங்கள் இரண்டாக உடைந்தது. ஆனால் குமாரதுங்கவின் மரணத்தின்போதுதான் மீண்டும் இணைந்தனர்.



சிறீமாவோ பண்டாரநாயக்கா குடும்பம்

சாதி ரீதியான குடும்ப அந்தஸ்தில் சிறீமாவோ பண்டார நாயக்காவின் ராத்துல குடும்பமும் இரண்டாவதாக பண்டாரநாயக்காவின் குடும்பமும் மூன்றாவதாக சேனநாயக்க குடும்பமும் அடுத்து ராஜபக்சே குடும்பமும் என இருக்கின்ற உயர் குலத்துக்கு இடையிலேயே கடுமையான சாதி பேதங்கள் உண்டு. இவற்றுக்கு இன்று இருக்கக்கூடிய மத அரசியல் ரீதியான விடயங்களை இங்கே முக்கியமானவை. சிங்கள மக்கள் மத்தியில் ஒரு வார்த்தை உண்டு. அதாவது சிங்கள-S பௌத்த-B கொய்கம-G.

இந்த SBG தான் இலங்கை அரசியலையும் சிங்கள மக்களின் அரசியலையும் தீர்மானிக்கின்ற சக்தியாக விளங்குகிறது. அந்த வகையில்தான் இக்கட்டுரை இலங்கை அரசியலை சாதி அடிப்படையிலான மேலாதிக்க குணாம்சங்களை ஞடீபுயின் அடிப்படையில் நோக் குகிறது. இந்த சிங்கள உயர்குழா சாதிய மேலாதிக்கத்தை தெரிந்து கொள்ளாமல் தமிழ் மக்கள் சிங்கள அரசியலை கையாள முடியாது.

ஏனெனில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு மாயை உண்டு சிங்கள மக்கள் மத்தியில் தீண்டாமை இருந்தமையினால் சிங்களவர் மத்தியில் சாதிப் பாகுபாடு இல்லை என்றும் தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமே சாதிப் பாகுபாடு உண்டு என்ற கருத்தும் நிலவுகிறது.

இலங்கை அரசியலில் ஆரம்ப காலத்தில் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கை அரசியலில் சிங்களவர்கள் மத்தியில் இரண்டு சாதிப் பிளவு அரசியல் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஒன்று சிங்கள பௌத்த கொய்காம இரண்டு சிங்கள கரவா என்பது மீன்பிடித் தொழிலோடு சம்பந்தப்பட்டது

சிங்களவர் மத்தியல் பல சாதிக் கட்டமைப்புகள் இருக்கின்றன அவையாவன

1. அஹிங்குந்தய (நாடோடிகள்)
2. பட்டஹல - குயவர்
3. பத்கம - பாரம்பரிய விவசாயிகள் (பிரித்தானிய ஆட்சியின் போது இவர்கள் பல்லக்குத் தூக்கிகளாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள்)
4. பெராவ - பறையடிப்பவர்
5. கொவிகம - பாரம்பரிய கமக்காரர்கள் மற்றும் பண்ணையாளர்கள்.
6. ஹாலி - நெசவாளர்கள்
7. ஹன்னாலி - தையற்காரர்
8. ஹீனு - சுன்னக்கல் செய்பவர்கள்.
9. கின்னரய - பாய் பின்னுபவர்கள்.
10. நவந்தன்ன - பொற்கொல்லர். (பல கிளைச் சாதிகளைக்கொண்டது)
11. பமுனு - கூலி விவசாயிகள்
12. பன்ன - புல்வெட்டுவோர்
13. அம்பெட்ட (பனிக்கி) - முடி திருத்துவோர்
14. பட்டி - கால்நடை வளர்ப்போர்
15. பொரவக்கார - மரம் தறிப்போர்
16. றதல - நிலப்பிரபுக்கள் (குறிப்பாக கண்டி இராச்சிய காலத்தில்)
17. ராஜக்கஇ ஹேன - சலவைத்தொழிலாளர்கள்
18. றொடியா -தாழ்த்தப்பட்டோர்
19. வக்கும்புர (ஹக்குறு) - கருப்பட்டி தயாரிப்பாளர்கள்
20. கராவ - பாரம்பரிய மீன்பிடித் தொழில் செய்வோர்
21. துராவ - பாரம்பரிய படைவீரர் - காலனித்துவத்திற்குப் பின் கள் இறக்குவோர்
22. கட்டர - விவசாயிகள்
23. தெமல கட்டர - தமிழ் தாழ்த்தப்பட்டோர்
24. பட்டஹல (கும்பள்) - குயவர்
25. ஹன்னலி - தையற்காரர்
26. ஹின்ன - சலாகம சாதியனருக்கான சலவைத் தொழிலாளர்
27. ஹாலி - நெசவுஇ ஐரோப்பியர் காலத்தில் கருவா தொழில்
28. கஹல - கொலைத் தண்டனை நிறைவேற்றுவோர்இ சுத்திகரிப்போர்
29. கின்னர - பாய் பின்னுவோர்
30. ரதா - உயர்சாதியினருக்கு உடைதுவைப்போர்
31. ஹின்ன - மாவு சலிப்போர்
32. சலாகம - கருவா செய்கையில் ஈடுபடுவோர்

சிங்கள சாதியமைப்புக்கும் தமிழ் சாதியமைப்புக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதை இங்கே காணலாம்.

உயர் சாதிக் கொய்கம இவர்களுடன் போட்டிக் உரியவர் களாக இரண்டாமவர் சிங்கள கரவா சமூகத்தினர். கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் என்ற வேறுபாடு வேறு. கொய்காம கரவ சாதிப்பாகுபாடு வேறு. ஆனால் இவ்விரண்டையும் ஒன்றான குழப்பிக் கொள்வது தவறானதாகும். இதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும் கண்டிச் சிங்களவர்கள் மத ரீதியான ஆதிக்கத்திற்கும் கரையோர சிங்களவர்கள் சனத் தொகை அடிப்படையில் அரசியல் ரீதியான ஆதிக்கத்தையும் கொண்டவர்கள்.

கண்டி பௌத்த கொய்கமவும் கரையோர பௌத்த கொய் கமவும் இரண்டும் இணைந்ததுதான் கொய்கம அரசியல் மேலாதிக்கம் ஆகும். இதுவே இலங்கையின் மத அரசியலை தீர்மானிக்கின்ற மேலாதிக்க கூட்டுக் குழுமாகும். உதாரணமாக கண்டி சிங்களவர்கள் தம்மை கரையோர ச சிங்களவர்களை விட மேலானவர்கள் என்று சொல்லிக் கொண்ட போதிலும் கரையோர கொய்கம பண்டாரநாயக்கா குடும்பம் அரசியல் நோக்கம் கருதி உயர்ந்த கண்டிச் சிங்கள ரத்துல குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ மாவை திருமணம் செய்ததன் மூலம் இரண்டு சாதியினரும் தம்மை சமன்செய்து பலப்படுத்திக் கொண்டனர்.

இதன் மூலம் பிரதேச ரீதியாக இரண்டு பட்டிருந்த கொள்கை மக்கள் இலங்கை அரசியலில் ஒன்று படுத்தப்பட்டனர். இத்தகைய திருமணங்கள் பல நடந் தேறின. இதன் ஊடாக இலங்கையில் மத ரீதியான ஆதிக்கத்தை கண்டி கொய்கமக்களும், அரசியல் ரீதியான ஆதிக்கத்தை கரையோர கொய்கமக்களும், பெற்றனர். இவ்விருவரும் இணைப்பின் ஊடாக இலங்கையில் கொய்கம மேலாதிக்கம் அரசியல் சமய சமூக மட்டத்தில் மேலே மேலெழுச்சி பெற்று அனைத்து வகை ஒடுக்கு முறையையும் முன்னெடுக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் சிங்கள அரசியலில் முதன்முதல் தோன்றிய முரண்பாடாக பௌத்த கொய்கமக்களும் கரையோர கரவ சமூகத்திற்கும் இடையே வெடிப்பு ஏற்பட்டு பிளவுபட்டது. இந்த கரவ சமூகத்தில் கணிசமானவர்கள் கத்தோலிக்க கிறிஸ் தவர்கள் என்பதுவும் கவனிக்கத்தக்கது.

இலங்கையில் சிங்கள பௌத்த கொய்கம ஆதிக்கத்துக்கு எதிராக அவர்களுக்கு அடுத்த தட்டில் இருந்த சிங்கள கரவா சமூகம்தான் புரட்சிகரமானதாக வெடித்து எழுந்தனர்.

இலங்கையில் மார்க்சியத்தின், கம்யூனிஸத்தின் தந்தை என அழைக்கப்படும் பிலிப் குணவர்த்தன கரவ சமூகத்தில் இருந்து வந்தார். இவருடைய மகன்தான் என்று வெளிவிவகார அமைச்சராக இருக்கும் தினேஷ் குணவர்த்தன அவர். பிலிப் குணவர்த்தனா வின் மனைவி உயர்ஜாதி கொய்கமக்களும் சமூகத்தைச் சேர்ந்தவர்.

பிலிப் குணவர்த்தன தந்தையாக கொண்டு ஜனநாயக ரீதியில் இலங்கையில் தோன்றிய இடதுசாரி அமைப்பில் இருந்து சிங்கள கரவ சமூகத்தைச் சேர்ந்த என் எம் பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா, விசா பெர்னாட் சோய்ஷா போன்ற தலைவர்களும், அரை இடதுசாரி யான விஜயகுமார ரணதுங்கவும் எழுச்சி பெற்றனர்.

இதில் பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா, இவரும் நேரடியாக மீனவ சமூகத்தைச் சார்ந்தவர்கள் மொத்தத்தில் இலங்கையில் கரவ துரவ சலாகம பிரவ சமூகத்தின் 20 வீதமானவர்கள் கொய்கம எதிர்ப்பு அணியினராகவே உள்ளனர். இன்றைய விமல் வீரவன்ச பிரவ சமூகத்தைச் சார்ந்தவர் என்பதும் கவனிக்கத்தக்கது. மேற்குறித்த கரவ துரவ சலாகம பிரவ சமூகத் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கி.பி 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென் இந்தியாவின் தமிழ்நாட்டின் கரையோரங்களில் இருந்து இலங்கை நோக்கி வந்து குடியேறிய மக்கள் கூட்டத்தினர். இதற்கான துல்லியமான வரலாற்றுப் பதிவுகளும் ஆதாரங்களும் உண்டு என்பதும் கவனிக்கத்தக்கது. மைக்கல் ரோபோட் அவர்களின் “கரவா பொலிடெக் இன் ஸ்ரீலங்கா“ என்ற நூலில் இதனை விரிவாக பார்க்கலாம்.

### பகுதி 2.

இலங்கைஅரசியலில்”கரவ” சாதியில் இருந்துதான் பிலிப் குணவர்த்தன, டாக்டர்.என் எம் பெரேரா, போன் றவர்களும், கரவ சாதியில் இருந்துகிளைவிட்ட “சலாகம” டாக்டர். கொல்வின் ஆர் டி சில்வா, அரை இடதுசாரியான விஜயகுமார ரணதுங்க போன்றவர்கள் ஜனநாயக மரபுகளுக்ககூடாக புரட்சிகரமான இடதுசாரி தலைவர்களாக வந்தார்கள்.

அவ்வாரறே ரோகண விஜயவீர, ரில்வின்.டி.சில்வா போன்ற இடதுசாரி ஆயதப் போராட்ட தலைவர்களும் “கரவ” சாதியிலிருந்து வந்தார்கள். ஜேவிபியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கரவ சமூகத்தை சேர்ந்தவர்களே. அவர்கள்தான் ஜே.வி. பி கிளர்ச்சியின் போது “கொய்கம”சாதிமேலாதிக்கவாதிகளால் விரக் கமின்றி அதிக அளவில் கொல்லப்பட்டார்கள் என்பதுவும் இங்கு அடிக்கோடிட்டுக் குறிப்பிடத்தக்கது.

தமக்கேற்பட்ட தோல்விகளின் பின்னணியில் இத் தகைய புரட்சிகரமான இடதுசாரி தலைவர்கள் எல்லாம் பின்னாளில் “கொய்கம” சாதிய அரசியலுக்குள் அடிபட்டுச் ,சரணடைந்து கரைந்துபோனமை இன்னொரு துயரகரமான பக்கமே.

இத்தகைய நீண்ட ஒரு வரலாற்றுப் பின்னணியில் சேன

நாயக்க குடும்பத்திற்கும் பண்டாரநாயக்க குடும்பத்திற்கும் இடையேயான சாதிரீதியான போட்டி சுதந்திர காலத்துக்கு முன்னரே இருந்துவந்தது. அது சுதந்திரத்தின் பின்னர் பெரி தாக வெடிப்பு எடுத்து இரண்டு கட்சிகள் என்ற வடிவத்தைப் பெற்றது.

"கொய்கம" சாதியைச் சேர்ந்த சேனநாயக்க குடும்பத்தின் குடும்ப மேலாதிக் கத்தினால் அரசியல் பிரதமராக தனநாயக்காவையே கட்சி நியமித்தமை என்பது சாதிய ஒடுக்குமுறையின் வலிமையை இங்கும் காணமுடிகிறது..

அரசியலிற் தோல்வி அடைந்த இடதுசாரிகள் 1965 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுதந்திரக் கட்சிக்குள் கரைந்து



## சேனநாயக்க குடும்பம்

ஆதிக்கத்தை பங்கிடுவதில் முரண்பாடுகள் வெடித்தன. இதனால் பாதிப்படைந்த பண்டாரநாயக்க , ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறி 1951 ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ஒரு புதிய கட்சியை ஆரம்பித்தார். இவ்வாறு "கொய்கம" இரண்டு அணிகளாக அணிதிரண்டு தமது தேவைக்கேற்ற வகையில் சாதி அடிப்படையில் கூடுகளை அமைத்து மேல் எழுந்தனர்.

கரையோர சிங்களவர்களில் தென்மாகாண கரையோர சிங்களவர்கள் கடும்போக்காளர்கள். அதனால் தன்னை பலப்படுத்துவதற்கு பண்டாரநாயக்க தென்மாகாணத்தில் இருந்து இன்றைய ராஜபக்சக்களின் தந்தையும் கிறிஸ்தவ கத்தோலிக்கரான டொன் அல்வின் ராஜபக்சேவை தனது வலக்கரமாக இணைத்து வைத்துக் கொண்டார். அத்தோடு சிங்கள கரவ சமுகத்தின் முக்கியமான தலைவரான சி.பி.டி.சில்வாவையும் தனது இடக்கரமாக இணைத்துக் கொண்டு தனது கட்சியை பலப்படுத்தினார்.

பண்டாரநாயக்க குடும்பமும், டொன் அல்வின் ராஜபக்ச குடும்பமும் "கொய்கம" சாதியினர். அதனாலேதான் அதற்கு அடுத்த நிலையில் "கருவ" சமூகத்தை இணைப்பதற்காக இரண்டாம் கட்ட தலைவராக சி.பி.டி சில்வா உப தலைவராக நியமிக் கப்பட்டு கட்சி வடிவமைக்கப்பட்டது. எப்போதுமே தலைவர் களாக "கொய்கம" சாதியினரே இருப்பர். "கொய்கம" தவிர்ந்தவர்கள் உபதலைவர்களாகவே இருக்க முடியும். 1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது பண்டாரநாயக்கவினால் பல கட்சிகளை இணைத்து உருவாக்கப்பட்ட "மகாஜன எக்ஸத் பெரமுன" ( M.E.P) போலவே இன்று ராஜபக்சக்கள் தலைமையிலான 18 கட்சிகளின் கூட்டான பொதுஜன பெரமுனவும் சாதி அடிப்படையிலான கட்சிகளை இணைத்து உருவாக்கப்பட்டதுவே.

பிரதமராயிருந்த பண்டாரநாயக்க 1959 ஆம் ஆண்டு ஐ.நா.வுக்கு செல்லவேண்டி ஏற்பட்டபோது ஒரு பதில் பிரதமரை நியமிக்க வேண்டி இருந்தது. அதற்கு கட்சியின் உப தலைவராக இருந்த சி.பி.டி சில்வா "கரவ" சமூகத்தினர் என்பதனாலேயே அவரை பதில் பிரதமராக நியமிக்காமல் கொய்கம சாதியைச் சேர்ந்த "பாஷா பெரமுன" கட்சியின் ஒரே ஒரு உறுப்பினரான தகநாயகாவை நியமித்தமை நினைவிற் கொள்ளப்படத்தக்கது. ஐநா செல்ல இருந்த பண்டாரநாயக்க சுட்டுக் கொல் லப்பட்டதும் அவரின் மரணத்தின் பின்னர் போகும் வரலாறு ஆரம்பமாகிவிட்டது. 1970 உடன் "கரவ" சமூகத்தின் புரட்சிகரமான ஜனநாயக நாடாளமன்ற அரசியல் அஸ்தமித்து போகின்றது. அதனை அடுத்து ஆரம்பிக்கப்பட்ட ஜே. வி. பி. தலைமையிலான புரட்சிகர ஆயுதப் போராட்டம் "கொய்கம"சாதிய மேலாதிக்க உயர்குலத்தின் அரச இயந்திரத்தினால் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்கப்பட்டது. அப்போது 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்டனர். இதற்குப் பின்னர் கரவ சமூகத்தின் அரசியல் என்பது கொய்கம சாதி மேலாண்மை அரசியலுக்குள் கரைந்து அடிபட்டுப் போய்விட்டது.

அதேவேளை "உயர்ஜாதி" குடும்ப ஆதிக்க ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சாதாரண சலவைத் தொழிலாளி சமூகத்திலிருந்து வந்த பிரேமதாசா குழம்பில் காணப்பட்ட உதிரிப் பாட்டாளிகளை (லும்பன்) அடிப படையாகக் கொண்ட சண்டித்தன அரசியலின் ஊடாக படிப்படியாக மெல்ல எழுந்தார். இங்கே வன்முறை இல்லாமல் கொய்கம தவிர்ந்த மற்றவர்களால் வெற்றி பெற முடியாது என்பது கவனிக்கத்தக்கது.

பிரேமதாசாவின் தலைமைப் பதவியை தடுக்க ஜே .ஆர் . ஜெயவர்தன பல வகைகளிலும் முயன்றார். அவ்வாறே மகா சங்கங் கத்தினரும் பிரேமதாசவை தடுப்பதற்கான எல்லா வகையான முயற்சிகளையும் செய்தார்கள். ஆயினும் நெருக் கடி நிலைமைகளை பயன்படுத்தி பிரேமதாசா தடைகளை கடந்து சென்றார் என்பதே பொருத்தமானது.

அன்றைய காலத்தின் இந்திய இராணுவ பிரசன்ன நிலைகளைப் பயன்படுத்தி இந்திய எதிர்ப்பு வாதத்தை முன்னிலைப்படுத்தி சிங்கள மக்களின் விருப்புக்குரிய பாத்திரத்தை ஏந்தி பிரேமதாச தன் னுடைய பாதாள உலக கோஷ்டிகளின் வன்முறை அரசியலினூடாக அரசுத் தலைவரானார். இந்த நிகழ்வானது இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தின் பின்னணியில் தற்செயலாக ஏற்பட்ட அரசியல் விபத்தேயன்றி ஜனநாயக அரசியல் வளர்ச்சியின் வெளிப்பாடல்ல.

ஆனால் கடந்த அரசுத் தலைவர் தேர்தற் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணில் விக்கிரமசிங்க ஆளமை யற்ற தலைவர் என்பதனால் சஜித் பிரேமதாச முன்னிலை வகிக்கிறார் என்ற தோற்றப்பாடு கட்டப்பட்டது. ஆனால் அவரின் தலைமைத்துவத்தை சிங்கள- பௌத்த உயர்குழாமும் பௌத்த மகாசங்கங்களும் விரும்பவில்லை. அதனை ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

இந்நிலையில் ஆளுமையற்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு பதிலாக உயர் குழாத்தைச் சேர்ந்த கரு ஜயசூர்யாவை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் கட்சிக்குள் மும்முனைப் போட்டி ஏற்பட்டது. இதில் "உயர் சாதியினர" இரண்டாகப் பிரியும் நிலை ஏற்பட்டபோது சஜித்தின் பக்கம் மேலோங்கும் நிலை காணப்பட்டது.

இதனைக் கண்ணுற்ற உயர் குழாத்தினர் கருஜெயசூரியவை பின்வாங்க வைத்து சமாதானப்படுத்தி ரணில்-கருஜெயசூர்யா அணியினர் இணைந்து கொண்டனர். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாச நியமிக்கப்படுவது தடுக்கப்பட்டது. இருப்பினும் சாஜித் மிகக் கடுமையாக முயற்சித்த போதிலும் கட்சிக்குள் "உயர் " குழாத்தினர் மேற்கொண்ட எழுப்பினால் ஜனநாயகரீதியில் கட்சிக்குள் அவரால் நிமிர்ந்துநிற்க முடியவில்லை. இதனாலேயே சஜித் பிரிந்து தனிக்கட்சி அமைக்க வேண்டிய சூழல் தோன்றியது . இது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட சாதிப் பாகுபாட்டினால் ஏற்பட்ட பிளவேயாகும்.

எனினும் மலையகத் தமிழ் கட்சிகளினதும் முஸ்லிம் கட்சிகளினதும் அனுசரணையுடன் எதிர்க்கட்சித் தலைவராக அமையக்கூடிய வாய்ப்பை சஜித் பிரேமதாஸ பெற்றுக்கொண்டார். அவ்வாறு அவர் பெற்றிருந்தும் இரண்டாம் கட்ட தலைவர் என்ற நிலையை எட்ட முடியாதவராக உள்ளார். சிங்கள "உயர்" குலத்தினர், பௌத்த மஹா சங்கத்தினர் ஆகியோரின் அங்கீகாரமற்ற, எதிர்ப்புக்குரியவராகவே இருப்பது சஜித் பிரேமதாசவின் பலவீனமான பக்கமே. எனவே அவரால் இலங்கையின் தலைமைத்துவ நிலையை அடைவது என்பது எதிர்காலத்தில் அரிதினும் அரிது. அது சிங்கள பௌத்த குடும்ப ஆதிக்க சாதி அரசியலிலில் அனேகமாக நடைமுறைச் சாத்தியமற்றது போல் தெரிகிறது.

### *பகுதி 3.*

இலங்கையில் சிங்கள பௌத்த சாதியத்தைப் பற்றிக் குறிப்பிடும் மிகவும் பழமைவாய்ந்த மானுடவியல் நூலான "ஜனவங்சய"வில் 26 சாதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மத்திய கால இலங்கையில் இருந்ததாகச் சொல்லப்படும் சாதிகள் 17ஐ ஜே.டி.லெனரோல் குறிப்பிடுகிறார். பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர எழுதிய "இலங்கை மக்கள்" எனும் நூலில் 43 சாதிகளின் பட்டியலைக் குறிப்பிடுகிறார். இத்தகை பாகுபாடுகள் தமிழர் தரப்பிலும் உண்டென்பது மறுப்பதற்கில்லை.

சிங்கள சாதியம் குறித்து சிங்கள அறிஞர்களான நியூட்டன் குணசிங்க, அமுனுகம, செனிவிரத்ன பறங்கி இனத்தவரான மைக்கல் ரோபோட்ஸ் போன்ற பல அறிஞர்கள் விரிவாக எழுதியுள்ளனர். இந்நூல்களுள் முக்கியத்துவமானது மைக்கல் றொபட்ஸ் அவர்களின் Caste conflict and elite formation: The Rise of a Karava elite in srilanka 1500-1931 என்ற நூலாகும். . இவர் தமிழர் மரபு வழி தாயகத்தை ஒரு ஐதீகம் என கூறியும் எழுதியும் வந்தவர். இதிலிருந்து மைக்கல் றொபேட்ஸ் போன்ற சிறந்த புலமையாளர்கள்கூட பௌத்த சிங்கள பேரினவாத மனநிலையிலிருந்து விடுபடவில்லை என்பதுவும், விடுபட முடியாது என்பதுவே யதார்த்தம்.

இத்தகைய சாதிய அடிப்படையிலான இலங்கையின் அரசியல் வரலாற்றை இன்று மேற்கத்தைய மற்றும் அண்டை நாடும் உணரத் தவறவில்லை தற்போது அதன் கூர்மையை அவர்கள் மேலும் உணர்கிறார்கள் என தெரிகிறது. அதனாலேதான் தற்போதைய மேற்குலகின் அரசியல் நிலைப்பாடு என்பது சஜித் பிரேமதாசாவில் இருந்து மெல்ல மெல்லவிட்டு நழுவிச் செல்லும் போக்கினைக் கொண்டதாய்க் காணப்பட முடிகிறது. கடந்த காலத்தில் ஏற்பட்டது போன்ற ஆட்சிமாற்றம் அல்லது மாற்று அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான தலைவர் என்ற நிலையை சஜித் இழந்து வருகிறார் எனத் தெரிகிறது.

அத்தோடு மேற்குலகம் வேறு ஒரு சிங்கள உயர்குழாத்து தலைமை ஒன்றை தேடுகின்றது என்பதும் அண்மைய காலத்தில் மேற்குலகின் இலங்கை தொடர்பான அரசியல் காய்நகர்த்தல்கல் இருந்து உணர முடிகிறது.

ராஜபக்சேகளின் குடும்பத்தைச் சார்ந்த பொது ஜன பெரமுனவுக்கு எதிராக என்னதான் கூட்டுக்களை ஏற்படுத்தினாலும் சிங்கள பௌத்த சாதி அடிப்படையில் பலவீனமான இடத்தில் இருக்கும் சஜித் பிரேமதாச போன்றவர்களினால் முன்னிலை வகிக்க முடியாது என்பது உணரப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு சிங்கள சமூகத்தின் சாதி முறைமை அல்லது சாதி ஒடுக்குமுறை ஒரு முக்கிய காரணமாகும். எனவேதான் சாதித் தட்டில் பலவீனமான சஜித் போன்றோரை முதன்மையாகக்

கொண்ட இத்தகைய கூட்டுக்கள் இனி உதவாது என்பதையும், அது உடைந்துவிட்டது என்பதையும் உணர்த்தும் வகையில் மீண்டும் ரணில் அரசியலுக்குள் முதுகை நிமிர்த்த முயற்சிப்பதை வைத்துக்கொண்டு ஊகிக்க முடிகிறது.

அத்தோடு கடந்த சில வாரங்களாக மேற்குலகம் சார்ந்தவர்கள் ரணில் விக்கிரமசிங்காவை முக்கியத்துவப்படுத்தி அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இந்த அரசியல் செந்நெறியின் அடிப்படையில் எதிர்காலத்தில் இலங்கை அரசியலில் சஜித் தலைமையிலான ஒரு அணி எப்போதும் இருக்கும். ஆனால் அது ஒரு சக்திவாய்ந்த தலைமைத்துவமுடைய அணியாக அமையமுடியாது. இனி ஒருபோதும் அவ்வாறு வளரப்போவதுமில்லை. அதே நேரத்தில் சஜித் அரசியலில் இருந்து ஒருபோதும் ஒதுங்கி போகப்போவதுமில்லை. அவருடைய கட்சி இலங்கையைப் பொறுத்தளவில் இன, மத,சாதி அடிப்படையிலான ஒரு கட்சியாகவே தொடர்ந்து இனங்காட்டப்படும்.



பிரேமவாச குடும்பம்

எனவே ஐக்கியதேசியக் கட்சி தெளிவாக இரண்டு பிரிவாக பிரிந்த நிலையிலேயே இருக்கப் போகின்றது. இது எப்போதும் ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுனவுக்கு சாதகமானதுதான். எனவே இந்தப் பின்னணியில் ஆட்சி மாற்றம் என்பது பொதுஜன பெரமுனவின் உள்ளிருந்துதான் வரவேண்டும். அதுவும் இவர்களுக்குள் உள்ளவர்களில் ஒருவரைத் தலைவராகக் கொண்டுதான் ஏற்படுத்தப்படலாமேயெழிய ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஏற்படுத்துவது என்பது இயலாத காரியமாகும். 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றங்கூட சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்த மைத்திரிபால சிறிசேனாவைத்தான் ஜனாதிபதியாக்க முடிந்தது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். யுத்த வெற்றிவாதத்தின் அடிப்படையில் ராஜபக்ச குடும்பம், சுதந்திரக் கட்சியை, பொது ஜன பெரமுன என்ற இந்த மூன்று புள்ளிகளை இணைந்த ஒரு கையிற்தான் இலங்கையின் அரசியல் அதிகாரம் தொங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே சாதி மத குடும்ப ஆதிக்க இனவாத இந்திய எதிர்ப்பை கொண்ட சிங்கள பௌத்த அரசியலில் இந்த மூன்று புள்ளிகளையும் இணைத்த இணைப்புக்கு வெளியே ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு சாத்தியமே இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆளுமை அற்றவர். அதே நேரத்தில் சஜித் பிரேமதாச சாதி அடிப்படையில் இலங்கையின் அரசியல் இயங்கு தளத்தில் பலவீனமானவர். ஆனால் பொது ஜன பெரமுனவின் பலம் என்பது இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு, சீன ஆதரவு குடும்ப , சாதி ஆதிக்கம் என்ற அடித்தளத்திலிருந்து சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையின் முறுக்கேறிய திரட்சியாய் பௌத்த சிங்களவர்களின் ஆதரவுத் தளத்தில் நிமிர்ந்து நிற்பதுதான்.

எது எப்படி இருப்பினும் எப்பாடுபட்டாவது பொது ஜன பெரமுனவுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தி அவர்கயளுக்குள் உள்ள ஒருவரை தலைவராக முன்னிலைப்படுத்தினாலும் இறுதிக் கட்டத்தில் பொது ஜன பெரமுனவாதிகள் ஒரு குடைக்கீழ் ஒரு பக்கம்தான் போவார்கள். இத்தகைய ஆட்சிமாற்றம் தமிழர் பிரச்சனைக்கு ஒருபோதும் தீர்வாகாது. அதேநேரம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த நாடுகளின் நலன்களை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தலாமேயெழிய தமிழினப் படுகொலையையும், தமிழ் இன ஒடுக்கு முறையையும் இது தடுக்கவோ, தீர்த்து வைக்கவோ தமிழ் மக்களின் தேசிய அபிலாசையை நிறைவேற்றவோ மாட்டாது.

இதனை இலங்கை அரசியல் வரலாற்றினூடக பார்த்தால் புரியும். 1948 ஆண்டு ஆகஸ்ட் மாதம் டி.எஸ். செநனநாயக்கா. அரசாங்கத்துடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் இணைந்து அரசியல் நடாத்தியதன் விளைவு மலையக தமிழர்களின் வாக்குரிமையும், குடியுரிமையும் நடைமுறையில் பறிபோனமை , கிழக்கில் தமிழர் தாயக நிலத்தை சிங்களக் குடியேற்றத்தின் வாயிலாக சிங்கள ஆட்சியாளர்கள் பறிப்பதிலேயே முடிந்தது.

அதேபோல 1965 ஐக்கிய தேசியக் கட்சியுடன் டட்லி - செல்வா - பொன்னம்பலம் ஆகியோரிர் இணைந்து கூட்டுத் தேசிய அரசாங்கத்தை அமைத்தனர். இதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் மு.சிவசிதம்பரம் உப சபாநாயகர் பதவி பெற்றார். தமிழரசுக் கட்சி சார்பில் மு.திருச்செல்வம் அமைச்சுப் பதவி பெற்று தங்கள் சுயநலன்களை மட்டும் அடைந்தனர். ஆனல் தமிழ் மக்களுக்கு மேன்மேலும் அழிவையே தந்தது.

டட்லி–செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட பின்பும் மாவட்டசபை மசேதாவை டட்லி நிராகரித்து தோற்கடித்த பின்பும் தொடர்ந்து கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் திருமலை புனிதநகரப் பிரகடணத்துடன் 1969ல் திருச்செல்வம் பதவி விலகினாலும் கூட்டரசாங்கத்திற்கான தமது ஆதரவை ஆதரவை தமிழரசுக் கட்சி விலக்கவில்லை. இறுதி நேரத்தில் திருச்செல்வன் இப்பதவி விலகலானது 1970 அண்டின் தேர்தலை எதிர்கொள்வதற்கான தமிழரசுக் கட்சியின் நாடகம்தான்.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முழுமையான காலத்தையும்(ஐந்து ஆண்டு) நிறைவுசெய்த அரசாங்கம் இந்த டட்லி - செல்வா - பொன்னம்பலம் கூட்டு அரசாங்கம் தான் என்பதை இன்றைய தமிழ்த் தலைவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த டட்லி - செல்வா - பொன்னம்பலம் கூட்டு அரசாங்கத்தினால் தமிழர் தாயகநிலத்தில் பசுமை புரட்சி என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களை ஸ்தாபிதம் அடையச் செய்யவும் தமிழர் உரிமைகளைப் பறிப்பதிலேயுமே முடிந்தது.

2015 ரணில் சம்பந்தன் நல்லாட்சி அரசாங்கம் தமிழர்களை பாதுகாப்பதற்கு பதிலாக இனப்படு கொலையாளர்களை பாதுகாப்பதிலும், படுகொலை இராணுத்தை பாதுகாப்பதற்கும், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை மூடி மறைப்பதற்கும், சர்வதேச அளவில் தமிழர்களுக்கான அனுதாப அலையை தடுக்கவும், சர்வதேய ஆதரவை மழுங்கடிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

எப்போதும் சிங்கள தேசத்தில் நல்லாட்சி அரசாங்கம், கூட்டரசாங்கம், தேசிய அரசாங்கம் என பேசப்படுபவை சிங்கள உயர் குழாத்துக்கு இடையிலான அதிகாரங்களை பங்கிடுவதற்கும் அதே நேரத்தில் தமிழ் இன ஒடுக்கு முறையை சாதுரியமாக நிறைவேற்றுவதற்காகவுமே உருவாக்கப்பட்டன என்ற வரலாற்று அனுபவத்தை மறந்து விடக்கூடாது.

பெரும்பான்மைச் சிங்கள மக்கள்,சிங்கள சாதீய உயர் குழாம், கூடவே சிங்கள இடதுசாரிகள் என அனைவரும் ""பௌத்த சிங்கள தேசியம்"" எனும்போது உள்ளக முரண்களை சரித்துக்கொண்டு அவர்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான நிலைப்பாட்டை தவறாது எப்போதும் எடுத்தே வந்திருக்கிறார்கள்.

மதங்கொண்ட யானைகள்போல சிங்கள சாதிமேலாதிக்க அரசியல்வாதிகள் தமக்குள் மோதிக்கொண்டாலும் அதன் சக்தியின் பலப்பிரயோகம் தமிழின அழிப்பின் பக்கமே திசை திருப்பப்பட்டுவிடும். அவ்வாறே இந்த சாதி மேலாதிக்க அரசியல் யானைகள் கூட்டச் சேர்ந்து புணர்ந்து குதுாகலித்தாலும் அந்த இன்பத்தினாலுருவாகும் சக்தி தமிழினவழிப்பின் பக்கமே திசை திருப்பப்படும் என்ற வரலாற்று உண்மையை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும் இன்று ஆட்சி மாற்றத்துக்கு துணைபுரிய, பங்களிக்க முற்படுகின்ற அனைத்து தரப்பினரும் சிங்கள உயர் குழத்திற்கு இடையிலான அதிகாரப் பங்கீடலுக்காக ஒருங்கிணைகிறார்களேயே தவிர இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை எட்டவோ, தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வினை வழங்கவோ, அல்லது நீதியை வழங்கவோ அவர்கள் தயாரில்லை. மாறாக ஆட்சி மாற்றத்தின் ஊடாக மேன்மேலும் புதிய வழிகளில் தமிழ் இன ஒடுக்குமுறையை மேலும் விஸ்தரித்து முன்நகர்த்தி செல்வதற்கான புதிய மூலோபாயங்களை வகுத்துச் செயல்படுபவர்களாகவே சிங்கள தலைவர்கள் காணப்படுகின்றனர்.

எனவே ராஜபக்ஷக்களுக்கு எதிரான மாற்று தலைமை என்பதோ ஆட்சி மாற்றம் என்பதோ மேன்மேலும் இன ஒடுக்குமுறையை அதிகரித்து செல்வதற்கான வாய்ப்புக்களை ஊக்குவித்து அதிகரித்து செல்லவே உதவும்.

இலங்கையின்அரசியலை ஒரு வரலாற்று தொடர்ச்சியின் அடிப்படையில் நோக்குகையில் சாதிய, குடும்ப ஆதிக்கத்தின் விளைவுகளிலிருந்துதான் அவை தம்மை நிலை நிறுத்துவதற்கு தமிழின அழிப்பை கருவியாகக் கையில் எடுத்துக் கொண்டன என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

குடும்ப ஆதிக்கம் போட்டியின் விளைவுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் சேனநாயக்கா குடம்ப ஆதிக்கத்துடனான முரண்பட்டினால் அக்கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவரான பண்டாரநாயக்க ஐ. தே .க. இருந்து பிரிந்து 1951 ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைத்துக் கொண்டார். அவர் தன்னை வளர்த்துக் கொள்வதற்காக சிங்கள மக்கள் மத்தியில் வெளிப்படையான இனவாதத்தை கட்டவிழ்த்துவிட்டார்.

அவர்வாறுதான் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பண்டாரநாயக்கா குடும்பத்துக்கும் ராஜபக்சே குடும்பத்துக்கும் இடையிலான அதிகாரப் போட்டி 2005 தேர்தலின்போது பூதாகரமாக வெடித்தது. யுத்தவெற்றியின் பின்னர் ராஜபக்ஷக்கள் சுதந்திரக் கட்சி கூடாக பயணித்த போதிலும் 2015 தேர்தலின் பின்பு சுதந்திர கட்சி ராஜபக்ஷவின் கையைவிட்டு நழுவியது. இந்நிலையில் பண்டாரநாக்க குடும்ப வேரைக் கொண்ட சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி தமது ராஜபக்ச குடும்ப ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கான ஒரு தனி அமைப்பாக 2016 நவம்பர் மாதம் பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சியை ஆரம்பித்து அதிதீவிர இனவாத கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்தனர்.

அதே போலத்தான் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சாதி ஆதிக்கத்தின் தொடர் பயணமாக சேனநாயக்க குடம்பத்தின் இறுதி வாரிசான ரணிலுக்கும் சஜித் பிரேமதாசாவிற்கும் இடையிலான அதிகாரப் போட்டியின் விளைவுதான் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்து 2020ல் ஐக்கிய மக்கள் சக்தி என்ற புதிய அமைப்பை சஜித் பிரேமதாசா உருவாக்கியுள்ளார்.

இப்பின்புலத்தில் சிங்கள சாதிய உயர்குழாத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்ட கடந்தவாரம் அரசியல் எதிரிகளான ரணில்–மகிந்த இணைந்த விருந்துபசாரமும் மந்திராலோசனையும் அமைகிறது.

எனவே இலங்கை அரசியலில் சிங்கள கட்சிகள் குடும்ப ஆதிக்கப் போட்டியினால் இரண்டாக உடைவதும் அதன் தொடர்ச் சியாக சாதி அடிப்படையில் தற்போது உடைவதும் அதனூடாக அவைஅரசியலில் ஆதிக்கம் செலுத்துவதையும் புரிந்துகொள்ள தற்போதைய கட்சி நிலவரங்கள் நல்ல உதாரணங்களாகும்.

எனவே இனிவரும் காலத்திலும் இலங்கை அரசியலில் குடும்ப ஆதிக்கமும் சாதி ஆதிக்கமும் செல்வாக்குச் செலுத்தும் என்பதனையும் அதன் பின்னணி ஊடாகவே இலங்கை அரசியலையும் தமிழர் தாம் சார்ந்த அரசியலையும் நோக்க வேண்டும் என்பதுவும் கவனத்திற்குரியது.

தமிழ் தலைவர்கள் இவற்றைக் கொண்டுதான் வெளியரசுடன் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியம். வெளியரசுகளுக்கு ஆட்சி மாற்றம்தான் முக்கியமானதாக உள்ளது. இந்தச் சாதி, குடும்ப ஆதிக்க நிலமைகளுக்கு பொருத்தமானதாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வெளியரசுகள் முனைகின்றன. ஆனால் தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தை கருத்தில் கொண்டு இலங்கை அரசியலில் காணப்படும் சிங்கள–பௌத்த சாதி, குடும்ப மேலாதிக்க நோக்கு நிலையை புரிந்துகொண்டு அதனை எதிர்கொள்ளக் கூடிய வகையில் வெளியரசுகளை கையாண்டு தமிழ் மக்கான அரசியல் நலன்களை அடைவதற்கான மூலோபாயத்தை வகுக்க வேண்டும்.

வரலாற்றுரீதியாக சாதிபேத, குடும்ப அரசியல் ஆதிக்கப் போட்டியில் ஈடுபடும் சிங்களத் தலைவர்கள் அவரவர் தாங்கள் போட்டியில் முன்னணியில் நிற்பதற்காகவும், தாம் வெற்றி பெறுவதற்காகவும் கையிலெடுத்த பிரதான ஆயுதமாக தமிழ் இன ஒடுக்குமுறை அமைந்துள்ளது. இன ஒடுக்குமுறையை ஒரு கருவியாக போட்டி போட்டு



ராஜபக்சே குடும்பம்

கையில் எடுத்துக் கொண்ட சிங்களக் கட்சிகள் ஒவ்வொரு காலகட்ட போட்டிகளிலும் தமிழின அழிப்பினை முனைப்புடன் நிறைவேற்றுவதில் வெற்றி பெற்று முன்னோக்கி நகர்ந்து செல்கின்றனர் என்பதையே தமிழின அழிப்பு வரலாறு துயரத்துடன் பதிவு செய்கிறது.



முற்றும்

----------------------

# 1983 ஆடி இன அழிப்பு: தமிழர்கள் என்பதற்காகவே அவர்கள் அழிக்கப்பட்டனர்

- தமிழ்த் தேசியத்தின் குரல்வளையை நசுக்குவதே அன்றும் இன்றும் என்றும் சிங்கள அரசின் நோக்கு
- இந்த நோக்கே இன அழிப்புப் போக்குகளாகின்றன.
- போரை தமிழர் மேல் திணிக்கிறது.

**1983** ஆடி இன அழிப்புச் சம்பவங்கள்




தற்செயல் நிகழ்வுகள் அல்ல. காலனித்துவ விலகல் முதல் சிங்கள அரசுகள் திட்டமிட்டு வளர்ந்து வந்த சட்டப் பாதுகாப்புடனான இன வெறியுடன் கூடிய இனவாத அரசியலின் சரித்திர அறுவடை.

### 150வது ஆண்டுப் பரிசு

1833இல் பிரித்தானியர் தமிழ், சிங்கள அரசுகளை வலுக்கட்டாயமாக ஒருங்கிணைத்து ஐக்கிய இலங்கை என்ற ஒற்றையாட்சியை ஏற்படுத்தினர். அந்த இமாலயத் தவறு தந்த 150 ஆண்டுப் பரிசாக 1983 இல் தமிழர் இனப்படுகொலை இடம்பெற்றது என்பது மிகையல்ல. இதனை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், காலனித்தவம் உருவாக்கிய சிங்கள அரசுகள் தமிழர்களுக்கு அந்நிய அரசாக இருந்து வருவதே எல்லாப் பிரச்சினைகளினதும் ஊற்றாக உள்ளன என்பதை எடுத்து விளக்குவதற்கே.

### ஐ.நா. நிபுணரின் எச்சரிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு - உப ஆணைக்குழு குறித்து ஆய்வுகள் செய்துவரும் நிபுணரான லியோ கூப்பர் தான் 1982 ஆண்டளவிலேயே ஜெனிவாவில் உள்ள சிறீலங்கா தூதுவரை இனக்கலவரம் மூழ்வதற்குரிய சூழ்நிலைகள் அதிகரித்து வருவது குறித்து எச்சரித்தாக கூறியுள்ளார். இந்த இன அழிப்பின் பின்னணி 1833 ஆம் ஆண்டின் பிரித்தானியரின் ஒருங்கிணைப்பு முடிவுதான் எனவும் அவர் கூறியுள்ளார். மேலும் உப ஆணைக் குழுவில், 1983 ஆடி இன அழிப்பின் பின் 10க்கு 8 என்ற வாக்கு வித்தியாசத்தில் சிறீலங்கா அரசிடம் இருந்து தகவல்களைக் கோரி அடுத்த கூட்டத்தில் ஆராய்வது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது எனக் கூறும் கூப்பர், ஐ. நா. சபை இக்கட்டத்தில் உறுதியான நிலைப் பாட்டை எடுக்காமல் விட்டமை துரதிருஸ்டவசமானது எனக் கவலை தெரிவித்துள்ளார். இதனால் சிங்கள இராணுவம் அதிகளவில் தமிழர்களைக் கொன்று குவிப்பது வளர்ச்சியுற்றதாகவும் நிலைமை கட்டுப்பாட்டுக்கு மேல் சென்று விட்டது எனவும் கவலை தெரிவித் துள்ளார்.

1983 ஆம் ஆண்டில் சிறீலங்காவில் உள்ள தமிழர்கள் குறித்து சிறுபான் மையினர் உரிமைகள் குழுவின் அறிக்கையில் வோல்டர் சுவட்ஸ் அவர்கள், தமிழர்களின் மனித உரிமைகள் - வாழ்வதற்கான உரிமை, சொத்து உரிமை, பேச்சுரிமை காரணமின்றிக் கைது செய்யப்படுவதில் இருந்து விடுபடும் உரிமை போன்ற பல - சிறீலங்கா அரசினால் வன்முறைப் படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

ஒக்ஸ்போட் அறிஞரான டேவிட் செல்போர்ன் "தமிழ் மக்களின் உயிர்ப்பாதுகாப்பு, குடியுரிமை, அரசியல் பிரதிநிதித்துவம் போன்றவற்றுக்கு எதிரான பல குற்றச் செயல்களை சிறீலங்கா அரசு இழைத்து வருகிறது" என 1984 இல் பகிரங்கமாக குற்றம் சுமத்தினார். இவ்வாறாக, பல சர்வதேச அறிஞர்களும், நிபுணர்களும் 1983 இன அழிப்பையும் அதன் விளைவுகளையும் கடுமையாகக் கண்டித்தனர்.

### தமிழ்த் தேசியம் எதிரியாகக் காட்டப்பட்டது

சிங்கள அரசுகள், காலனித்துவ விலகலின் பின் தமிழர்களின் தமிழ்த் தேசியத்தை சிங் களவாகளுக்கு எதிரான துரொகத் தனமாகக் காட்டவதில் பெரும் அக்கறை காட்டின. இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைக் குறைப் பதன் மூலம் "சட்டவாக்கத்தில் அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்துவதைத் தடுத்தல்" என்பது சிங்கள அரசுகளின் தந்திரோபாயமாக காணப்படுகிறது. 1977, 1981, 1983களில் தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் இனக் கலவரங்களால் அச்சத்துக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டனர். இந்த நேரங்களில் எல்லாம் தமிழ் மக்களுக்கு ஆதரவான வார்த்தைகளைக் கூடக் கூறாத சிங்களப் பெரும்பான்மை அரசுகள், 1958 இனக்கலவரத்தை தமிழரசுக் கட்சியின் நடடிவக்கைகளின் பிரதிபலிப்பு எனவும் 1983 இனக்கலவரத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளின் விளைவு எனவும் வர்ணித்து தமிழீழத் தேசியத்தை சிங்களவர்களின் எதிரியாக காட்ட முனைந்தனரே தவிர பொறுப்பான ஜனநாயக அரசு என்ற வகையில் இத்தகைய கொடுமைகள் நடைபெறாமல் தடுப்பதற்கான எச்சரிப்புக்களையோ அல்லது சட்டப் பாதுகாப்புகளையோ நீதி அமுலாக்கங்களையோ செய்ததில்லை. 1983 இனக்கலவரத்தில் இதனைத் தெளிவாகவும் ஆழமாகவும் காணும் ஆய்வாளர்கள் 1983 இனக் கலவரமாக காணாது இன அழிப்பாகவே பிரகடனம் செய்கின்றனர்.

### 1983 இன அழிப்பின் சுருக்கமான விபரம்

லியோ கூப்பிரின் தகவலின்படி, 2,000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இன அழிப்பில் படுகொலை செய்யப்பட்டனர் எனவும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் கட்டாய இடப் பெயர்வுக்கு ஆளாகினர் எனவும் கூறுகிறார். வெலிக்கடைச் சிறையில் காவலில் வைக்கப் பட்டிருந்த 53 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதும், எவ்வளவு தூரத்துக்கு சிங்கள இனவாத அரசு கேவலமான செயல்களின் ஊற்றாக விளங்கியது என்பதன் சான்றுகளாக உள்ளன. தமிழ் மக்களுக்குத் தீங்குகள் விளைவிக்கப்பட்டு அவர்கள் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்கும் பொழுதெல்லாம் அது சிங்கள தேசியத்தின் வெற்றியாக வர்ணிக்கப்பட்டதே தவிர, மனித வதை என்று கூட பொருட் படுத்தப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள் தமது பாதுகாப்புக்கான வாழ்வுக்கான போராட்டமாக தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடாத்த வேண்டிய கட்டாயத் தேவை தொடர்கிறது.

### தொடர் கதை

தமிழர்களின் பொருளாதார வளத்தைக் குறிவைத்து நடாத்தும் சிங்களத்தின் வன்முறைச் செயல் 1983 உடன் முடியவில்லை. 1983 முதல் 1987 ஆடிக்கிடைப்பட்ட காலத்தில் தமிழர் தாயகத்தில் 69,400 வீடுகள் அழிக்கப்பட்டன. 30,000 வீடுகள் சேதமாக்கப்பட்டன. 11,300 வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டன. இதில் 8,000 முற்றாக நிர்மூலமாக்கப்பட்டன. மொத்தமாக 23.5 பில்லியன் ரூபாக்கள் தேசம் விளைவிக்கப்பட்டதாக ஜோன் எம். ரிச்சர்ட்சனும், எஸ். டபிள்யூ. ஆர். டி. ஏ. சமரசிங்கவும் குறிப்பிடுகின்றனர்.

சுருக்கமாகக் கூறினால், தமிழர்களின் பொருளாதாரத்தை நசுக்குவதும், அவர்களை இன அழிப்புக்கு உள்ளாக்குவது, அச்சுறுத்தல் மூலம் அவர்களைப் பணிய வைக்க முயற்சிப்பதுமே சிங்கள அரசுளின் தந்திரோபாயமாக இருந்து வருகிறது.

### அழிப்பு முயற்சிகள்

"சமாதானத்திற்கான போர்" என்ற பெயரிலும், பாதை சிறப்புக்கான முயற்சி என்ற பெயரிலும் நல்லாச்சிக்கான அரசு என்ற பெயரிலும் பலவிதமான புனை பெயர்களுடன் சிறீலங்கா ஜனாதிபதி(கள்) இன அழிப்பு முயற்சிகளையும், பொருளாதார அழிவுகளையும் தமிழர் மேல் தொடர்ந்து அமுலாக்கிக் கொண்டிருக்கின்றார். இவை எல்லாமே தமிழ்த் தேசியத்தை நசுக்க வேண்டுமென்பதை மையமாகக் கொண்டு செயற்படுகிறதே தவிர தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இடம்பெறவில்லை. இந்த உண்மையை, பேச்சுவார்த்தை முயற்சிகளில் சிறீலங்கா அரசின் சார்பில் இடம்பெற்ற போராசிரியர் ஜெயதேவா "பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு ஏற்பட்டுவரும் இக்கட்டான நிலைமை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து வரவில்லை. தமிழீழத் தேசிய வாதத்தின் அரசியல் தன்மையும் இராணுவ வலிமையும் பாதுகாப்பு முயற்சிகளுமே. (இவைகளையே சிறீலங்கா இரசு முட்டுக்கட்டையாக கருதுகின்றது) இந்தத் தமிழ் தேசிய வாதத்தையே விடுதலைப் புலிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்த உண்மைகள் ஏற்கப்படும் அல்லது இதற்கான சூழ்நிலைகள் மாற்றியமைக்கப்படும் வரை தெற்கிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டையும் பேச்சுக்களும் பல தடவைகள் நடைபெறும்" எனக் கூறியுள்ளார்.

(The biggest dilemma of a peace initiative of the state emanates not from the LTTE per se. But from the difficulty in coming terms with the political and military / defence gains of Tamil nationalism, which the LTTE represents. Tragically it may take many many more round of peace and war between the LTTE and the south either to accept this reality or to change its parameters.)

பேராசிரியர் ஜெயதேவாவின் கூற்று, தமிழ்த் தேசியவாதத்தைத் தான் சிங்கள அரசு எதிரியாக கருதுகிறது. இதனால் தமிழர்களை அழித்தொழித்தாவது தனது அரசியல் திணிப்புகளை மேற்கொள்ளத் துடிக்கிறது என்பதைத் தெளிவாக்குகிறது. 1983 முதல் இன்றுவரை இதுதான் (என்றும்) பேரினவாத சிங்கள அரசுகளின் நோக்கும் போக்குமாக உள்ளன.

இதனை மாற்ற வேண்டுமானால் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் தமிழீழத் தேசிய விடுதலைப் பேராட்டத்துக்கு தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்து அதனை வெற்றி பெற வைப்பது ஒன்றே வழி. இதனாலேயே தமிழர்களின் இன அழிவும் பொருளாதா நாசமாக்கலும் தடுக்கப்படலாம். தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் அமைப்பு தமிழ் மக்களின் பாதுகாப்பைப் பேணுவதினாலேயே இலங்கைத் தீவில் தமிழர்கள் பூரணமான இன அழிவுக்கு ஆளாக்கப்படாமல் தடுக்கப்பட்டு வந்தது.

இவற்றை சர்வதேசத்திற்கும் பரப்புரை செய்து தமிழர்களின் இன அழிவை - பொருளாதார நாசமாக்கலைத் தடுக்கும் பொறுப்பு புலம் பெயர் தமிழருடையது. - பற்றிமாகரன் -






சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபாரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

FRONTLINE COMMUNITY CENTRE

குடிவரவாளர்களுக்கான சேவைகள்

பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு

வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை

பொதுவான திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்

வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்

முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்

தன்னார்வத் தொண்டாற்றல்

(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9

Frontline Community Centre
frontlinecommunitycentre
http://fcccanada.org/



# துயர் பகிர்வு



மண்ணில்
10.07.1934

விண்ணில்
10.07.2021

# திருமதி கமலாம்பிகை சேதுநாதன்

**முன்னாள் ஆசிரியை**

**வயது 87**

## புங்குடுதீவு 10ம் வட்டாரம், இலங்கை

யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட கமலாம்பிகை சேதுநாதன் அவர்கள் 10-07-2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மு.க சின்னப்பா பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற சேதுநாதன் அவர்களின் ஆருயிர்த் துணைவியும்,

சிவா, சிவகலா, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

தயாளினி, நகுலநாதன், வானதி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நாகரத்தினம், தனலட்சுமி, வாமதேவன், கனகலிங்கம், சண்முகலிங்கம், மகேஸ்வரி மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கந்தப்பிள்ளை, சரவணமுத்து, குழந்தைவேலு, செந்திநாதன், காமாட்சி, அமிர்தம், இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

தியாகராஜா- நாகேஸ்வரி(புஸ்பம்), காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- செல்லம்மா, காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சம்பந்தியும்,

காயத்திரி, கஸ்தூரி, கபிலன், நிந்தியா, கவிஷ், லக்ஷா, கிஷான் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

14.07.2021 அன்று இறுதி கிரியை கனடாவில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
நகுலநாதன் - மருமகன் : +14162768108 சிவா - மகன் : +14167251732 கலா - மகள்: +19056428508
குமார் - மகன் : +16473941206 சிவா மாஸ்டர்(செட்டி) - பெறாமகன் : +14165691229
பஞ்சலிங்கம் - பெறாமகன் : +16476803683 முத்துலிங்கம் - சகோதரன்: +14167924794
சிவமோகன் - பெறாமகன்: +14167316006

# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipulanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa — 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa — 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# கறுப்பு யூலை 1983



சிங்கள ஒளிப்பட வல்லுநர் சந்திரகுப்த அமரசிங்க,
இந்த தமிழ் இளைஞன் கொல்லப்படுவதற்குச் சற்றுமுன் எடுத்த ஒளிப்படம்.
நிர்வாணமாக்கப்பட்ட இளைஞனைச் சுற்றி சிரித்து நடனமாடும் சிங்களவர்கள்.

இடம்:
பொரளை பேருந்து தரிப்பிடம்.

# தெளிவூட்டத் தெருவீதி முழக்கமிடுவோம் வாருங்கள் அணிநடைக்கு தமிழர்களே!

இலங்கைத் தீவின் வரலாற்றில் 1956, 1958, 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல் களை சிங்கள பௌத்த பேரினவாதிகள் பெருமளவில் நடாத்தியுள்ளனர். அதிலும் 1958 ஆம் ஆண்டுத் தாக்குதலும், அதன் வெள்ளிவிழாத் தாக்குதலான 1983 ஆம் ஆண்டுத் தாக்குதலும் இனஅழிப்புக்கான பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தமொன்றின் ஆரம் பமகவும், முடிவாகவும் காணப்படுகின்றது. இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் திட்டமிட்ட முறையில், சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் அரசாங்க கட்சிகளின் ஆளும் அரசாங்க கட்சிகளின் துணையுடனும் வழிகாட்டலுடனும் நடாத்தப்பட்டன. இதனால், இவை அரச பயங்கரவாதத்தின் முதலும், வளர்ச்சியும் உச்சகட்டமாக காணப்படுகின் றன.

இந்த வன்முறைத் தாக்குதல்களின் அடிப் படைக்காரணம், “இலங்கைத்தீவு சிங்களவர் க்கு மட்டுமே சொந்தம்” எனும் வரலாற்றுத் திரிபுவாதமும், பிரித்தானிய குடியேற் றவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட, ஒற்றையாட்சி அமைப்பு முறை தோற்றுவித்த, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் அரசியல் மேலாண்மையுமே ஆகும். வேறுவார்த் தைகளில் சொல்வதானால், இலங்கைத்தீவில் தமிழீழ மக்களின் இறைமையும், அரசம் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் வரலாற் றுக்கு முற்பட்ட காலம்முதல் தொடர்ந்து இருந்து வந்தது என்பதை அறிந்தும், உணர்ந்தும் இருந்த சிங்கள பௌத்த பேரின வாதிகள், வரலாற்று விபத்தினால், பிரித் தானியர் தங்களுக்கு அளித்திட்ட அரசியல் மேலாதிக்கத்தை பயன்படுத்தி, தமிழீழ மக்களையும் அவர்களின் இறமையையும் அரசியல் ரீதியாக செயலிழக்க வைப்பதற்கென மேற்கொண்ட ஆயுதமயப்படுத்தப்பட்ட நட வடிக்கைகளே இக்கலவரங்கள்.

1958 ஆம் ஆண்டு கலவரம் இலங்கை ஒற்றையாட்சியை கடைப்பிடிக்கக்கூடிய நாடு அல்ல பிளவுபட்ட தேசம் என்பதை உறுதி செய்தது. இதனை பி. ச. பாமர், அறுபதுகளில் எழுதிய “பிளவுபட்ட தேசம்” (Divided Nation) எனும் நூல் தெளிவுபடுத்துகின்றது. 1833 இல் பிரித்தானியர் கோல்புறுக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம், தமிழ் அரசுக்களினதும் சிங்கள அரசுக்களினதும் நாட்டு எல்லைகளை அழித்து, “சிலோன்” என்னும் ஒற்றையாட்சியைக் கொண்ட நிர்வாக இயந்திரம் ஒன்றை உருவாக்கினர் என்பதும் வரலாறு. இதன் விளைவா 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிங்கள பௌத்த பேரினவாதம், பௌத்த மறுமலர்ச்சி, சிங்கள மொழி கலாச்சார எழுச்சி எனும் காரனிக ளுடாக பௌத்த மதத்தலைவர்களால் நிறு வனப்படுத்துப்பட்ட “அழுக்கக் குழு”வாக (Pressure Group) மாற்றப்படுகின்றது. அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தல் இந்துமத மறுமலர்ச்சி என்னும் நோக்குகளில் செயற்பட்ட தமிழர்களின் அரசியல் தலைமைத் துவம், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கூர்மையை உணராது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் தமிழ்மொழி தமிழ்க் கலாச் சாரத்தின் எழுச்சியை ஏற்படுத்தாது, ஆங்கில மொழி, ஆங்கில நாகரிகம் எனும் சக்தியுள் ளும் சிக்கிக்கொண்டது. ஆயினும் 1930 ஆம் ஆண்டில் சகலருக்கும் வாக்குரிமை வழங்கப் பட்டதின் விளைவாக, இலங்கைத்தீவு “சிங்களவர்களின் நாடு” என்ற நிலைதோற் றுவிக்கப்பட்டதும், தமிழ்மக்களில் ஒருசிலர் தமிழ்த் தேசியத்தின் தேவையை உணர்ந் தனர். இருந்தபோதிலும், 1930 முதல் 1948 வரை தமிழ்த் தேசிய உணர்வு வீறுகொண்டு எழாதவாறு, அங்கிலம் படித்த தமிழ் தலை மைத்துவம் தனதுமிதவாத தன்மையில் இறுக்கமாக இருந்தது. சிங்களவர் கைக்கு ஆட்சிபாரப்படுத்தப்பட்ட 1948 ஐ அடுத்து, மலையகத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டதும் “தமிழரசு” என்கின்ற உணர்வுடன் கூடிய தமிழ்த் தேசியம் 1952 இல் உருவாகியது. இதனை அடுத்து, சிங்களத் தேசியம் தன்னை சட்ட நிலைப்படுத்தி, தனது அரசியல் மேலாண் மையை உறுதிப்படுத்தும் செயல்களில் ஈடுபட் டது. அதன் விளைவாகவே பண்டாரநாயக் காவின் “சிங்களம் மட்டும் சட்டம்” பிறந்தது.

இதனை ஜனநாயக ரீதியாக எதிர்க்க முற்பட்ட, தமிழ் அரசியல் தலைமைத் துவத்துக்கு, 1956 இல் காலிமுகத் திடலில் வைத்து, அரச பயங் கரவாம் பதில் கூறியது. அன்று கருக்கட்டிய அரச பயங்கரவாதம், சிங்கள பெத்த பேரினவாதிகளுக்கு உற்சாக “பானமாக்” மாறி, 1958 ஆம் ஆண்டு பரந்த அளவிலான இன அழிப்புக் கலவரத்தைத் தூண்டியது. ஆயுத ஒடுக்குமுறை மூலம் தமிழர்களை அடக்கியொடுக்கலாம் என்ற அரசியல் சித்தாந்தம், சிங்களக் கட்சிகளிடையே நிலை பெறத் தொடங்கியதும், தமிழர்களுடனான பேச்சவார்த்தை வழியிலான தீர்வுகள் அனைத்தும் அலட்சியம் செய்யப்பட்டன. 1960 ஆம் அண்டுகளில், தமிழ்ப் பகுதிகளில் சத்தியாக்கிரகம் மூலம் சிங்கள நிர்வாகத்திற்கு 3 மாதங்களாகத் தெரிவிக் கப்பட்ட எதிர்ப்பும், அரச பயங்கர வாதத்தால் படை பலம் கொண்டு அடக கப்பட்டது. சிங்கள அரசாங்கங்கள் ஆயுதப் படைகளின் ஆளணிகளை பலமடங் காக அதிகரித்துக் கொண்டன. 1972 இல் தன்னிச்சையாக சிங்கள பௌத்தத் குடியரசாக தன்னை மாற்றிக்கொண்ட இலங்கை அரசாங்கம், நாட்டின் பெயரையும் “சிறீலங்கா” என மாற்றிக்கொண்டது. அன்று முதல், அரசற்ற நாட்டினமாக்கப்பட்ட தமிழீழ மக் களை அஞ்சவைத்து, அடிபணியவைப்பதற்கு அரச பயங்கரவாதமே சிறீலங்கா அரசாங் கத்தின் கருவியாகியது. தமிழ் மக்கள் தங் களது தனியான தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தி, சிறீலங்காவின் அடக்குமுறை ஆட்சியை நிராகரிக்க எடுத்த முயற்சிகளுக்கு, “தீவிரவாதம்” என பட்டம் சூட்டப்பட்டது. பொலி சார், இராணவத்தின் கடமைகளைச் செய் தனர். இதன் விளைவாக, தங்கள் உயிர்வாழ்வுக்கு தமிழ் மக்கள் “கெரில்லா” போர்முறையைத் தேர்ந்தெடுத்தனர். இதனைப் “பயங்கரவாதம்” எனப்பெயர் சூட்டி, 1978 இல் “பயங்கரவாதத்தடைச்சட்டம்” என்ற கொடிய சட்டத்தை, சிறீலங்கா அமுல் செய்தது. அதேவேளை, தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை, அரச பயங்கரவாதத்தின் ஊடாக, சிறீலங்கா மேற்கொண்டது. 1977 இல் கலவரம் தூண்டப்பட்டது. 1981 இல் யாழ். குடாநாட்டுக்குள் அரச பயங்கரவாதம், சிறீலங்கா அமைச்சர் காமினி திசநாயக் காவின் வழிகாட்டலில் கட்டவிழ்த்துவிடப்பட்டு கடைகள், வீடுகள், யாழ். பொதுநூலகம் என்பன எரியூட்டப்பட்டன. வகை தொகை யற்ற முறையில், தமிழ் மக்கள் மீது, அரச பயங்கரவாதம் நாளாந்தம் கொடுங் கோலோச்சத் தொடங்கியது. அப்போது பாதுகாப்பற்ற, காலகட்டத்தில் தான், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய ஒரே விடுதலை இயக்கம்மாக வெளிப்பட்டனர். 1972 முதல் “புதிய புலிகள் இயக்கம்” - என்ற பெயரில் இயங்கிய விடுதலைப் புலிகள், 1978 முல் “தமிழீழ விடுதலைப் புலிகள்” என்ற புதிய பெயருடன், தமிழீழ மக்களின் அரசியல் விடுதலைக்கான அமைப்பாகப் பரிணா மடைந்தனர்.

1983 யூலை 23 இல் திருநெல்வேலியிலுள்ள, யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்,



1983 ஜுலை இனக்கலவரத்தின்போது இராணுவ சோதனைச் சாவடியில் தமிழர்கள்

தமிழ் குடிமக்களுக்குத் தீங்கு விளைவிக்கப் புற்பட்ட சிறீலங்கா இராணுவ அணியொன்று, விடுதலைப் புலிகளால் சிதறடிக்கப்பட்டு, 13 இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். வேர் ணன் கீவர்ட் கூறுவது போல், “இதுவே தமிழீழ மக்களின் அரசியல் வரலாற்றில் திருப்புமுனையாயிற்று”. தமிழீழ மண்ணில், தமிழ் மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்ய நடாத்தப்பட்ட இத்தாக்குதலை சாட்டாக வைத்து, சிங்கள பௌத்த பேரினவாத ஜே. ஆர். ஜெயவர்தனவாவின் தலைமையிலான அரசானது, தமிழீழத்துக்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் மேல், அரச பயங்கரவாதத்தை சிங்களக் காடையர்களுக்கூடாகக் கட்டவிழ்த் துவிட்டது. இதுவே 1983 ஆம் ஆண்டு இன ஒழிப்புக் கலவரம் ஆகும். இக்கலவரத்தில் திட்டமிட்ட முறையிலேயே சிறீலங்கா அரசாங் கம், சிறீலங்கா பாதுகாப்பு படைகள் என்பன பௌத்த பேரினவாதக் காடையர்களை ஈடுபடுத்தியது. சிறீலங்கா அரசாங்கம் தான் கைதுசெய்து, காவலில் வைத்திருந்த 53 தமிழ் விசாரணைக் கைதிகளின் உயிர் களையும், வெலிக்கடைச் சிறையில் வைத்தே பலிகொண்டது. இவற்றின் மூலம் சிறீலங்கா அரசாங்கம், “குடிமக்களுக்கான சர்வதேச சட்டவிதிகளை மீறி, தமிழர்களை ஆளும் உரிமை தனக்கு இல்லை என்பதை நிரூபித் துக் கொண்டது.

ஆகவே, ஆக்கிரமிப்பாளராகத் தன்னை வெளிப்படுத்திய சிறீலங்கா அரசு, இனசுத் திகரிப்பு, தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, தனது பாதுகாப்புப் படைகளின் கடமைகளுள் ஒன்றாக அவற்றைச் சேர்த்துக் கொண்டது. அன்று முதல் 22.7.1994வரை 50,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் மரணத்திற்கும், 5 இலட்சத்துக்கு மேற்பட்ட அகதிகளின் இடம்பெயர்வுக்கும், 3 இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளின் சர்வதேச வெளியேற்றத்திற்கும் சிறீலங்கா அரசின் நடவடிக்கைகள் காரணமாகி நிற்கின்றன. 1983 இல் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கை, மிக விரைவாக வளர்ச் சியடைந்து, இன்று தமிழீழமெங்கும் தனது கோரப்பற்களை மிக ஆழமாகப் பதித்துள்ளது. குறிப்பாக 1990 யூனில் தொடங்கிய, 2 ஆம் கட்ட ஈழப்போரை வென்றெடுப்பதற்காக சிறீலங்கா அரசு, சர்வதேசயுத்த விதிகளையும் மீறி, கொடிய நவீன ஆயுதங்களைப் பயன் படுத்தி, தமிழ் மக்களை ஈவிரக்கமற்ற முறையில் கொன்றொழித்துவருகின்றது. வான்வழித் தாக்குதல் மூலம் குண்டு களையும், எறிகணைகளையும் ஏவி, மக்களைக் கோரமாகக் கொல்வதோடு, சொத்துக்களையும் இழித்துவருகின்றது. மறுபுறம் இலங்கைத்தீவு முழுவதும் ஒரேதேசமாகவும், தான் ஆட்சிசெய்வதாகவும் போலியாகப் பேசிக்கொண்டு, வடக்கு - கிழக்கிற்கு மட்டும், பொருண்மியத் தடையையும் விதித்துள்ளது. பொருண்மியத் தடைமூலம், ஏற்படக்கூடிய எம் மக்களின் பட்டினிச்சாவிலும், சிறீலங்கா அரசு இன அழிப்புச் சம்பந்தமான அரசியல் இலாபம் தேடமுனைந்தது. ஆனால், எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகின்ற தலைமைத்துவத்தின், தீர்க்கதரிசனத்துடன் கூடிய பொருண்மிய மேல் பாடுகளினாலும், அதற்கு மக்கள் வழங்கிய ஒத்துழைப் பினாலும், சிறீலங்கா அரசின் பொருண் மியத்தடை படுதோல்வியைத் தழுவியுள்ளது. மாறாக, தமிழீழம் தன்காலில் நிற்கக்கூடிய சுயசார்பு உற்பத்தியை நோக்கி, தனியாராக நமிர்வதற்கும் வளர்வதற்கும் சிறீலங்காவின் பொருண்மியத்தடையும், ஆயுத இடக்கு முறையும் வழிசமைத்துள்ளன.

இந்த உண்மைகளை சர்வதேச உலகுக்கு எடுத்துக் கூற, தமிழ் மக்களின் அரசியல் யதார்த்தத்தைப் படம் பிடித்துக் காட்ட, தமிழீழ மக்களின் அரசுநோக்கிய அரசின் இருக்கை நிலையை விளக்கி, (21 ஆம் பக்கம்)




அமரர். திரு செல்லத்துரை செல்வரட்ணம் அவர்கள் இலண்டனில் இயற்கை எய்தியுள்ளார். பருத்தித்துறை மண்ணில் உதித்த அவருடைய வாழ்வின் பயணத்தில் ஒரு பெரிய தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான அர்பணிப்பின் கதை புதைந்துள்ளது.

அதை அவர் மீளாத்துயில் கொள்ளும் இந்த தருணத்தில் மீட்டுவது மிகபொருத்தமும் கடமையும் கூட.

எமது விடுதலைப் போராட்டம் காடுகளுக்குள்ளும் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டும் போராளிகளால் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியில் போராட்டத்தை தாங்கும் மடியாக இருந்து ஏராளம் குடும்பங்களில் செல்வரட்ணம் அவர்களின் குடும்பமும் ஒன்று.

அவருக்கு ஆறு பிள்ளைகள் இன்று இரண்டு பிள்ளைகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

நால்வர் போராட்ட பாதையில் ஒவ்வொரு காலப்பகுதியில் ஆகதியாகி விட்டார்கள். அவருடைய மூத்த மகன் போராளிகளும் மக்களும் அறிந்த முல்லைத்தீவு மண்ணுக்கு ஒரு காலத்தில் தளபதியாக இருந்த (திவாகர்) அவர்கள். நீண்ட காலமாக போராட்டத்தில் பயணித்த மூத்த போராளி. தலைமைக்கு நம்பிக்கையானவர். அவர் சுகயீனம் காரணமாக சாவடைந்தார். இவருடைய மகள் (சுதா) வன்னி மாங்குளம் போர்க்களத்திலே 1990 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்தார்.

இன்னொரு மகன் (சுதன்) தேச விரோதக்கும்பல்களால் 1989 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். இன்னொரு புதல்வர் (வாவா) விடுதலைப் போராட்டப் பணியில் கடற்பரப்பில் ஈடுபட்டிருந்த போது காணாமல் போயிருந்தார்.

இவ்வாறு இழப்புகளை துயர்களை சந்தித்தபோதும் தாய் மண்ணுக்காக தம்மை கொடுக்கத் தயங்காத பிள்ளை களை தந்த தந்தையாக இன்று எம்மை விட்டு பிரிந்திருக் கின்றார். இன்று தாய் நிலம் சிங்கள ஆக்கிரமிப்பால் முழுமையாக நிறைந்திருக்கின்றது. விடுதலை பெற்ற ஒரு நிலத்தில் வாழ வேண்டுமென்பதே இவரதும் இவரது பிள்ளைகளதும் கனவாக இருந்தது.

அந்தக்கனவுடனேயே அவருடைய ஆத்மா விடைபெற் றுள்ளது. நாட்டுப்பற்று மிகுந்த இனப்பற்று நிறைந்த இவருக்கு எமது ஆழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

விடுதலைப்போராட்டத்தில் அவருடைய ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தனித்தனி வரலாறு உண்டு. ஆதலால் இவர் வரலாறுகளின் தந்தையாக இருக்கின்றார். -புனிதபூமி-



# ராஜபக்ச கூட்டுறவு?


கோத்தபாய ராஜபக்ச
ஜனாதிபதி


கோத்தபாய ராஜபக்ச
அமைச்சரவை அமைச்சர்களுக்கான தலைவர்


கோத்தபாய ராஜபக்ச
பாதுகாப்பு அமைச்சர்


கோத்தபாய ராஜபக்ச
தொழிநுட்ப அமைச்சர்



மகிந்த ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
பிரதமர்


மகிந்த ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர்


மகிந்த ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர்


மகிந்த ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
உள்ளூர் அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்


சாமல் ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
நீர்ப்பாசனத்துறை அமைச்சர்


**சமால் ராஜபக்ச**
(ஜனாதிபதியின் சகோதரர்)
தேசியப் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ மற்றும் உள்விவகார இராஜாங்க அமைச்சர்


பசில் ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
நிதி அமைச்சர்


பசில் ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
ஜனாதிபதியின் விசேட தூதுவர்


பசில் ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கு கொறுபடபான ஜனாதிபதி செயலணி (தலைவர்)


பசில் ராஜபக்ச
(ஜனாதிபதியின் சகோதரர்)
காலநிலை மாற்றத்துக்கான நிலைத்துநிற்கும் தீர்வுடனான ஒரு பசுமையான இலங்கையை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணி


சஷீந்திரா ராஜபக்ச
(சமல் ராஜபக்சவின் மகன்)
சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு விநியோக ஒழுங்குபடுத்தல், நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெண்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு விதைகள் உற்பத்தி உயர்தொழிநுட்ப விவசாய இராஜாங்க அமைச்சர்


நாமல் ராஜபக்ச
(பிரதமரின் மகன்)
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்


நாமல் ராஜபக்ச
(பிரதமரின் மகன்)
டிஜிட்டல் மற்றும் நிறுவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்


நாமல் ராஜபக்ச
(பிரதமரின் மகன்)
"கம சமக பிலிசந்திர" (கிராமத்துடனான உரையாடல்) கிராமிய அபிவிருத்திக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர்


ஜோசித ராஜபக்ச
(பிரதமரின் மகன்)
பிரதமரின் பிரானதான அதிகாரி

நிபுண ரணவக்க
(ஜனாதிபதியின் மருமகன்)
மாத்தறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர்

நிபுண ரணவக்க
(ஜனாதிபதியின் மருமகன்)
சுற்றுலாத்துறை அமைச்சரவை ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்

நிபுண ரணவக்க
(ஜனாதிபதியின் மருமகன்)
பொதுமுறைப்பாடுகள் பற்றிய குழுவின் உறுப்பினர்

**திலக் வீரசிங்க**
(பிரதமரின் மகன் நமல் ராஜபக்சவின் மாமா)

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் சபை உறுப்பினர்

**டைறே டி லிவேற**
**(பிரதமரின் மகன யோகித ராஜபக்சவின் மாமி)**
விமானநிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் பணிப்பாளர்

யூலை 2021

**ஜனாதிபதி – கோட்டபாய ராஜபக்ச[1]**

இந்தப் பணியில் சீனாவினால் கட்டப்பட்ட ஒரு பாரிய உட்கட்டுமான செயற்திட்டமான புதிய கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் முதலீட்டு சபை ஆகியவற்றைக் கட்டுபபாட்டுக்குள் வைத்திருப்பதுடன். பாதுகாப்பு, போதைமருந்து, கோவிட், தடுப்புஊசி, கிழக்கு, பொருளாதாரம், கல்வி,காலநிலை மாற்றம், கனிப்பொருள் பிரித்தெடுத்தல் மற்றும் கிராமிய அபிவிருத்தி ஆகியவற்றை மேற்கொள்வதற்காக புதிதாக உருவாக்கப்பட்ட 10 ஜனாதிபதி செயலணிகளையும்[2] கோவிட் நிதியையும் தலைமை தாங்குகின்றார்.[3]

**அமைச்சரவை அமைச்சரிகளின் தலைவர் - கோட்டபாய ராஜபக்ச**
**பாதுகாப்பு அமைச்சர் - கோட்டபாய ராஜபக்ச[4]**

இந்தப் பணியில் இராணுவத்தைக் கட்டுப்படுத்துகின்றார் இது பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி , புலனாய்வு முகவர்கள் , எல்லைப் பாதுகாப்பு படை, இராணுவ பயிற்சி மற்றும் கல்வி அமைப்புக்கள் மற்றும் நிதி அமைச்சின் பயிற்சிகள் உள்ளடக்குகின்றது.

தொழிநுட்ப அமைச்சர் - கோட்டபாய ராஜபக்ச

இந்தப் பணியில் தொலைதொடர்புகள் மற்றும் தகவல் தொழிநுட்பம், இலங்கை ரெலிகொம், வெவ்வேறு விஞ்ஞான தொழிநுட்ப நிறுவனங்கள் மற்றும் ஆட்பதிவு திணைக்களத்தை கட்டுப்படுத்தும் பல்வேறு வகையான அமைப்புக்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.

**பிரதமர்- ஜனாதிபதியின் சகோதரர், மகிந்த ராஜபக்ச**

**பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் - மகிந்த ராஜபக்ச**

இந்த பணியில் தேசிய திட்டமிடல் திணைக்களம், சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபர திணைக்களம், கொள்கை ஆய்வு நிறுவனம், நிலையான அபிவிருத்தி சபை, கணக்காளர் நாயகம் அலுவலகம், மதிப்பீட்டு திணைக்களம், இலங்கை கணக்கு மற்றும் கணக்காய்வு, நியமமான கண்காணிப்பு சபை,பொதுச் சேவைகள் ஆணைக்குழு, நலன்புரி சலுகைகள் சபை, பொதுச் சேவை பரஸ்பர சேமிப்பு நிதி, புத்த சாசன நிதி, பௌத்த மறுமலர்ச்சி நிதி, மத்தி கலாச்சார நிதி ஆகியவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.

**புத்தசாசன , சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் - ஜனாதிபதியின் சகோதரர் , மகிந்த ராஜபக்ச**

இந்தப் பணியில் இலங்கையிலுள்ள பெரிய சமய அமைப்புக்கள், அருங்காட்சியகங்கள், ஆவணக்காப்பகங்கள் மற்றும் படக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துதல்.

**கிராமிய அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர் - ஜனாதிபதியின் சகோதரர் , மகிந்த ராஜபக்ச[5]**

இந்த பணியில் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை , அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்திச் திட்டம் ஆகியவற்றை அமுல்ப்படுத்துதல் அத்துடன் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்ட ரீதியான நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களை அமுலாக்குவதையும் உள்ளடக்குகின்றது.

**நிதி அமைச்சர் - ஜனாதிபதியின் சகோதரர், பசில் ராஜபக்ச**
**நிதி அமைச்சர் - பசில் ராஜபக்ச**

இந்தப் பணியானது திறைசேரி விவகாரங்கள், அரச வருமான முகாமைத்துவ விவகாரங்கள், வங்கி நிதி மற்றும் மூலதனச் சந்தைக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் மற்றும் நிதி முகாமைத்துவம் உட்பட 48 நிறுவனங்களை நிர்வகித்தல் அத்துடன் நிதி முகாமைத்துவம் மற்றும் நிறுவனங்களைக் கையாளுதல் முடிவுகட்டப்படுதல் அல்லது ஏனைய நிறுவனங்களுடன் ஒன்று சேர்க்கப்படுதல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.

இது வர்த்தகம் மற்றும் முதலீடு , பொது நிதி மற்றும் கணக்குகள்,கணக்காய்வு, வரிவிதிப்பு, சட்ட ரீதியான விவகாரங்கள், சுங்கம் மற்றும் வரிவிலக்கு, குலுக்கல் சீட்டு பரிசுகள் சபை, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு, மத்திய வங்கி, அனைத்து அரச வங்கிகள் மற்றும் காப்புறுதி அமைப்புக்கள் மற்றும் துணை நிறுவனங்கள் மற்றும் தொடர்புபட்ட நிறுவனங்கள், பாதுகாப்பு மற்றும் பரிமாற்று ஆணைக்குழு, ஏற்றுமதிக் கடன் காப்புறுதி, மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ( தனியார்துறை ஊழியர்கள் சமூக பாதுகாப்பு) உட்பட 14 நம்பிக்கை நிதியங்களையும் உள்ளடக்குகின்றது.

**ஜனாதிபதியின் விசேட தூதுவர் - ஜனாதிபதியின் சகோதரர் , பசில் ராஜபக்ச**

**பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்குப் பொறுப்பான ஜனாதிபதி செயலணி[6] - தலைவர்- ஜனாதிபதியின் சகோதரர் , பசில் ராஜபக்ச**

இந்தச் செயலணியானது ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றது அத்துடன் அதனுடைய உறுப்பினர்கள் முக்கிய அமைச்சுகளில் உள்ள அதிகாரமுள்ள சிவில் அதிகாரிகளாவர்[7]. அது அனைத்து அரசாங்க சேவையிலுமுள்ள அதிகாரிகளின் சேவைகளைப் பலவந்தமாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**காலநிலை மாற்றத்திற்கான நிலையான தீர்வுகளுடன் பசுமையான இலங்கையை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணி[8] – ஜனாதிபதியின் சகோதரர் - பசில் ராஜபக்ச**

இது செயற்திட்டங்களுக்காக சர்வதேச நிதி அமைப்புக்கள் மற்றும் தூதரகங்களிடமிருந்து நிதியினைப் பெற்றுக் கொள்ளமுடியும் அத்துடன் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றது.

**நீர்ப்பாசன அமைச்சர் - ஜனாதிபதியின் சகோதரர் - சாமல் ராஜபக்ச**

இது பெரிய அபிவிருத்தி திட்டங்களைக் கட்டுப்படுத்துவதை உள்ளடக்குகின்றது.

**தேசியப் பாதுகாப்பு அனர்த்த முகாமைத்துவம் மற்றும் உள் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் - ஜனாதிபதியின் சகோதரர் , சாமல் ராஜபக்ச**

இந்த அமைச்சானது அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் , குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம், தேசிய அனர்த்த முகாமைத்து சபை மற்றும் தேசிய முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதை உள்ளடக்குகின்றது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் - பிரதமரின் மகன் - நாமல் ராஜபக்ச**

விளையாட்டுகளுடன் தொடர்புபட்ட 7 நிறுவனங்கள் மற்றும் இளையோர் அமைப்புக்களை உள்ளடக்குகின்றது.

**டிஜிட்டல் மற்றும் நிறுவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்** – பிரதமரின் மகன் நாமல் ராஜபக்ச

இது விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப நிறுவனங்கள், தகவல் பூங்காக்கள், உயிரியல் , நுண் தொழிநுட்பம் மற்றும் கைத்தொழில் தொழிநுட்பத்தை கட்டுப்படுத்துவதை உள்ளடக்குகின்றது.

**“கம சமக பிலிசண்டாற” ( கிராமத்துடனான உரையாடல்) கிராமிய அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் , பிரதமரின் மகள் , நாமல் ராஜபக்ச**

கிராம மட்டத்திலுள்ள கிட்டத்தட்ட அனைத்து அரசாங்க நிறுவனங்களையும் மேற்பார்வை செய்யும் ஒரு அதிகாரம் மிக்க அமைப்பு அத்துடன் அரசாங்க சேவையாளர் அல்லது ஒரு அமைச்சு, திணைக்கள, கூட்டுத்தாபன அல்லது இது போன்ற நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரி அவருக்கென செயலணியினால் ஒதுக்கப்பட்ட கடமைகளை தாமதித்தால் அல்லது புறக்கணித்தால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அதனை ஜனாதிபதிக்கு அறிவிக்க முடியும். கம சமக பிலிசண்டார என்பது ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும் இதன் போது ஜனாதிபதி கிராமங்களுக்குச் செல்வதுடன் உள்ளூர் அதிகாரிகளைக் கடந்து பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு நேரடியாகப் பணிப்புவிடுக்கிறார். பாலம் கட்டுதல், பாடசாலை கட்டுதல் போன்ற பணிப்புரைகளில் பல இராணுவத்தால் நிறைவேற்றப்படுகின்றது இது பாதுகாப்பு படைகள் பற்றி ஒரு நல்ல கருத்தை உருவாக்கும்.

**சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு விநியோக ஒழுங்குபடுத்தல், நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெண்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு விதைகள் உற்பத்தி உயர்தொழிநுட்ப விவசாய இராஜாங்க அமைச்சர் -** சஷீந்திரா ராஜபக்ச ( சாமல் ராஜபக்சவின் மகன்)

மாத்தறை மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் - ஜனாதிபதியின் மருமகன், நிபுண ரணவக்க (மருமகன்)[9]

உறுப்பினர், **சுற்றுலாத்துறை அமைச்சரவை ஆலோசனைக் குழுவின்- ஜ**னாதிபதியின் மருமகன், நிபுண ரணவக்க

உறுப்பினர், பொதுமுறைப்பாடுகள் பற்றிய குழு - **ஜனாதிபதியின்** மருமகன், நிபுண ரணவக்க

பிரதமரின் பிரானதான அதிகாரி – பிரதமரின் மகன் , ஜோசித ராஜபக்ச

சபை உறுப்பினர் , **இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை – பிரதமரின் மகன் நாமல் ராஜபக்சசின் மாமா , திலக் வீரசிங்க[10]**

பணிப்பாளர், விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துக் நிறுவனம் - பிரதமரின் மகன் றோகித ராஜபக்சவின் மாமி - **டைறே டி லிவேற[11]**

1 https://www.presidentsoﬃce.gov.lk/index.php/2020/11/26/ministry-of-technology-comes-under-presidents-purview/ http://documents.gov.lk/ﬁles/egz/2020/11/2202-25_E.pdf

2 1. Presidential Task Force to study and provide instructions on measures to be taken by all Armed Forces to prevent Corona virus infection among Members of the Tri-Forces; NOTE: amended to include ‘those addicted to drugs now under rehabilitation as well as inmates of the Prisons’.
2. Presidential Task Force to build a Secure Country, Disciplined, Virtuous and Lawful Society.
3. Covid-19 Ministerial Task Force.
4. Presidential Task Force for Archaeological Heritage Management in the Eastern Province.
5. Presidential Task Force on Sri Lanka’s Education Affairs.
6. Presidential Task Force for Economic Revival and Poverty Alleviation.
7. Presidential Task Force for “Gama Samaga Pilisandara” (Dialogue with the Village) rural development.
8. Presidential Task Force for the creation of a Green Sri Lanka with sustainable Solutions for climate Change.
9. Presidential Task Force for to make study of the exploitation of Geological Resources for Development priorities and self-employment and to meet smallish economic livelihood needs of those engaged in traditional vocations and the sources and methodologies of extraction of such resources.
10. Presidential Task Force for National Deployment and Vaccination plan for COVID-19 Vaccine.

3 https://covid19.gov.lk/donations.html

4 All institutions are listed according to Gazette notification of 06 October 2020 unless noted otherwise.

5 The following institutions come under the state ministry, not the ministry.
1. Urban Development Authority 2. Sri Lanka Land Reclamation Development Corporation and their subsidiaries and related institutions 3. Urban Settlement Development Authority 4. Condominium Management Authority 5. Marine Environment Protection Authority 6. Department of Coast Conservation and Coastal Resource Management 7. Selendiva Investments Limited

6 https://covid19.gov.lk/news/economy/president-appoints-presidential-task-force-for-economic-revival-and-poverty-elevation.html

7 The Secretary to the Prime Minister & Secretaries to the Ministries of Finance, Economy and Policy Development, Roads and Highways, Public Administration, Home Affairs, Provincial Councils & Local Government, Plantation Industries and Export Agriculture, Industries and Supply Chain Management, Power & Energy, Women & Child Affairs and Social Security, Mahaweli, Agriculture, Irrigation and Rural Development, Urban Development, Water Supply and Housing Facilities, Defence, Internal Trade, Food Security and Consumer Welfare, Foreign Relations.

8 https://www.presidentsoﬃce.gov.lk/index.php/2021/05/10/presidential-task-force-for-a-green-socio-economy/

9 https://www.miningjournal.net/news/international-news-apwire/2020/08/rajapaksa-sworn-in-as-pm/

10 https://www.sltda.gov.lk/en/about-us

11 https://twitter.com/deirdrede/status/1139403792678453249 https://twitter.com/DeirdreDe/status/1167454618168594433

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

## கனத்த நினைவு சுமந்து 38 ஆண்டுகள்

# யூலைப் படுகொலை



தங்கத்துரை



குட்டிமணி



ஜெகன்

வெலிக்கடைச் சிறையில் இனவெறியின் கோரத் தாக்குதலுக்கு நெஞ்சுகொடுத்து, மண்ணில் வீரவிதையாகிவிட்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், நடேசதாசன், தேவன், சிவபாதம் மாஸ்ரர், சிறிகுமார் ஆகிய மாவீரர்களுக்கு

## வீர வணக்கம் செலுத்துகின்றோம்.

## கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன...

தாரது கொதிக்கும் தட்டினில் தமிழனைக்...
கோர வெறியுடன் கொன்றது சிங்களம்!
பாரதிர்ந்திட கத்திய மங்கையைச்
சோரவே செய்தனர் சிங்களக் காடையர்!
மண்ணினைப் பார்ப்பேன் மறையுமுன் என்றவன்
கண்ணினைக் கழற்றிக் காலால் மிதித்தனர்!
என்னத்தைச் செய்வோம் என்ற தமிழினம்
கன்னத்தில் கைவைத்துக் காத்துக் கிடந்தது!
கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன!
வீர விதையொன்று இம்மண்ணில் நீண்டு வளர்ந்தது!
கோரவெறியினைக் கொண்ட சிங்ளம் நின்று
திகைத்தது!
வெறுப்புடன் பார்த்த தமிழனைச் சிங்களம்
வெறித்துப் பார்த்தது,